# வணிகவாணி

# VANIKA VAANI




1993

வணிக மாணவ மன்றம்,

யா / இராமநாதன் கல்லூரி

சுன்னாகம்.

# வணிக வாணி

# VANIKA VAANI

1993

**வணிக மாணவ மன்றம்**

யாழ். இராமநாதன் கல்லூரி,

சுன்னாகம்.

# எங்கள் அதிபர்



திருமதி ஆ. சிவஞானசுந்தரம்.
B. A. Hons ( Cey. ), Dip. in Ed. ( Cey. ),
S. L. P. S. ( Gr I )

# மாணவ உலகம் பயன் பெறுக

தமிழ்கூறும் நல்லுலகத்தின் வணிக வரலாறு மிகப்பழமை உடையது. இந்தியப் பெருங்கடலில் கலஞ்செலுத்தி எகிப்து, பாபிலோன் முதலிய நாகரிகமுயர்ந்த நாடுகளோடு பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழர் பண்டம் மாற்றி வந்தனர். வணிகத்தை ஒரு கலையாகவே போற்றி வந்தனர்.

சரித்திர பாரம்பரியத்தோடு உலகளாவி நிற்கும் வணிகத்துறை இன்று மாணவர்கள் விரும்பிக்கற்கும் பாடநெறிகளிலொன்றாகத் திகழ்கிறது. இப்பாட நெறியைக் கற்கும் நமது கல்லூரி மாணவிகள் வணிகத்துறையில் தமக்கும் பிறர்க்கும் பயன்படும் வகையில் நல்ல கட்டுரைகளை எழுதியும், இத்துறையில் வல்லுநர்களது ஆக்கங்களை வேண்டிப் பெற்றும் 'வணிக வாணி' என்னும் மகுடந்தாங்கிய சஞ்சிகையை வெளியிட்டுள்ளார்கள்.

வணிகத்துறை சார்ந்த ஆசிரியர்களினதும், மாணவிகளினதும் அரும்பெரும் முயற்சி காரணமாக இச்சஞ்சிகை பொலிவுடன் மலர்ந்திருக்கிறது.

இச்சஞ்சிகை நமது மாணவியரின் முதன் முயற்சி. இச்சஞ்சிகை வருடாவருடம் தொடர்ந்து வெளிவந்து மாணவ உலகிற்குப் பயன்பட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

'வணிகவாணி'க்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

திருமதி ஆ. சிவஞானசுந்தரம்.
அதிபர்.

யாழ் / இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

# உங்கள் ஆற்றல் ஏற்றமுறுக



இரா. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளர் வடமாநிலம்,
யாழ்ப்பாணம்.

''தேடு கல்வியிலாததோர் ஊரைத்தீயுனுக்கிரையாக மடுத்தல்''
கேடு தீர்க்கும் அமுதமென்னன்னை கேண்மை கொள்ள வழி

எனக் கண்ட பாரதியின் சமகாலத்தில் இராமநாதன் வள்ளலால் வேணுவாவோடு கால்கோள் செய்யப்பட்டுச் சைவமும் தமிழும் சேர்ந்து கொழிக்கும் இராமநாதன் கல்லூரி எம் மண்ணின் பெருஞ் செல்வமே.

இக்கல்லூரியின் வணிக மாணவர் மன்றம் ''வணிகவாணி'' எனும் தாளாண்மைச் சின்னத்தை எமது கரங்களில் மலர விடுவது கண்டு களிப்படைகிறேன். மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்குதல் போல் உங்கள் ஆற்றல் ஏற்றமுற என் நல்லாசிகள். பல்கலையும் கற்று பாங்காய் வீங்குபுகழ் அடைய நிலா வேணியனை இறைஞ்சுகின்றேன்! ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'' என்ற பொது மறை உங்கள் வாழ்வின் ஒளி விளக்காகட்டும். வீரமும் தீரமும் வேண்டி நிற்கும் சம காலத்தில் சர்வகாரிய சித்தியும் பெறும் பெற்றியராய் ''நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம் நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே'' என்ற பாரதியின் உத்வேகக் குரலோடு ஒன்றித்து உயர் வாழ்வு பெறுக.

வங்கம் செலுத்தி வளமார் கடல் தாண்டி எங்கும் வணிகம் இனிதே செயற்படுத்தி வாழ்ந்த வண்டமிழன் வாழ்வு புதுப்பொலிவு பெற வணிகத் துறை கல்விப் புலத்தில் ஒளிகாலுவதாக, மாணவச் செல்வங்கள் பயனுற்றுப் பெருமை சேர்ப்பார்களாக. நிறையோடு நீனிலத்திதே மாணவியர் வையகம் பயனுற வாழ்தல் கண்டார் ''பெண்ணிற் பெருந்தக்க'' யாவுள எனப் பேசாதிருப்பரோ.

பிரதேசக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# கல்வி வளமுற வழிசெய்க



**இ. சிவானந்தன்**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்.

யா/இராமநாதன் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினர் ''வணிகவாணி'' என்ற கல்விச் சஞ்சிகையினை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எமது பிரதேசத்தில் வர்த்தகத்துறைக் கல்வி மாணவர்களிடையே பிரபல்யமடைந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் இவ்வகை சஞ்சிகைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். வர்த்தகத்துறை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை வளமாக்கும் நோக்கத்துடன் இச்சஞ்சிகையை வெளியிட முன்வந்த கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களுக்கு உறுதுணையாக நின்று இக் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் அதிபரினதும் ஆசிரியர்களினதும் பங்களிப்பையும் நாம் மறத்தலாகாது.

இச்சஞ்சிகையில் பல ஆக்க பூர்வமான கட்டுரைகள் வெளிவருவது மாணவர்களின் வர்த்தகக் கல்வியை மேலும் சிறப்புற செய்யும் என நம்புகிறேன். அபிவிருத்தி அடைந்துவரும் எந்தவொரு நாட்டினதும் தேவைகள் அந்நாட்டின் கல்வித்துறையாலும் ஈடுசெய்யப்பட வேண்டும். என்பதற்கு அமைய இன்று வர்த்தகக் கல்வித்துறை முக்கியத்துவம் பெற்று விளங்குவது தவிர்க்க முடியாத ஒன்று. இருப்பினும் இவ்வர்த்தகக் கல்வித்துறையைத் தீர்க்கதரிசனத்தோடு வழிப்படுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு கல்வித்துறை சார்ந்த பெரியோருக்கு உண்டு என்பதை நாம் மறத்தலாகாது.

இவ்வகை சஞ்சிகைகள் தொடர்ந்தும் வெளிவந்து எமது மாணவர்களின் கல்வியை வளமாக்க வழி செய்ய வேண்டும் என்று ஆசி கூறி வாழ்த்துகிறேன்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
மருதனார்மடம்.
28 - 09 - 1993.

# மாணவர் தேடலைப் பூர்த்தி செய்க



சி. சிவராசா
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
வர்த்தகம்.

வளர்ந்துவரும் வணிகத்துறைக்கு வளமூட்ட யா/இராமநாதன் கல்லூரி வணிக மன்றத்தினர் வணிகவாணி என்ற கன்னி இதழினை வெளியிடுவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். க.பொ.த. உயர்தர வர்த்தகப் பகுதிக்கு பல்கலைக்கழகம் புகுவதற்கான வெட்டுப்புள்ளி வேகமாக அதிகரித்துவரும் இவ் வேளையில் வளமான வர்த்தகக் கல்விக்கு மேலும் உரம் ஊட்டவும், மாற்றமுறும் சமகால விடயங்களை அறிந்து கொள்ளவும், மாணவர் படைப்பாற்றலை வளர்த்தெடுக்கவும் இவ்வணிக இதழ் வெளிவருவது போற்றுவதற்குரியதாகும்.

இம்மலரை வெளியிடும் பணியில் அயராது பாடுபட்ட மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர் அனைவரையும் பாராட்டுவதுடன் ஆண்டுதோறும் இம்மலர் மலர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

# வணிகத்துறை வளம்பெறுக

எமது கல்லூரியின் வணிக மாணவ மன்றம் ஆனது முதல் தடவையாக ''வணிக வாணி'' என்ற சஞ்சிகையை வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. சைவமும் தமிழும் மறுமலர்ச்சி காண்பதற்கு பெரும் பங்காற்றிய இராமநாதன் கல்லூரியில் வணிக மாணவ மன்றமும் தனது பணியை செவ்வனவே ஆரம்பித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

எமது கல்லூரியில் 1976 ஆம் ஆண்டு வர்த்தகக் கல்வி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வாண்டிலேயே வணிக மாணவ மன்றம் ஆரம்பிக்கப்பட்டு, கன்னி முயற்சியாக சஞ்சிகை வெளிவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எமது சஞ்சிகையினை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிப்படுத்திய அதிபரின் செயல்திறனை பாராட்டுவதோடு, இதனை வெளியிடுவதற்கு மிகுந்த ஊக்கத்துடன் உழைத்த மன்ற பெரும் பொருளாளர், சகஆசிரியர்கள், மெய்வருத்தம் பாராது மிகுந்த உற்சாகத்துடன் செயற்பட்ட வணிகத்துறை மாணவிகளின் பணிகள் என்றும் நினைவுகூரத்தக்கவை. இம் முயற்சி தொடரவேண்டும் எனவும், கல்லூரியின் வணிகத்துறை வளம்பெற வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

நன்றி

கா. சாந்திநாதன் B.B.A. (Hons.)
மன்றப் பொறுப்பாசிரியர்.

யாழ். இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

# வணிக பரம்பரை பிரகாசிக்க

இன்று யாழ். மாவட்ட பாடசாலைகளிலே வர்த்தகக் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. அவ்வாறே வர்த்தக பாடங்களின் கல்வியும் விரிவுபட்டுச் செல்கின்றது. தற்கால சூழ்நிலையிலே புதிய விடயங்களை அறிந்துகொள்வது சிரமமாக உள்ளது. இச் சஞ்சிகையை வெளியிடுவதன் மூலம் புதிய விடயங்களை அறிந்துகொள்ள முடியும். இதனால்தான் யாழ். மாவட்டப் பாடசாலைகளிலே சஞ்சிகை வெளியீடுகள் சீரும் சிறப்பும் பெற்றுள்ளன. இத் தேவைகளின் காரணமே வர்த்தக சஞ்சிகையின் வெளியீடாகும்.

இவ்வருடம் சஞ்சிகைக்கு கால்கோள் நாட்டி வெற்றி கண்டுள்ளோம். இது அணையா விளக்காக என்றென்றும் பிரகாசிக்கட்டும்.

மன்றத்தின் பணிகள் சிறப்புற வழிநடாத்தும் பொறுப்பாசிரியர், வர்த்தக ஆசிரியர் உள்ளத்தில் உயர் இடத்தை பெற்றோரே.

எமது மன்றம் திறமையாக செயற்பட தலைமைத்துவத்திற்கு ஊக்கம் தரும் அதிபர் முழுமையாக ஆதரவு தருகிறார்.

அடுத்து வரும் வணிக பரம்பரை ஒளி குன்றாது சுடர் விட்டுப் பிரகாசிக்க ஆவன செய்வீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

செல்வி பொ. ஆனந்தவல்லி
தலைவர்,
வணிக மாணவ மன்றம்.

யாழ். இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

# இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து

தொடரும் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் எங்கள் வணிக மாணவர் மன்றத்தின் முதல் ஏடாக வணிகவாணி வெளிவருகின்றாள்.

எமது பாடசாலையில் பல ஆண்டுகளாக வர்த்தகப்பிரிவு காணப் பட்ட போதிலும் 93 ஆம் ஆண்டிலேயே வணிக மாணவர் மன்றம் உரு வாக்கப்பட்டது. இம்மன்றத்தின் பிரதான நோக்கம் வர்த்தக கல்வியை மேம்படுத்தும் பொருட்டு வர்த்தக சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதாகும்.

ஆனால் எமது மன்றத்திடம் ஆரம்பநிதி ஏதும் இருக்கவில்லை. எனி னும் எமது அதிபர், வர்த்தக ஆசிரியர்களின் ஊக்குவிப்புக்களாலும், வர்த் தக மாணவரின் தளராத முயற்சியாலுமே வணிகவாணி வெளியிடப்படு கின்றாள்.

இவ்வாறு இதனைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் எமது கல் லூரி வர்த்தக மாணவர் ஒன்றியம் ஆண்டிற்கு ஒரு சஞ்சிகையை வெளி யிட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

செல்வி மு. கலைச்செல்வி
செல்வி சி. கலைச்செல்வி

# வணிக மாணவர் மன்றம்
# செயற்குழு 93 / 94

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்;

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திருமதி ஆ. சிவஞானசுந்தரம் |
| பொறுப்பாசிரியர் | : | திரு. கா. சாந்திநாதன் |
| பெரும்பொருளாளர் | : | திருமதி ப. பத்மநாதன் |
| தலைவர் | : | ஆனந்தவல்லி பொன்னுத்துரை |
| உபதலைவர் | : | கலைந்தினி பஞ்சலிங்கம் |
| செயலாளர் | : | தமிழரசி இலகுநாதன் |
| உபசெயலாளர் | : | தர்சினி பாலச்சந்திரன் |
| பொருளாளர் | : | ஆனந்தி குலவீரசிங்கம் |
| இதழாசிரியர்கள் | : | கலைச்செல்வி முருகேசு |
| | : | கலைச்செல்வி சிவஞானசுந்தரம் |
| விளம்பர பொறுப்பாளர் | : | மதிலேகா சந்திரசேகரம்பிள்ளை |
| ,, | : | கலையரசி திருநாவுக்கரசு |
| கணக்காய்வாளர் | : | பராசக்தி கந்தலிங்கம் |

நிர்வாகக்குழு வகுப்புப் பிரதிநிதிகள்

சுதர்சினி சண்முகநாதன்
விஜிதா கந்தையா
சிவமதி சிவபாலன்
சுமாலினி கண்ணுத்துரை
பாஜினி சுந்தரலிங்கம்
ஜீவா அழகரட்னம்

# வணிக மாணவ மன்றம்
## செயற்குழு 1993 / 94



அமர்ந்திருப்பவர்கள் (இடம் → வலம்):-

திருமதி ப. பத்மநாதன் (பெரும் பொருளாளர்), திருமதி சோ. கைலாசநாதன் (பிரதி அதிபர்), பொ. ஆனந்தவல்லி (தலைவர்), திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (அதிபர் - காப்பாளர்), இ தமிழரசி (செயலாளர்), திருமதி ப. பரராஜசிங்கம் (மேலதிக அதிபர்), திரு. கா. சாந்திநாதன் (பொறுப்பாசிரியர்).

நிற்பவர்கள் (இடம் → வலம்):-

மு. கலைச்செல்வி (இதழாசிரியர்), ச. மதிலேகா (விளம்பரப் பொறுப்பாளர்), சி. கலைச்செல்வி (இதழாசிரியர்), கு. ஆனந்தி (பொருளாளர்), தி. கலையரசி (விளம்பரப் பொறுப்பாளர்), ப. கலைந்தினி (உபதலைவர்), க. பராசக்தி (கணக்காய்வாளர்).

வருகை தராதவர்:-

பா. தர்சினி (உப செயலாளர்).

# அண்மைக்கால வங்கித் தொழிற்பாடுகள்

வே. ஐயம்பெருமாள்
உதவிமுகாமையாளர், 2ஆம் கிளை,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

**1977 ஆம்** ஆண்டின் பிற்பகுதியில், அக்காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் தாராள பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலிப்பாகவும், அதன் பரந்த நோக்கங்களை இலக்காகவும் கொண்டு வங்கித் தொழிலானது விரிவடையவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இக்காலப்பகுதியில் ஏறக்குறைய வங்கித் துறையின் தொழிற்பாட்டின் பெரும் வீதமானவற்றை உள்ளூர் வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவையே மேற்கொண்டன. தாராள பொருளாதார கொள்கை, வங்கித் தொழிலில் போட்டியை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டு வங்கிகள் இலங்கையில் தமது கிளைகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டன. 1977 இன் பின்னர் 20 வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன. இத்தொகை 1991 ஆனி மாதமளவில் 18 ஆக குறைவடைந்தது.

பொருளாதார வளர்ச்சித் தேவைக்கான வங்கித் தொழிற்பாடுகள் விரிவடைய வேண்டியதுடன், வெளிநாட்டு வங்கிகளுடன் கடும் போட்டியை உள்ளூர் வங்கிகள் எதிர்நோக்கின. இப் பின்னணியில் வங்கிகளின் செயற்பாடு ரீதியான வளர்ச்சியை அவதானிக்க முடிந்தது.

1) வர்த்தக வங்கிகள் — Commercial Banks

2) சேமிப்பு வங்கிகள் — Savings Banks

3) அபிவிருத்தி வங்கிகள் — Development Banks

4) வாணிப வங்கிகள் — Merchant Banks

வர்த்தக வங்கிகள் எனும்போது வாடிக்கையாளர்களிடமிருந்தோ, பொது மக்களிடமிருந்தோ நடைமுறைக்கணக்கிற்கும், சேமிப்பு, காலவைப்புக்களுக்கும் பணத்தை ஏற்கும் வங்கிகளைக் குறிப்பிடலாம். இதில் நடைமுறைக் கணக்கு வைப்புக்களுக்கு வட்டி வழங்கப்படுவதில்லை. ஏனைய வைப்புக்களுக்கு வட்டி வழங்கப்படும் உ+ம்: (இலங்கை வங்கி).

சேமிப்பு வங்கி எனும்போது பொது மக்களிடம் இருந்து சேமிப்பு அல்லது நிலையான வைப்புக்களுக்காக பணத்தை ஏற்கும் நிறுவனத்தைக் குறிப்பிடலாம். (உ+ம்: 1972 ல் உருவாக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் ஒரே ஒரு சேமிப்பு வங்கியான தேசிய சேமிப்பு வங்கி).

அபிவிருத்தி வங்கி எனும்போது பொருளாதார அபிவிருத்தி நோக்கத்திற்காக குறுங்கால - நீண்டகால நிதித்தேவைகளை வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். இலங்கையில் முதலீடு செய்வதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு நிதிவளங்களைத் திரட்டும் பொறுப்பு இவற்றிற்கு உண்டு. இலங்கையில் உள்ள அபிவிருத்தி வங்கிகள் பின்வருவனவாகும்.

1) இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனம் - (Development Finance Corporation of Ceylon)

2) அரச அடைமான முதலீட்டு வங்கி- (State Mortgage and Investment Bank)

3) இலங்கைத்தேசிய அபிவிருத்தி வங்கி- (National Development Bank of Sri Lanka)

வணிக வங்கி அல்லது மேர்ச்ஷன்ற் வங்கி எனும்போது முதலீடு செய்பவர்களுக்கு தேவையான முகாமைத்துவம், முகாமைத்துவ ஆலோசனை, நிதியீட்டு ஆலோசனை போன்ற நிபுணத்துவ சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அத்துடன் பொதுக் கம்பனிப் பங்குகள் வழங்கல், நிதி ஒழுங்கு செய்தல், கம்பனிகளைப் பொறுப்பேற்றல், இணைத்தல் போன்றனவும் அடங்கும். தற்போது இலங்கையில் உள்ள வாணிப வங்கிகள் பின்வருவனவாகும்.

1) இலங்கை மேர்ச்ஷன்ற் வங்கி - (Merchant Bank of Sri Lanka Ltd)

2) மக்கள் மேர்ச்ஷன்ற் வங்கி - (Peoples Merchant Bank Ltd)

3) வர்த்தக மேர்ச்ஷன்ற் வங்கி - (Mercantile Merchant Bank Ltd)

வர்த்தக வங்கிகளினது தொழிற்பாடுகள் இக்காலப் பகுதியில் குறிப்பிடத்தக்கதான விரிவடைதலை எய்தின. மரபுரீதியாக வர்த்தக வங்கிகள் வைப்புக்களை ஏற்று பின்னர் கடன்களாக வழங்கி செயற்பட்டன. ஆனால் 1977 இன் பின்னர் ஏற்பட்ட போட்டி நிலையால் பல்வேறு புதிய கவர்ச்சிகரமான வைப்புத்திட்டங்கள் வங்கிகளினால் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வகையில் இலங்கை வங்கி- காப்புறுதிச் சேமிப்புக் கணக்கு, சேமிப்புச் சான்றிதழ், சிறுவர் சேமிப்புக் கணக்கு, மகளிர் பொற் கணக்கு போன்ற திட்டங்களை முன்வைத்தது.

மரபுரீதியான வங்கிச்சேவைகளான நிலையியல் கட்டளை, தபால் மாற்று, தந்தி மாற்று, வங்கி உண்டியல், கொடுப்பனவுக் கட்டளை, காசோலை, உண்டியல் போன்றனவற்றை தீர்வு செய்தல் போன்றவற்றை விட, வங்கிகள் தமது எதிர்கால வெற்றிக்கு சர்வதேச வங்கியியலின் அபிவிருத்தி நிலைக்குச் சமமான நிலையில் தம்மை வைத்திருக்க பன்முகப்பட்ட தொழிற்பாடுகளை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டன. அதாவது சர்வதேச வங்கிச் சேவைகள், கணனி மயப்படுத்தப்பட்ட வங்கிச்சேவைகள், காசோலை உத்தரவாத அட்டை, கடன் அட்டை, இலத்திரனியல் பணம் கொடுக்கும் யந்திர உபயோகம், ஆய்வுச்சேவைகள், சர்வதேச ரீதியான சந்தைகளை அடையாளம் காண்பதற்கான உதவிகள், கூட்டுக்கடனளிப்பு, காப்புறுதி சேவைகள், கணனி இணைப்புத் தொடர்பு சேவைகள் போன்றனவற்றைக் கூறலாம்.

இவ்வாறான சேவைகளை வழங்குவதற்காக வங்கிக்கிளைகள் யாவும் நவீன மயப்படுத்தி, புதிய தொழில்நுட்ப அடிப்படையிலான கணனிகள், நவீன இலத்திரனியல் கருவிகள் என்பன பொருத்தப்பட்டு வருகின்றன. தற்போது இவை யாவும் தலைநகரத்தையும் அதன் அண்மிய பகுதிகளையும் கொண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட சில சேவைகளைப் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

### பண அட்டை அல்லது தன்னியக்க ரெலர் பொறி அட்டை
### Teller Card or Automatic Teller Machine Card

வங்கிகளில் கணனி தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வங்கிகள் இலத்திரனியல் வங்கியியல் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கக் கூடியதாக அமைந்தது. இந்த வகையில் வங்கிகளின் வழக்கமான வேலை நேரங்களுக்குப் புறம்பாக வங்கி வாடிக்கையாளர்கள் தமது வங்கிக் கணக்குகளில் இருந்து பணம் மீளப்பெற வசதியாக வங்கிக்கிளைகளில்

தன்னியக்க ரெலர் பொறிகளை அமைத்துப் பணம்பெற ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொறியை இயக்குவதன் தேவைக்காக வாடிக்கையாளர்களுக்கு விசேட குறி களுடன் அமைந்த பிளாஸ்ரிக் அட்டை (Plastic card) வழங்கப்பட்டன. இவ் அட்டையை உபயோகிப்பதன் மூலம் வாடிக்கையாளர் தன்னியக்க ரெலர் பொறியில் இருந்து தமது பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் இவ் அட்டையை உடன் பணம் (Immediate Cash), விரைவு பணம் (Fast Cash), பிளாஸ்ரிக் பணம் (Plastic Money) போன்ற பதங்களால் வர்ணிக்கின்றார்கள்.

இலங்கை வர்த்தக வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ள பண அட்டைகளின் விபரங்கள் பின்வருவனவாகும்.

(1) இலங்கை வங்கி — தன்னியக்க ரெலர் பொறி அட்டை (A.T.M Card — Automatic Teller Machine Card)

(2) மக்கள் வங்கி — மக்கள் இலத்திரனியல் ரெலர் அட்டை (P.E.T Card — People Electronic Teller Card)

(3) ஹொங்கொங் அன்ட் சங்காய் வங்கி — Hongkong and Shanghai Bank இலத்திரனியல் ரெலர் அட்டை (E.T.C Card)

(4) ஸ்ராண்டர்ட் சாட்டர்ட் வங்கி — (Standard Chartered Bank) — பண இணைப்பு அட்டை (Money link Card)

(5) சம்பத் வங்கி — (Sampath Bank Ltd.) — சம்பத் இலத்திரனியல் ரெலர் அட்டை. (S.E.T — Sampath Electronic Teller Card)

(6) இலங்கை வர்த்தக வங்கி — (Commercial Bank of Ceylon Ltd) — வர்த்தக தன்னியக்க ரெலர் அட்டை (C.A.T — Commercial Automatic Teller Card)

(7) ஹற்றன் நஷனல் வங்கி — Hatton National Bank Ltd.) — காசுத் தொடர்பு அட்டை (Cash Line Card)

## கடன் அட்டை
(Credit Card)

வர்த்தக வங்கிகளினாலும், மற்றும் நிறுவனங்களினாலும் தமது நம்பிக்கையான வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் ஒருவகை பிளாஸ்ரிக் அட்டை இதுவாகும். இவ்வட்டையைப் பயன்படுத்தி வங்கியினால் அல்லது நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது வர்த்தக ஸ்தாபனங்களில் பொருட்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ் அட்டையை வைத்திருப்பவர் வங்கி/நிறுவனத்தின் முன்னேற்பாட்டுடன் ஒரு குறிக்கப்பட்ட தொகை எல்லை வரை கொள்வனவு செய்ய முடியும். இத் தொகையை கடன் அட்டை வைத்திருப்பவர் வங்கிக்கே நேரடியாக குறிப்பிட்ட காலவரைக்குள் செலுத்துவார். பொருட்கள், சேவைகளை வழங்கும் நிறுவனம்/வர்த்தக ஸ்தாபனம் தமக்கு உரிய தொகையை விரும்பிய நாளில் வங்கியிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆகவே இவ் அட்டையை வைத்திருப்பவர் பணத்தைக் கொண்டு செல்லத் தேவையில்லை. காசோலை கொடுக்கவும் தேவையில்லை. இந்த அட்டையைப் பயன்படுத்தி தன்னியக்க ரெலர் பொறியிலிருந்து குறிப்பிட்ட அளவு பணம் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வட்டையை உத்தரவாதக் காசோலை அட்டையாகவும் பயன்படுத்த முடியும்.

இலங்கையில் உள்ள தேசிய வங்கிகளில் இலங்கை வங்கியின் கடன் அட்டைச் சேவை சர்வதேச 'விசா' வங்கிச் சேவைகள்

சங்கத்துடன் (Visa International Bank Service Association — VISA) பதிவு செய்யப்பட்டதாகும். இது 'சீ பாங் விசா' அட்டை என அழைக்கப்படும். இதில் நான்குவகையான கடன் அட்டைகள் உள்ளன.

(1) தங்க அட்டை — (Gold Card)

(2) சில்வர் அட்டை — (Silver Card or Classic Card)

(3) வியாபார அட்டை — Bussines Card)

(4) சர்வதேச அட்டை — (International Card)

வெவ்வேறு வகையான வருமான மட்டம், தொழில், உபயோகிக்கும் இடம் என்பனவற்றைப் பொறுத்து இவற்றின் பெயர்களும் அவற்றினைப் பயன்படுத்திப் பெறக்கூடிய பொருட்கள் / சேவைகளின் பெறுமதி எல்லை வேறுபடும். இலங்கையில் உள்ள ஏனைய வங்கி நிறுவனங்களில் வழங்கப்பட்ட கடன் அட்டைகளின் விபரம் சில பின்வருமாறு:

| வங்கி / நிறுவனம் | கடன் அட்டை |
|---|---|
| 1) கோல்டன் நிறுவனம் | 1) கோல்டன் கீ அட்டை Golden Key Card |
| | 2) கோல்டன் அட்டை Golden Card |
| 2) சம்பத் வங்கி | 1) மாஸ்ரர் அட்டை Master Card |
| 3) இலங்கை வர்த்தக வங்கி | 1) மாஸ்ரர் அட்டை Master Card |
| 4) மக்கள் வங்கி | 1) மக்கள் கிளாசிக் அட்டை Peoples Classie Card |
| | 2) மக்கள் தங்க அட்டை Peoples Gold Card |
| | 3) மக்கள் வியாபாரஅட்டை Peoples Business Card |
| 5) சேலான் வங்கி ( Seylan Bank Ltd. ) | 1) சேலான் அட்டை Seylan Card |

தற்போது இக்கடன் அட்டைகளின் பாவனை கொழும்பிலும் அதன் சுற்றுப்புற நகரங்களிலுமே கூடுதலாக பாவனையில் உள்ளன. மேலும் ஏனைய நகரங்களுக்கு விஸ்தரிக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

**முகவர் வங்கியியல்**
Agency Banking

வழமையான வங்கி நடவடிக்கைகளுக்கும் மேலதிகமாக அபிவிருத்தி நடவடிக்கைகளில் வங்கியின் பரந்த பங்களிப்பைச் செய்வதற்காக வங்கிகள் சமூகக் கடன் ஊக்குவிப்போர் என்ற புதியதொரு திட்டத்தை அறிமுகப்படுத்தின. இந்த திட்டத்தின் நோக்கமானது கடன் வசதிகளை சிறிய அளவில் கடன் பெறுவோருக்கு சிக்கலான ஆவணங்களின்றி இலகு முறையில் வழங்குமுறப்பட்டதாகும்.

இந்த வகையில் இலங்கை வங்கியும் (1988) மக்கள் வங்கியும் சமூகக் கடன் ஊக்குவிப்போர் திட்டத்தையும் Prasa Naya Niyamaka (P. N. N.), சம்பத் வங்கியின் சம்பத் சேவா சன்யோஜக திட்டத்தையும் (S S S) (1989), ஹட்டன் நஷனல் வங்கியின் கமி புபுதுவ திட்டம் (கிராம எழுச்சித் திட்டம் - 1989) வரையறுக்கப்பட்ட

இலங்கை வர்த்தக வங்கியின் சுய வேலைவாய்ப்பு - சிறிய உற்பத்தி அலகுகள் திட்டமும் சேலான் வங்கியின் சுயவேலை வாய்ப்புத் திட்டங்களும் அடங்குகின்றன.

## நம்பிக்கை ஒன்றியம்
Unit Trust

முதலீட்டாளர்களும், மற்றும் முதலிட விரும்பும் மக்களும் பங்குச் சந்தையில் பங்குகளை வாங்குவதற்காக பணத்தை ஒன்று சேர்க்கின்ற ஒரு வகையான முதலீட்டுமுறையாக இதனைக் கூறலாம். இவ்வாறு சேர்க்கப்படும் பணம் ஒரு நம்பிக்கை நிதியாகும். இந்நிதியானது விஷேட நிபுணத்துவம் பெற்றவர்களினால் முதலீடுசெய்பவர்களின் சார்பில் நிர்வகிக்கப்படும். இவ்வாறு முதலிடப்பட்டபின் இந்த நிதி கூறுகளாகப் (Units) பிரிக்கப்படும். கூறுகளின் பெறுமதியும் நிர்ணயம் செய்யப்படும் உதாரணமாக 5000 முதலீட்டாளர்கள் சராசரியாக 10,000/- ரூபாவை முதலிட்டால் மொத்த முதலீட்டுத் தொகை 50,000,000/- ரூபாவாகும். இந்த 50,000,000/- ரூபாவும் வேறுபட்ட கம்பனிகளின் பங்குகளின் பங்குகளில் முதலிடப்படுகின்றன. இவ்வாறு முதலிடப்பட்ட மொத்தப் பங்குகளின் பெறுமதியே கூறுகளாகப் பிரிக்கப்படுகின்றது. ரூபா 50,000,000/- பெறுமதியை 5,000,000 கூறுகளாகப் பிரிப்பதற்கு தீர்மானித்தால் ஒவ்வொரு கூறின் பெறுமதியும் ரூபா 10/- ஆகும். காலப்போக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி அதிகரிக்கும் போது கூறுகளின் பெறுமதியும் அதிகரிக்கும். உதாரணமாக 60,000,000/- பெறுமதியான பங்குகளாயின் கூறுகளின் விலை 12/- ஆகும். மூலதனப் பெறுமதி அதிகரிப்பை விட, முதலிடப்பட்ட பங்குகளுக்கான பங்கிலாபம் பெறப்படுவதால் மேலதிக வருமானமும் கிடைக்கும். வழக்கமாக நம்பிக்கை ஒன்றிய முகாமையாளரால் கூறுகளின் விற்கும் விலை, வாங்கும் விலை தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்படும். இதன்படி நம்பிக்கை ஒன்றிய கூறுகளை வாங்குவோரும் விற்போரும் இவற்றை வாங்கலாம் அல்லது விற்கலாம்.

**நன்மைகள் :–** வழக்கமாக பணம் வைத்திருப்போர் எல்லோரும் சிறந்த முதலீடுகளை தெரிந்திருக்க நியாயமில்லை. நம்பிக்கை ஒன்றிய முகாமைத்துவம் சிறந்த நிபுணத்துவம் கொண்டவர்களை உள்ளடக்கி இருப்பதால் அவர்கள் பலவகைப்பட்ட இலாபம் மீட்டும் கம்பனிகளை அறிந்து அவற்றில் முதலிடுவார்கள். இது பலவகைப்பட்ட முதலீடுகளாக இருப்பதால் ஏதாவது ஒரு முதலீட்டில் நட்டமேற்பட்டாலும் மற்றவகை முதலீடுகளால் அது ஈடுசெய்யப்பட்டுவிடும். இதனால் நட்டமடையும் சாத்தியம் குறைவடைகின்றது.

இதனைவிட இவ்விதமான முதலீட்டில் சொத்துப் பெறுமானம் காலப்போக்கில் அதிகரித்துச் செல்லுவதுடன் முதலீட்டுப் பெறுமதியும் அதிகரித்துச்செல்லும் - வருமான வரிச்சலுகையும் இவற்றிற்கு உண்டு.

இலங்கைவங்கியை (Trustee) நம்பிக்கையாளர்களாக கொண்டு இயங்கும் நம்பிக்கை ஒன்றியம் சீபாங் நம்பிக்கை ஒன்றியம் (Ceybank unit Trust) என அழைக்கப்படுகின்றது.

## அதிகாரம் பெற்ற அந்நிய நாணய மாற்றுனர்கள்

அந்நிய நாணயங்களை கொள்வனவு செய்து இலங்கை மத்திய வங்கியின் நியதிகளுக்கு அமைய வேறு நாணயங்களாக மாற்றிக் கொடுப்பதற்கு மத்தியவங்கியின் அனுமதியை பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் அந்நிய நாணய மாற்றுனர்கள் எனப்படும். இவர்கள் இலங்கை ரூபாவிற்கு அந்நிய நாணயங்களை விற்பனை செய்ய இயலாது.

அழகுசாதன அலங்காரப் பொருட்கள் தைப்பதற்குத் தேவையான

★ நூல் ★ லேஸ் ★ பட்டின் பொருட்கள் ★ பரிசுப்பொருட்கள்
★ தரமான கோல்ட்கவரிங் நகைகள் ★ பூக்கள் செய்வதற்கான பொருட்கள்
★ சீக்குவின்ஸ் ★ D. S. I, Bata மற்றும் பாதணிகள்

யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மணப்பெண்ணின் அலங்கரிப்புக்கான தலைநகை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## அலோமாஸ்

பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

---

வணிக மன்றம் நாட்டிற்கும், மக்களிற்கும் சேவை செய்ய
வாழ்த்துகின்றோம்

# செல்லப்பா களஞ்சியம்

404, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

---

இராமநாதன் கல்லூரியின்

**வணிக வாணி பல்லாண்டு காலம்**

## வளர்ச்சியுற வாழ்த்துக்கள்

# பொருளியல் திரு. உதயன்

பிரபல கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

# சந்தை துண்டமாக்கல்
## MARKET SEGMENTATION

மு. கலைச்செல்வி
*1994 — வர்த்தகம்*

சந்தை எனும்போது பொதுவாக வாங்குவோர்களைக் குறிக்கிறது. எனினும் இன்றைய காலகட்டத்தில் விரைவான தொழில்நுட்பத்தினால் புதிய கண்டுபிடிப்புக்கள் நிகழ்வதுடன் வெவ்வேறுபட்ட எண்ணங்கள் உடையவர்கள் வெவ்வேறுபட்ட அம்சங்களை கண்டுபிடிக்கின்றனர். இதனால் நுகர்வோர் எல்லோரும் ஒரே தேவைகள் விருப்பங்களை உடையவர்களாக காணப்படவில்லை. ஆகையால் ஒரே வகையான பொருட்களை உற்பத்தி செய்து வழங்குவதன் மூலம் நுகர்வோர் எல்லோரினதும் தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்ய முடியாது.

எனவே வெவ்வேறுபட்ட தேவைகள் விருப்பங்களை கொண்ட சந்தையொன்றில் ஒத்த தன்மையுடைய அல்லது ஒரே தேவைகள் விருப்பங்களைக் கொண்ட நுகர்வோரை தொகுதி தொகுதியாக வகைப்படுத்துவதனை சந்தை துண்டமாக்கல் எனப்படும். அதாவது வெவ்வேறு வகைப்பட்ட தேவைகள் விருப்பங்களையுடைய நுகர்வோரை உள்ளடக்கிய சந்தையை குறிப்பிட்ட உற்பத்திப் பொருளிற்காக ஓரின தன்மையுடைய தொகுதி தொகுதியாக வகைப்படுத்துவதனை சந்தை துண்டமாக்கல் எனப்படும்.

சந்தை துண்டமாக்கல் ஆனது குறித்த ஒரு நிறுவனம் முழு சமுதாயத்தினரையும் இலக்காகக் கொண்டு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யக்கூடிய நிதி இயலமைப்பையும் உற்பத்தி இயலளவையும் கொண்டிராத நிலையில் சந்தையை துண்டாடி குறித்த துண்டத்தை மையமாக வைத்து சிறந்த அடிப்படையில் பொருட்கள் சேவைகளை உற்பத்திசெய்து வழங்க முக்கியமாகிறது.

சந்தை துண்டமாக்கப்படும் பொழுது பின்வரும் காரணிகளின் அடிப்படையில் துண்டமாக்கப்படுகின்றது.

### 1. புவியியல் ரீதியான துண்டமாக்கல்

புவியியல் காரணிகள் நுகர்வோரின் தேவைகள் விருப்பங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. புவியியற் காரணிகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும். எனவே நுகர்வோர் தேவைகள் விருப்புக்களும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடலாம். எனவே பிரதேச அடிப்படையில் மக்களின் தேவைகள் விருப்பங்களை வைத்து சந்தையை துண்டமாக்குவது பிரதேச ரீதியான துண்டமாக்கல் ஆகும். இது கீழைத்தேசம், மேலைத்தேசம், குளிர்ப் பிரதேசம், வரண்ட பிரதேசம் என வகைப் படுத்தப்படலாம் உதாரணமாக புடவை உற்பத்தியின் பருத்திப் புடவை கம்பளிப் புடவை உற்பத்தி செய்தலை குறிப்பிடலாம்.

### 2 குடித்தொகை ரீதியான துண்டமாக்கல்

சந்தையை குடித்தொகை ரீதியான மாறிகளை அடிப்படையாக வைத்து துண்டமாக்குவதை குடித்தொகை ரீதியான துண்டமாக்கல் எனலாம். இத்துண்டமாக்கலுக்கு மாறிகளில் ''வயது'' முக்கியம் பெறும். சந்தையை நுகர்வோரின் வயது அடிப்படையில் துண்டமாக்குவதை இது குறிக்கும். உதாரணமாக லக்டோஜன், நெஸ்பிறே மா உற்பத்தியைக் கூறலாம். அடுத்ததாக ''பால்'' முக்கியம் பெறும். இங்கு நுகர்வோரை ஆண்கள், பெண்கள் என்ற அடிப்படையில் பாகுபடுத்தி உற்பத்தி வழங்கல் நடைபெறுவதை குறிப்பிடலாம். உதாரணமாக சஞ்சிகைகள் ஆண்கள், பெண்களிற்கென விசேடமாக உற்பத்தி செய்யப்படுவதைக் கூறலாம்.

''சமயம்'' நுகர்வோரின் சமயத்தை அடிப்படையாக வைத்து உற்பத்தி செய்வதை இது குறிக்கும். உதாரணமாக இந்து சமய மக்கள், கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கு ஏற்ற வகையில் சமயபாடப் புத்தகங்களை வழங்குவதைக் கூறலாம். ''வருமானம்'' நுகர்வோன் பெறும் வருமானத்தை அடிப்படையாக வைத்து பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதை இது குறிக்கும். உதாரணமாக ஷம்பூ ஆனது பைக்கற்றுக்களிலும், போத்தல்களிலும் அடைக்கப்படுவது இதன் அடிப்படையிலாகும். ''தொழில்'' வாங்குவோரை அவர்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில் வகைப்படுத்துவதை இது குறிக்கும். உதாரணமாக பாதணி உற்பத்தியில் கன்வஸ் பாதணிகளும், லெதர் பாதணிகளும் உற்பத்தி செய்வதைக் கூறலாம். ''குடும்ப அளவு'' இது நுகர்வோர் குடும்பம் ஒவ்வொன்றிலுமுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து உற்பத்தி வழங்கலில் ஈடுபடுவதைக் குறிக்கும். உதாரணமாக பால்மா பைக்கற்றுக்களிலும் பெரிய ரின்களிலும் அடைக்கப்படுவதைக் குறிப்பிடலாம்.

### 3. நடத்தை மூலமான துண்டமாக்கல்

நுகர்வோன் குறிப்பிட்ட பொருளில் இருந்து எதிர்பார்க்கப்படும் பயன், எதிர்பார்க்கும் சந்தர்ப்பம், அறிவு, விருப்பம் என்பவற்றை அடிப்படையாக வைத்து சந்தையை துண்டமாக்குதல் நடத்தை மூலமான துண்டமாக்கல் ஆகும். உதாரணமாக புடவைகளில் சிலர் தரமான புடவைகளையும் சிலர் மலிவான புடவைகளையும் விரும்புவர். எனவே இதற்கேற்ப புடவையை உற்பத்தி செய்வதைக் குறிப்பிடலாம்.

### 4. உளவியல் ரீதியான துண்டமாக்கல்

உளவியல் ரீதியான துண்டமாக்கல் என்பது வாங்குவோரை சமூக வகுப்பு வாழ்க்கை முறை தனிப்பட்ட குணம் என்பவற்றின் அடிப்படையில் துண்டமாக்கப்படுவதைக் குறிக்கும். நுகர்வோரின் சமூக வகுப்பு வாழ்க்கை முறை தனிப்பட்ட குணம் என்பவற்றினால் வாங்குவோரின் தேவைகள், விருப்பங்கள் நிச்சயிக்கப்படலாம் எனவே இக் காரணிகளின் அடிப்படையில் சந்தையை துண்டமாக்கி ஒவ்வொரு துண்டத்திற்கும் ஏற்றதாக பொருட்கள், சேவைகள் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

### துண்டமாக்காத சந்தை

சில பொருட்கள் துண்டமாக்கப்படாத சந்தை நோக்கி சந்தைப்படுத்தப்படுகிறன. அதாவது நுகர்வோனின் பொதுவான தேவையை அறிந்து அவற்றை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் பெரும்பாலான வாங்குவோருக்கு ஏற்றதாக ஒரு பொருளினை உற்பத்தி செய்து வழங்குவதைக் குறிக்கும். இம் முறையை ஒரு நிறுவனம் கைக்கொள்வதால் நிறுவனம் தனது செலவுகளைக் குறைக்க முடியும். உதாரணமாக பாண் உற்பத்தியைக் குறிப்பிடலாம். பாண் உற்பத்தியின்போது வயது, வருமானம், சமயம், தொழில் போன்ற காரணிகள் எதையும் கவனத்தில் எடுக்காது சகலருக்கும் ஒரே விதமான பொருளே உற்பத்தி செய்து வழங்கப்படுகிறது.

பொதுவாக மேற்குறிப்பிட்ட காரணிகளை தொகுத்து நோக்கும்போது ஒரு சிறந்த துண்டமாக்கலாயின் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு துண்டமும் போதிய இலாபத்தைத் தரக்கூடியதாகவும் பெரிதாகவும் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட அம்சத்தை வைத்து சந்தையை துண்டமாக்கும் போது அது பொருத்தமானதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு சந்தை துண்டமாக்கத்தினுள்ளும் அடங்கும் நுகர்வோன் ஒத்த தன்மையுடையவர்களாகருக்க வேண்டும். எவற்றை அடிப்படையாக வைத்து சந்தை துண்டமாக்கப்படுகிறதோ அவற்றைக் கொண்டே நுகர்வோரை அளவிடக் கூடியதாக இருக்கவேண்டும். ஆகவே மேற்கூறிய அனுபவரீதியான கருத்துக்களை மையமாக வைத்தே சந்தை துண்டமாக்கலை மேற்கொள்வது பொருத்தமானதாகும்.

# விலையிடல்

கு. ஆனந்தி
1994 — வர்த்தகம்

## 1. அறிமுகம்

சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகளில் ஒன்று என கூறப்படுவது விலையிடல் ஆகும். எனவே சிறந்த விலையிடல் முறையை தெரிவு செய்வதன் மூலம் நிறுவனம் சந்தைப் படுத்தல் தொழிற்பாட்டினை வெற்றிகரமாக செயற்படுத்த முடிவதுடன் தமது உற்பத்தித் தொழிற்பாட்டினை அதிகரித்துக் கொள்ளவும் முடியும். சந்தைப்படுத்தல் கருமத்தில் விலையிடல் கருமம் முக்கியமானது. பொதிகட்டப்பட்ட பொருட்களை என்ன விலையில் விற்பனை செய்வது என தீர்மானிக்கும் கருமம் விலை குறித்தல் எனலாம். சந்தைப்படுத்தலில் விலை குறைந்தால் விற்பனை கூடும் என்பது விலை கூடினால் விற்பனை குறையும் என்பதும் இயல்பானது. எனவேதான் பொருத்தமான விலையிடலை ஒவ்வொரு நிறுவனங்களும் கடைப்பிடிக்க வேண்டியது முக்கியம் ஆகும். எனவே விலையிடல் என்பது உற்பத்தியாளர் தனது உற்பத்திப் பொருட்கள் சேவைகளிற்கு பணப் பெறுமதியை தீர்மானிக்கும் கருமமே விலையிடல் ஆகும்.

## 2. விலையிடலை தீர்மானிக்கும் காரணிகள்

i. உற்பத்தி கிரயம்

ii. பொதிகட்டல் செலவுகள்

iii. விளம்பர விற்பனை மேம்படுத்தல் செலவுகள்

iv. அரசின் விலை கட்டுப்பாடுகள்

v. அரசு விதிக்கும் வரி, அரசு வழங்கும் மானிய அளவுகள்

vi. போட்டியாளர்களின் விலை

vii. நிறுவனத்தின் இலாபக் கொள்கை.

## 3. விலையிடல் முறைகள்

நிறுவனங்கள் விலையிடலை மேற் கொள்ள 8 முறைகளில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

i. கிரயத்துடன் கூட்டிய விலையிடல் அல்லது கொள்விலையுடன் கூட்டிய விலையிடல்.

ii. போட்டி விலையிடல்.

iii. கேள்வி அடிப்படையில் விலையிடல்

iv. ஊடுருவல் விலையிடல்.

v. விரைவு பணமீட்பு உபாயம் விலையிடல்.

vi. இலக்கு விலையிடல்.

vii. உளவியல் விலையிடல்.

viii. கைமாற்றல் விலையிடல்.

### கொள்விலையுடன் கூட்டிய விலையிடல்

பெரும்பாலான நிறுவனங்களால் பயன் படுத்தப்படும் ஒரு விலையிடல் முறை இதுவாகும். அரச நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் தமது உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்படும் உற்பத்தி செலவுடன் குறித்த இலாபத்தை சேர்த்து பொருட்களுக்கான விலையை நிர்ணயிக்கும் முறையே செலவுடன் கூட்டிய விலையிடல் ஆகும்.

உதாரணமாக :-

பொருள் ஒன்றின் உற்பத்தி செலவு 1000/- செலவின் மீதி இலாப வீதம் 10%

இலாபம் வைக்கப்பட்டு விலை நிர்ணயிக்கப் படும் ஆயின்

| | | |
|---|---|---|
| உற்பத்தி கிரயம் | ரூ. | 1,000 |
| இலாபம் 10% | ரூ. | 100 |
| பொருளின் விலை | | 1,100 |

## போட்டி விலையிடல்

நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் விலை யிடல் முறையில் ஒன்றாகும். போட்டி விலையிடல் என்பது குறித்த நிறுவனம் தனது பொருட்களுக்கான விலையை போட்டியாளர்களின் விலையை அடிப் படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படு மாயின் போட்டி விலையிடல் என்பர்.

உதாரணமாக:-

மில்க்வைற் சோப்புக்குப் போட்டிச் சவர்க்காரம் சண்லைட். மில்க்வைற் சவர்க் காரத்தின் உற்பத்திச் செலவு 10/- எனக் கொள்வோம். போட்டிப் பொருள்களான சண்லைட் சவர்க்காரத்தின் விலை 7/- எனவே மில்க்வைற் சவர்க்காரம் 7/- விலையை நிர்ணயிக்கிறது.

## கேள்வி அடிப்படையில் விலையிடல்

நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் விலை யிடல் முறைகளில் இது ஒன்றாகும். கேள்வி அடிப்படையில் விலையிடல் என்பது ஒரு பொருளுக்கான ஆக்கச் செயலே. இலாப வீதத்தை மையமாகக் கொள்ளாமல் பொருட்களுக்கான எதிர்காலக் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு விலையை நிர்ணயிக்கும் முறையே இதுவாகும்.

## ஊடுருவல் விலையிடல்

நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் விலை யிடல் முறைகளில் இதுவும் ஒன்று ஆகும். பொருட்களுக்கான உற்பத்திச் செலவையோ போட்டிப் பொருட்களுக்கான விலையையோ கவனத்தில் கொள்ளாது புதிய பொருள் ஒன்றை ஏற்படுத்தும் நிறுவனங்கள் சந்தைப் பங்கில் பெரும் பங்கை கைப்பற் றுவதற்காக அல்லது நுகர்வோரை கவர்ச் சிப்படுத்த பொருளின் விலையை நிர்ண யிக்குமாயின் அதனையே ஊடுருவல் விலை யிடல் என்பர்.

## விரைவு பணமீட்பு உபாய விலையிடல்

நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் விலை யிடல் முறைகளில் இது ஒன்றாகும். விரைவு பணமீட்பு உபாயம் என்பது நிறு வனங்கள் உற்பத்தி முயற்சியில் ஈடு படுத்திய மூலதனத்தை விரைவாக மீளப் பெறக்கூடிய வகையில் பொருட்களுக்கான விலையை நிர்ணயித்து இருக்குமாயின் அதனையே விரைவு பணமீட்பு உபாயம் என்பர்.

## இலக்கு விலையிடல்

நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் விலை யிடல் முறைகளின் இது ஒன்றாகும். இலக்கு விலையிடல் என்பது வியாபார நிறுவனங்கள் ஈடுபடுத்திய மூலதனத்திற்கு குறித்த வீத இலாபத்தைப் பார்த்து அவ்விலாபத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக விலை நிர்ணயிக்கப்படுமாயின் அதனை இலக்கு விலையிடல் என்பர்.

உதாரணமாக:-

ஒரு நிறுவனம் ஈடுபடுத்திய மூலதனம் 1,00,000/- ஆகும். எதிர்பார்க்கப்படும் இலாப வீதம் 10% இந் நிறுவனம் உற் பத்தி செய்யும் அலகுகள் 5000 ஆகும். எனவே ஒரு அலகுக்கான இலாபம் 2/-

## உளவியல் விலையிடல்

இதுவும் விலையிடல் முறைகளில் ஒன் றாகும். உளவியல் விலையிடல் என்பது ஆக்கச் செலவையோ, கேள்வியையே, அல்லது போட்டி விலையையோ கவனத்தில் கொள்ளாது நுகர்வோனைக் கவரும் நோக்குடன் விலையிடல் மேற்கொள்ளப் படின் இது உளவியல் ரீதியான விலை யிடல் ஆகும்.

உதாரணமாக:-

Bata நிறுவனம் தனது பாதணிகளுக்கு குறிக்கும் விலையிடல் ஓர் உளவியல் ரீதியான விலையிடல் ஆகும். ஏனெனில் ஒரு சோடி சப்பாத்துகளின் விலை ரூ. 299.90 சதம் என விலையை தீர்மானித் லாகும்.

### கைமாற்று விலையிடல்

இது வரியுடன் சம்பந்தப்பட்ட விலையிடலாகக் காணப்படுகின்றது. வழமையிலே ஒரு நிறுவனமானது தனது கிளைகளை பல நாடுகளில் பன்முகப்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் வரிகளைக் கூட விதிக்கும் நாடுகளில் தனது இலாபத்தைக் குறைக்கும் வகையிலும் வரிகளைக் குறைவாக விதிக்கும் நாடுகளில் தனது இலாபத்தை அதிகரிக்கும் வகையிலும் விலையிடலை மேற்கொள்ளும். இதுவே கைமாற்றல் விலையிடல் ஆகும்.

உதாரணம்:- பல தேசிய கம்பனிகள் பின்பற்றும் விலையிடல்.

### 4. முடிவுரை

இவ்வாறாக ஒரு நிறுவனத்தின் விலையிடல் பல்வேறு காரணிகள் நிர்ணயிப்பதன் விளைவாக பல்வேறு முறைகள் பின்பற்றப்பட்டுவரும்போது எந்த ஒரு நிறுவனம் சிறந்த விலையிடல் முறைகளை பின்பற்றுகிறதோ அந்த நிறுவனமே தனது சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டில் வெற்றியீட்ட முடியும். இவ்வாறு சந்தைப்படுத்தல் தொழிற்பாடு வெற்றிகரமாக அமையும் போதே நிறுவனங்கள் தமது உற்பத்தி தொழிற்பாட்டினை அதிகரித்து வளர்ச்சி நிலையை அடையமுடியும்.

---

புகையிரத திணைக்களம் அதிகார சபையாக மாற்றப்படஉள்ளது. இத்திணைக்களமானது நட்டத்தில் செயற்படுவதன் காரணமாகவே இம் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது.

**அதிகார சபையாக மாற்றப்படுவதால் பின்வரும் மாற்றங்கள் நிகழும்.**

1. இலாபம் பெறப்பட்டு அவ்இலாபத்தில் தொழிலாளருக்கு வருடா வருடம் ''மேலதிக கொடுப்பனவு'' (BONUS) வழங்கப்படும்.
2. தொழிலாளருக்கு 33% சம்பள உயர்வு கிடைக்கப்பெறும்.
3. புதிய சேவைகள் விஸ்தரிக்கப்படும்.
4. தொழிலாளர்களால் ஏற்படும் பிரச்சினைகள் (அண்மையில் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.) ஏற்படாது தவிர்க்கப்படுவதால் சுமூகமான நிலை தோன்றும்.

**இலங்கையில் விமானப் போக்குவரத்தில் ......**

இலங்கை தனது விமானங்களைப் பராமரிப்பது, கொள்வனது செய்வது, சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாக ஜெனீவாவுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு 1993 ஆம் ஆண்டு ஆவணிமாத இறுதியில் கைச்சாத்திட்டுள்ளது.

✣ பாடசாலை உபகரணங்கள்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளவும்

✣ அச்சக வேலைகள், புத்தகங்கட்டுதல்
சிறந்த முறையில் செய்து கொள்ளவும்.

## அம்மா அச்சகம் — புத்தகசாலை

காங்கேசன்துறை வீதி, மருதனார்மடம்.

---

▣ பிஸ்கற் ▣ பால்மா ▣ இனிப்புவகை

*சில்வர் வர்த்தக நிலையம்*
*மொத்த விற்பனை நிலையம்*

# சில்வர் ரேடர்ஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

அதி உன்னத சத்துணவு

ஜீவாகாரம்
**JEEVAKARAM**

✣ *வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்*
✣ *கற்பிணித் தாய்மார்களுக்கும்*
✣ *பாலூட்டும் தாய்மார்களுக்கும்*
✣ *போசாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்*
✣ *ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு*

விநியோகஸ்தர்கள்:

# அண்ணா தொழிலகம்

இணுவில்.

தொலைபேசி: 021 - 23412 & 021 - 23413

# கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தின் வளர்ச்சி

தேவராஜன் ஜெயராமன்
B. Com. (Hons.), M.B.A. (Delhi),
AMIPM (Sri Lanka).
விரிவுரையாளர், வணிகமுகாமைத்துவதுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்திற்கு ஓர் நீண்டவரலாறு உண்டு. இந்நிறுவனத்தின் வரலாறு 1896 ஆம் ஆண்டுடன் தொடர்புடையது. 1904 இல் இருந்து நவம்பர் 1985 வரை பங்கு விற்பனை நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகள் கொழும்பு தரகர் சங்கத்தினால் (CBA — Colombo Brokers Association) மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொழும்பு தரகர் சங்கத்தின் வியாபாரதளமும், பங்குதரகர் சங்கமும் (Stock Brokers Association) ஒன்றிணைக்கப்பட்டு கொழும்பு ஆவணமாற்றுக் கம்பனி லிமிட்டெட் (Colombo Securities Exchange Company Limited) தோற்றுவிக்கப்பட்டது. இது உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஓர் கம்பனியாகும். இதன் பெயர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock Exchange — CSE) என 1990 இல் பெயர்மாற்றப்பட்டது.

இதன் பிரதான நோக்கங்களாவன

i) விலை கூறப்பட்ட கம்பனிகளுக்கு மூலதனத்தினை திரட்டும் பொருட்டு வினைத்திறன் உடைய சந்தையினை தொழிற்படச் செய்வது.

ii) அதனது அங்கத்தவர்களுக்கும், விலை கூறப்பட்ட கம்பனிகளுக்கும் இடையே கண்ணியமான நியமத்தினைப் பேணுவதற்கு உதவுதல்.

iii) அரச ஆவணங்கள், முறிகள், பங்குகள் உட்பட ஆவணங்களை கட்டளையிடுதல் சம்பந்தமான கலந்துரையாடலை ஒழுங்கு செய்தல்.

இவ் அமைப்பு மேற்குறிப்பிட்ட பிரதான நோக்கங்களை அடையும் பொருட்டுத் தொழிற்படுகின்றது. இந் நிறுவனம் தனது அங்கத்தவர்களும், நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளும் செலுத்துகின்ற கட்டணங்களை பிரதான வருமானமாகப் பெற்றுக் கொள்கின்றது. தற்போது பதினைந்து அங்கத்துவ நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவை யாவன,

(i) Bartleet Mallory Stock Brokers (Pvt) Ltd.

(ii) Forbes & Walker Stock Brokers (Pvt) Ltd.

(iii) John Keels Stock Brokers (pvt) Ltd.

(vi) Allied Stock Brokers (Pvt) Ltd.

(v) Serendib Trust Services Ltd.

(vi) Somerville Stock Brokers (Pvt) Ltd.

(vii) JB Stock Brokers & Financial Services Ltd

(viii) Lanka Securities (Pvt) Ltd.

(ix) Asia Stock broking & Investment Management (Pvt) Ltd.

(x) Commercial Stock Brokers (Pvt) Ltd.

(xi) De Silva & Abeywaradena Stock Brokers (Pvt) Ltd.

(xii) CDIC Seasoon Cumberbatch Stock Brokers (Pvt) Ltd.

(xiii) CT Simith Stock Brokers (Pvt) Ltd.

(xiv) HDF Securities (Pvt) Ltd.

(xv) NDBS Stock Brokers (Pvt) Ltd

1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் பிணையங்கள் பேரவையை (Securities Council) உருவாக்கியது. இப்பேரவையானது இலங்கையில் மூலதனச் சந்தையினை ஒழுங்கு படுத்துவதில் பிரதான பொறுப்பினை கொண்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இவ்வமைப்பு பெயர்மாற்றப்பட்டு, இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக் குழு (Securities and Exchange Commission of SriLanka) என தற்போது அழைக் கப்படுகின்றது.

பரிவர்த்தனை நிலையத்தின் தீர்மானம் எடுக்கும் அமைப்பாக இயக்குனர் சபை காணப்படுகின்றது. இவ் இயக்குனர் சபையில் ஒன்பது அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் அங்கத்தவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து தரகர்களும், (Brokers) பங்குகள் பரிமாற்று ஆணைக் குழுவின் சிபார்சின் பெயரில் நிதி அமைச்சரினால் நியமிக்கப்படும் நான்கு தரகர் அல்லாதவர்களாகவும் (Non - Brokers) காணப்படுவர். இச்சபையினால் நான்கு உப குழுக்கள், நான்கு செயற்பாடுகளுக்கு என அமைக்கப்பட்டுள்ளன இதன் அமைப்பு வரை படம் கீழ் வருமாறு:-

**இயக்குனர் சபை**

| | | | |
|---|---|---|---|
| சட்டங்களும் உபவிதிகளும் | ஒழுங்குகளும், நடுத்தீர்ப்பும் | நிதி, ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | மூலதனம் வழங்கல் |
| ( Rules & Bye Laws ) | (Disciplinary & Arbitration) | (Finance, Research & Development) | Capital Issues |
| (உபகுழு) | (உபகுழு) | (உபகுழு) | (உபகுழு) |

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் நிர்வாகமானது ஒரு பொதுமுகாமையாளரின் கீழ் செயற்படுகின்றது. பொது முகாமையாளருக்கு உதவியாக நிபுணரும் (Consultant) ஐந்து முகாமையாளரும் காணப்படுவர். இவ் ஐந்து முகாமையாளர்களும் ஐந்து செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகக் காணப்படுவர். இதன் அமைப்பு வரைபடம் பின்வருமாறு:-

பொதுமுகாமையாளர்

| | | | | |
|---|---|---|---|---|
| முகாமையாளர் | முகாமையாளர் | முகாமையாளர் | முகாமையாளர் | முகாமையாளர் |
| (Trading, Finance, Listing) | (Clearing & Settlement) | (Data Processing) | (Surveilance & Enforcement) | (Legal & Personnel) |

*1991 ஆம் ஆண்டு கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தினால் முழு அளவில் உடமையாக்கப்பட்ட துணைக்கம்பனி உருவாக்கப்பட்டது. இக்கம்பனி மத்திய வைப்பு முறை (தனியார்) லிமிட்டெட் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இக்கம்பனி மத்திய வைப்பு முறையினை நிர்வகிக்கின்றது.*

*இலங்கையின் பங்குச் சந்தையினைப் பொறுத்து கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஒரு முக்கியமான பிரதான அமைப்பாகும். இது வளர்ந்துவருகின்றதும், பங்குச் சந்தையின் வளர்ச்சி கருதி காலத்திற்குக் காலம் பல புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்துகின்ற அமைப்பு என்பது மறுக்கப்படமுடியாத உண்மை.*

## இலாபப்பகிர்வு — கூட்டுப்பங்குடமை

*இலாபப்பகிர்வு என்பது நிறுவனம் ஒன்றின் தொழிலாளர்கட்கு சம்பளத்தைவிட மேலதிகமாக நிறுவனத்தின் இலாபத்திலிருந்து வழங்கப்படுவதனைக் குறிக்கும்.*

*வழங்கப்படவேண்டிய இலாபத்திற்கு பதிலாக தொழிலாளர்கட்கு பங்குகளை வழங்கி அவர்களை உரிமையாளர் ஆக்கிக்கொள்வது கூட்டுப் பங்குடமை எனப்படும்.*

★

## உரிமைக் கட்டணம் / உத்தரவுப் பத்திரக் கட்டணம்
## LICENSE FEES

*உடமையை பதிவுசெய்தல், அனுமதிப்பத்திரங்களை பெற்றுகொள்ளலின்போது செலுத்தும் வரியாகும். வாகனங்கள், வானொலி, தொலைக்காட்சி என்பவற்றுக்கான உத்தரவுப் பத்திரம் மூலம் திரட்டப்படுகிறது.*

★

## இரகசிய ஒதுக்கம்

*நிறுவனத்தின் வளங்கள் அல்லது சொத்துக்கள் அந்நிறுவனத்தின் கணக்கு புத்தகங்களில் பிரதிபலிக்காமல் இருப்பின் அவை இரகசிய ஒதுக்கங்கள் எனப்படும். சொத்துக்களை குறைந்த பெறுமதியில் காட்டுதல், காட்டாமல் விடுதல், அல்லது பொறுப்புக்களை மேலதிகமாகக் காட்டுதல் போன்ற நடவடிக்கைமூலம் இவ் ஒதுக்கம் ஏற்படலாம்.*

★ நீர் இறைக்கும் இயந்திரம்
★ மோட்டார் சைக்கிள்
★ டீசல் இயந்திரங்கள்
★ மின் மோட்டார்

ஆகியன சிறந்த முறையில்
திருத்திக் கொடுக்கப்படும்.

## சென்றல் வேக்சொப்

முத்து கிருஷ்ணர் வீதி,
யாழ்ப்பாணம்.

வணிக வாணியை வாழ்த்துகின்றோம்!

★ 18, 20 கரட் நகைகள்
உடன் பெற்றுக் கொள்ளலாம்.

★ 22 கரட் நகைகள்
ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.

★ கால்ச்சலங்கைகள்
பெற்றுக் கொள்ளலாம்.

## கயல்விழி நகைப் பூங்கா

தங்கப்பவுண் நகை வியாபாரம்
224/13 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கலை ததும்பும் கலர்படங்களையும்
கறுப்பு வெள்ளைப் படங்களையும்
*சிறந்த முறையில் பிடித்துக்கொள்ள*

35 வருட அனுபவம் பெற்ற

# பிறின்ஸ் ஸ்ரூடியோ

(படப்பிடிப்பாளர்கள்)

சுன்னாகம்.

# கம்பனியொன்றின் பங்கு மூலதனமும் பங்கு வழங்கலும்
## (SHARE CAPITAL AND SHARE ISSUE OF A COMPANY)

**திருமதி ரதிராணி யோகேந்திரராஜா**
விரிவுரையாளர்,
வணிக முகாமைத்துவதுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

### 1.0 கம்பனியினது பங்கு மூலதனம் (Share Capital of a Company)

பொதுவாகக் கம்பனியில் பங்கு மூலதனம், எனும்போது, அது வாக்குரிமையுடைய சாதாரண பங்குகளையே குறிப்பிடுகின்றது. ஒரு கம்பனியானது ஒன்றிற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்டிருக்கலாம்.

அ) **வாக்குரிமையுடைய சாதாரண பங்குகள்:**

இவை பகிரப்படும் மேலதிக இலாபத்தில் அல்லது கலைப்பின் போதான மேலதிக சொத்துக்களில் பங்குபற்றும் உரிமைஉடையன.

ஆ) **வாக்குரிமையற்ற சாதாரண பங்குகள்:**

இவற்றுக்கு வாக்களிக்கும் ஆற்றல் கட்டுப்படுத்தப்படுவதுடன், மேற்குறிப்பிடப்பட்ட உரிமைகளும் விலக்கப்படுகின்றன.

இ) **முன்னுரிமைப் பங்குகள்:**

இவற்றுக்கு பங்கிலாபம் பகிரப்படும்போது, சாதாரண பங்குகளுக்கு பங்கிலாபம் வழங்க முன்னர் நிலையான தொகை பங்கிலாபமாகக் கொடுக்கப்படும். இவற்றில் மேலும் இரண்டு அம்சங்களை அவதானிக்க முடிகின்றது.

i) **திரள் முன்னுரிமைப் பங்குகள்:**

முன்னுரிமைப் பங்குகள் திரளா முன்னுரிமைப் பங்குகள் எனக் குறிக்கப்படாதவிடத்து அவை திரள் முன்னுரிமைப் பங்குகளாக கருதப்படும். திரள் எனும் போது ஒரு குறிக்கப்பட்ட வருடத்தில் கம்பனி இலாபம் உழைக்காதவிடத்து அவ்வருடத்தில் பங்கிலாபமாகச் செலுத்த வேண்டிய தொகையானது இரட்டைப் பதிவு அடிப்படையில் பதியப்படாது, அந்நிலுவை மீதி குறிப்பாகக் கீழ்க்கொண்டு வரப்படும். தொடரும் வருடத்தில் உழைக்கப்படும் இலாபத்தில் இம் முன்னுரிமைப் பங்கிலாப நிலுவை செலுத்தப்பட்ட பின்னரே சாதாரண பங்குதாரருக்கு பங்கிலாபம் செலுத்தப்படும்.

ii) **பங்குபற்றும் முன்னுரிமைப் பங்குகள்:**

குறிப்பிட்ட தொகை பங்கிலாபம் இப்பங்குகளுக்கு செலுத்திய பின் சாதாரண பங்குகளுக்கும், அவற்றிற்கான பங்கிலாபம் செலுத்திய பின்னர் மீதியிருப்பின் அதில் முன்னுரிமையடிப்படையில் பங்கு பற்றுவனவாகும்.

ஈ) **பிற்போடப்பட்ட அல்லது ஏற்கனவேயுள்ள பங்குதாரர்களது பங்குகள்:**

இத்தகைய பங்குகளிற்கு வாக்குரிமையிருக்கும். ஆனால், சாதாரண பங்குதாரர் குறிப்பிட்ட இலாபத்தைப் பெறும்வரை இப்பங்குதாரர் பங்கு

இலாபத்திற்கு உரித்துடையவராகார். இத்தகைய பங்குகள் மிக அருமையாகவே காணப்படும்.

## 1.1 பங்குகள் வழங்கல் (Issue of shares)

ஒரு புதிய கம்பனி உருவாக்கப்படும் போதோ அல்லது ஏற்கனவே இருக்கும் கம்பனியொன்று தனது பங்குமுதலை அதிகரிக்கும் முகமாகவோ புதிய பங்குகள் வழங்கப்படலாம். வழமையாக இது காசுக்கே வழங்கப்படுகிறது. இது விண்ணப்பத்துடன் முழுவதும் செலுத்தக்கூடியதாக அல்லது தவணை முறையில் செலுத்தக்கூடியதாக பங்குகள் வழங்கப்படலாம். இப்பங்குகள் பின்வரும் மூன்று வேறுபட்ட நிலைகளில் வழங்கப்படலாம்.

i) சமவிலையில் வழங்கப்படல். உ — ம்: ரூபா 10/- பெயரளவுப் பெறுமதியுடைய பங்குகள் ரூபா 10/- இற்கு வழங்கப்படல்.

ii) பங்குகள் வட்டத்துடன் வழங்கப்படல். உ — ம்: ரூபா 10/- பெயரளவுப் பெறுமதியுடைய பங்குகள் ரூபா15/- இற்கு வழங்கப்படல்.

iii) பங்குகள் கழிவுடன் வழங்கப்படல். உ — ம்: ரூபா 10/- பெயரளவுப் பெறுமதியுடைய பங்குகள் ரூபா 8/ இற்கு வழங்கப்படல்.

1948 இல் இங்கிலாந்துக் கம்பனிச்சட்டம் 56 ஆம் பிரிவின் படி பங்குகள் வட்டத்துடன் வழங்கப்படின், பங்குவட்டம் தனியான கணக்கில் காட்டப்படல் வேண்டுமெனக் குறிக்கப்படுகின்றது. இத்தகைய பங்குவட்ட மீதி நிலையான மூலதனத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளப்படுகின்றது மேலும் இம்மீதி பின்வரும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம்.

i) மூலதனக் குறைப்பு, உபகாரப் பங்கு, விநியோகம் என்பவற்றின் பாவனைக்கு.

ii) பூர்வாங்கச் செலவுகளை பதிவழிக்க.

iii) பங்குகள், தொகுதிக்கடன்கள் வழங்கப்படுகையில், ஏற்படும் செலவுகள் அனுமதிக்கப்பட்ட கழிவு, கொடுக்கப்பட்ட தரகு என்பவற்றைப் பதிவழிக்க.

iv) மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள், தொகுதிக்கடன்கள் என்பன வட்டத்துடன் மீட்கப்பட்டிருப்பின், அம்மீட்பு வட்டத்தைப் பதிவழிக்க.

மேலும் 57ஆம் பிரிவு பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பங்குகள் கழிவுடன் வழங்கப்படலாம் எனக் குறிப்பிடுகின்றது.

i) முன்னர் வழங்கப்பட்ட பங்குகளின் வகையைச் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.

ii) நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iii) கம்பனி செயற்பாட்டை ஆரம்பித்து ஒரு வருடமாவது சென்றிருத்தல் வேண்டும்.

## 2.0 கணக்குப் பதிவுகள் (Accounting entries)

பங்குகள் வழங்கப்படுகையில் அதன் பெயரளவுப் பெறுமதி முழுவதும் விண்ணப்பத்தின் போதும் செலுத்தப்படலாம். அல்லது தொடர்ச்சியான கட்டணங்களாக விண்ணப்பம், ஒதுக்கல், 1ஆம் அழைப்பு, 2ஆம் அழைப்பு என்ற வகையிலும் செலுத்தப்படலாம். பங்கு வட்டம் வழமையாக ஒதுக்கல் பணத்துடன் உள்ளடக்கப்படும்.

பங்குகள் வழங்கப்படும்போது விண்ணப்பதாரர்கள் சாதாரணமாக ஒரு வைப்புத்தொகையினை விண்ணப்பத்துடன் அனுப்புமாறு கோரப்படுவர். இவ்வைப்புத்

தொகையே விண்ணப்பப்பணம் என அழைக்கப்படும். மீதித் தொகையான ஒதுக்கல் பணம் பங்குகள் ஒதுக்கப்படும் போது கொடுக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்பணமாகப் பெற்ற தொகையினை தனது செலவுப் பக்கத்திலும், வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதியை வரவுப் பக்கத்திலும் உள்ளடக்கும் பெயருள் கட்டுப்பாட்டுக் கணக்கே விண்ணப்ப/மனு ஒதுக்கல் கணக்கு (Application and Allotment) எனக் கூறப்படும். இதனைப் பின்வரும் அட்டவணை வாயிலாகத் தெளிவாக்கலாம்.

| நிகழ்வு | வரவு | செலவு |
|---|---|---|
| விண்ணப்பப் பணம் பெறல் | வங்கி | மனு ஒதுக்கல் |
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப் பணம் திருப்பியனுப்பல் | மனு ஒதுக்கல் | வங்கி |
| மேலதிக பணத்தை வைத்திருத்தல் | பதிவு இல்லை * | |
| பங்குகளை ஒதுக்குதல் | மனு ஒதுக்கல் | பங்கு மூலதனம்<br>பங்கு வட்டம் |
| ஒதுக்கல் பணம் பெறல் | வங்கி | மனு ஒதுக்கல் |
| மேலதிக அழைப்புகள் | 1ஆம் அழைப்பு,<br>2ஆம் ,, என்பன | பங்கு மூலதனம் |
| அழைப்புப் பணம் பெறல் | வங்கி | 1ஆம் அழைப்பு,<br>2ஆம் ,, என்பன. |

அழைப்புக் கணக்கும் எல்லாப் பங்குதாரர்களையும் கட்டுப்படுத்தும் இன்னுமொரு பெயருள் கணக்காகும்.

கைவசமுள்ள பங்குகளை விடக்கூடிய தொகையிலான பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைத்திருப்பின் நிராகரிக்கப்பட்டவை போக, மீதியை கம்பனி, விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த விகிதாசாரப்படி அவர்கட்கு பங்குகளை விநியோகிக்கும். இதனை விகிதாசார ஒதுக்கல் என அழைப்பர். இத்தகைய ஒதுக்கலில் விண்ணப்பதாரர் கோரிய பங்குகளை விட குறைந்த பங்குகளையே பெறுவதனால் அவரிடமிருந்து விண்ணப்பத்துடன் கிடைத்த மேலதிக பணம் ஒதுக்கலின்போது அவரிடமிருந்து கிடைக்க வேண்டிய பணத்திற்காக எடுக்கப்படும்.

* மனுவும், ஒதுக்கலும் ஒரே கணக்கில் இடம்பெறுவதனால் இவ்வாறு மேலதிக பணத்தை வைத்திருப்பதற்கான பதிவு இடம் பெறாது. மேலதிக விண்ணப்பப்பணம் ஒதுக்கல் பணத்திலிருந்து கழிக்கப்பட்டு மீதியே ஒதுக்கலின்போது பெறவேண்டிய பணமாகக் கொள்ளப்படும்.

வேறுபட்ட வகையைச் சேர்ந்த பங்குகள் வழங்கப்பட்டிருப்பினும் அவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு மனு ஒதுக்கல் அழைப்பு, கணக்குகள் பேணப்படும். ஒதுக்கல் கடிதம் தபாலில் சேர்க்கப்பட்டவுடனேயே கம்பனிக்கும், பங்குதாரருக்குமிடையில் முறையான ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு விடும்.

சில பங்குதாரர் தமது அழைப்புப் பணத்தை அழைக்க முன்பே முற்பணமாகச் செலுத்திவிடுவர். இது அழைப்பு முற்பணக் கணக்கில் (Calls in Advance) செலவு வைக்கப்பட்டிருக்கும். பின்னர் இது குறிப்பிட்ட அழைப்புக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்படும்.

மாறாக சில பங்குதாரர் அழைப்புப் பணத்தைச் செலுத்தத் தவறலாம். இது

அழைப்பு நிலுவைக் கணக்கில் (Calls in Arrears) வரவில் பதியப்படும். அல்லது அழைப்புக் கணக்கில் வரவு மீதியாக இருக்கும்.

## 3.0 பங்குகள்; பறிமுதலும் மீள விநியோகமும் (Forfeiture and Reissue of Shares)

பங்குதாரர் ஒருவர் ஒதுக்கல் பணம் அல்லது அழைப்பொன்றில் அல்லது அழைப்புக்களில் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்காமலிருப்பின் கம்பனி அப்பங்குகளைப் பறிமுதல் செய்யலாம். கம்பனிப் பங்குகளில் இதுவரை சேர்ந்துள்ள தொகை இதனால் கம்பனியின் வசமாகும். உ+ம்: விண்ணப்பத்தின் போது ரூபா /–, ஒதுக்கலின்போது ரூபா 3/- கொடுக்கவேண்டும் எனக் கொள்ளின், ஒதுக்கலிற்கான பணம் வராமல் ஒரு பங்கு மட்டும் பறிக்கப்பட்டால் பங்குப்பறிமுதலைப் பதிய பங்கு மூலதனத்திலிருந்து பங்கு பறிமுதல் கணக்கிற்கு இந்தப் பங்கில் இதுவரை கோரப்பட்ட தொகை மாற்றம் செய்யப்படும். (ரூபா 5/–) எனினும் ஒதுக்கற்பணம் இன்னமும் கொடுபடாமல் உள்ளமையால் அது பறிமுதற் கணக்கிற்கு எதிராகப் பதியப்பட்டு பறிமுதல் கணக்கு ரூபா 2/- ஐப் பறிமுதலினால் ஏற்பட்ட இலாபமாகக் காட்டும். இத் தொகையே கம்பனி விண்ணப்பத்துடன் பெற்ற தொகையாகும்.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் விலை குறிப்பிடப்பட்டு மீள விநியோகிக்கப்படலாம். இதன் மொத்தப் பெறுவனவு சமவிலைக்குக் குறைவாக இருக்கமாட்டாது. இதனது கணக்குப் பதிவுகள் பின்வருமாறிருக்கும்.

| நிகழ்வு | வரவு | செலவு |
|---|---|---|
| பங்குகள் பறிமுதல் செய்தல் | பங்கு மூலதனம் | பங்கு பறிமுதல் |
| அழைப்பு நிலுவை பங்கு பறிமுதல் கணக்கிற்கு மாற்றம் | பங்கு பறிமுதல் | அழைப்பு நிலுவை |
| பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் மீள விநியோகம் | மீள விநியோகம் | பங்குமுதல் |
| மீள விநியோக பணம் பெறப்படல் | வங்கி | மீள விநியோகம் |

ஒதுக்கல் பணம் கிடைக்காமலிருந்து பங்குகள் பறிக்கப்பட்டு ஒதுக்கல் பணம் பதிவழிக்கப்படும்போது ஒதுக்கலுடன் பங்கு வட்டமுமிருப்பின் அத்தொகை பங்குவட்டக் கணக்கிற்கு எதிராகப் பதியப்படல் வேண்டும். உ+ம்: விண்ணப்பத்தின் போது ரூபா 2/–, ஒதுக்கலின் போது ரூபா 5/- (பங்குவட்டம் ரூபா 2/-) பெறவேண்டியிருப்பின் ஒரு பங்கை மட்டும் பறிமுதல் செய்யும்போது பங்கு மூலதனக் கணக்கிலிருந்து பங்கு பறிமுதல் கணக்கிற்கு மாற்றப்படும் தொக ரூபா 5/– ஆகும் பங்கு வட்டக் கணக்கில் பதிவழிக்கப்பட்டு பறிமுதல் கணக்கிற்கு மாற்றப்படும் தொகை ரூபா 2/– ஆகும்.

பறிக்கப்பட்ட பங்குகள் மீள விநியோகிக்கப்படும் போது அதற்கான பதிவுகள் மீள விநியோகக் கணக்கிலோ பங்கு பறிமுதல் கணக்கிலேயோ மேற்கொள்ளப்படலாம்.

பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் மீள விநியோகிக்கப்படும்போது அவற்றின் அழைக்கப்பட்ட தொகையைவிடக் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படின் அக்குறைவு மீள் விநியோகத்தினால் ஏற்பட்ட நட்டமாகையால், பங்குப் பறிமுதலின் இலாபத்திலிருந்து (இதுவரை பெறப்பட்ட பணம்) ஈடுசெய்யப்பட்டு மீதி மீள் விநியோக இலாபமாக பங்குவட்டக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்படும்.

## 4.0 பங்கு வழங்கலை உறுதிப் பொறுப்பேற்றல் (Underwriting the Share Issue)

பங்குகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும்போது பணிசைக்காக விநியோகிக்கப்படாத பங்குகளைத் தான் வாங்குவதாக ஒருவர் உறுதியளிப்பின் அவர் உறுதிப் பெறுநர் ஆவார். இந்நிலையில் உறுதிப் பெறுநர் செலுத்தவேண்டிய தொகைகள் ஏனைய விண்ணப்பதாரர் செலுத்தவேண்டியதைப் போலவே அமையும்.

உறுதிப் பெறுநர் தான் ஏற்கும் ஆபத்துக்கு ஈடாக அவர் உறுதிகூறும் மூலதனத்தின் விகித அடிப்படையில் பணிசையைப் பெறுவார். இது கம்பனியால் ஒரு செலவாகக் கருதப்பட்டு பங்குவழங்க உண்டாகும் மற்றச் செலவுகளுடன் முற்றாகப் பதிவழிக்கப்படும்வரை ஐந்தொகையில் கற்பனைச் சொத்தாகக் காட்டப்படும்.

உறுதிப் பெறுநரிடமிருந்து பணம் பெறப்படும்போது அது ஏனையோரிடமிருந்து விண்ணப்பம், ஒதுக்கல் முதலியவற்றிற்காகப் பெறப்படும் பணத்தைப் போலவே பதியப்படும். எனினும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பணவிபரங்கள் ஒரு பொதுக்கட்டுப்படுத்தும் கணக்கில் சேர்க்கப்படும். ஆனால் உறுதிப் பெறுநரிடமிருந்து பெறப்படும் தொகை உறுதிப் பெறுநர் கணக்கு என அழைக்கப்படும் தனியானதொரு கணக்கில் சேர்க்கப்படும்.

வழங்கப்படும் பங்குகளின் ஒரு பகுதிக்காக மட்டும் உறுதிப் பெறுநருடன் உறுதிப் பொறுப்பு உடன்படிக்கையிருப்பின் அவருக்கு அந்தப் பகுதியை முழுத்தொகையுடன் ஒப்பிடக்கூடிய விகிதப்படியே பொறுப்பேற்பார். உ+ம்: 10,000 பங்குகளில் 75% மட்டுமே உறுதிப் பொறுப்பேற்கப் பட்டு, பொதுமக்கள் 4,000 பங்குகளை மட்டுமே பொறுப்பேற்றால் உறுதிப் பெறுநர் 7,500 பங்குகளிற்கான பணிசையைப் பெறுவார். எனினும் 6,000 பங்குகளின் ¾ விகிதத்தை மட்டுமே அவர் பொறுப்பேற்பார்.

உறுதிப்பெறுநர் உறுதியாக ஒரு குறிப்பிட்டளவு பங்குகளுக்கு விண்ணப்பித்தால் அந்தத் தொகையிலான பங்குகள், பொதுமக்களிடமிருந்து எவ்வளவு விண்ணப்பங்கள் கிடைத்தாலும் அவருக்கு ஒதுக்கப்படல் வேண்டும். இவ்வாறு ஏற்கப்படும் பங்குகள் பொதுமக்களால் ஏற்கப்படும் பங்குகளின் கூட்டுத்தொகையுடன் சேர்க்கப்பட்டே பொதுமக்களால் ஏற்கப்படாத பங்குகளாகக் கருதப்படும் பங்குகள் கணிக்கப்படும். உ+ம்: முன்னர் கூறப்பட்ட உதாரணத்தில் உறுதிப் பெறுநர் உறுதியாக 500 பங்குகளுக்கு விண்ணப்பித்திருப்பின் அவர் தனது ஒப்பந்தப் பிரகாரம் மேலதிகமாக வாங்கவேண்டிய பங்குகளின் தொகை 4,125 ஆகும். ( 10,000 - 4,500 இன் 75% ) பணிசை 7,125 பங்குகளிற்குக் கொடுக்கப்படும். (9,500 இன் 75%)

கம்பனிகள் சிலவேளைகளில் பொதிமுறையிலும் பங்குகளை வழங்கலாம். அதாவது, ஒன்றிற்கு மேற்பட்ட வகையான பங்குகளை வழங்குகையில் ஒரு பொதியில் குறிக்கப்பட்டளவு பங்குகளைவைத்து குறிக்கப்பட்ட பொதிகளை விற்பனை செய்யும். உ + ம்: ஒருகம்பனி ஒருபொதியில் 1,000 முன்னுரிமைப் பங்குகளையும், 1,500 சாதாரண பங்குகளையும் கொண்ட 100 பொதிகளை விநியோகிப்பின் 100,000 முன்னுரிமைப்பங்குகளுக்கும், 1,50,000 சாதாரண பங்குகளுக்கும் என்ற அடிப்படையிலேயே கணக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

உ + ம்: வரையறுக்கப்பட்ட ஏசியன் கம்பனி ஒவ்வொன்றும் ரூபா 10/- ஆன 2,60,000 சாதாரண பங்குகளை அனுமதித்த முதலாகக் கொண்டது. இதில் 2,00,000 பங்குகளை பூமுவதும் செலுத்தப்பட்டதாக சமவிலையில் வழங்கியிருந்தது.

கம்பனி தனது நிதித் தேவையின் பொருட்டு மீதிபங்குகளை பங்கொன்று

ரூபா 20/- விலையில் பின்வருமாறு வழங்கியது.

| | ரூபா |
|---|---|
| விண்ணப்பம் | 2.50 |
| ஒதுக்கல் (வட்டமுட்பட) | 12.50 |
| 1 ஆம் அழைப்பு | 3.00 |
| இறுதி அழைப்பு | 2.00 |
| | 20.00 |

90,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது. இவற்றில் நிராகரிக்கப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டவை போக மீதிப்பங்குகள் 7:6 என்ற விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்பட்டன.

1 ஆம் அழைப்பு விடுக்கப்பட்டபோது 200 பங்குகளை வைத்திருந்த ஒருவர் இறுதியழைப்புப் பணத்தைச் செலுத்தியதுடன் 400 பங்குகளை வைத்திருந்த ஒருவர் இரு அழைப்புக்களையும் செலுத்தத் தவறியுள்ளார்.

இப்பங்குகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு 300 பங்குகள் பங்கொன்று ரூபா 7.50 வீதம் மீள வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

''மேற்படி நடவடிக்கைக்கான நாட்குறிப்பும் ஐந்தொகையும் வருமாறு:

## நாட்குறிப்பு

| | வரவு | செலவு |
|---|---|---|
| வங்கி | 2,25,000 | |
| மனு ஒதுக்கல் | | 2,25,000 |
| (90,000 பங்குகளிற்கும் விண்ணப்பப் பணம் பெறப்பட்டது) | | |
| மனு ஒதுக்கல் | 50,000 | |
| வங்கி | | 50,000 |
| (நிராகரிக்கப்பட்ட பங்குகளுக்கான பணம் திருப்பியனுப்பப்பட்டது) | | |
| மனு ஒதுக்கல் | 9,00,000 | |
| சாதாரண பங்கு முதல் | | 3,00,000 |
| பங்கு வட்டம் | | 6,00,000 |
| (மனுவும் ஒதுக்கலும் வட்டத்துடன் முதலாக்கப்படும்போது) | | |
| *1 வங்கி | 7,25,000 | |
| மனு ஒதுக்கல் | | 7,25,000 |
| (ஒதுக்கல் பணம் பெறப்பட்டது) | | |
| 1ஆம் அழைப்பு | 1,80,000 | |
| சாதாரண பங்கு முதல் | | 1,80,000 |
| (1ஆம் அழைப்பு அழைக்கப்பட்டது) | | |
| வங்கி | 1,79,200 | |
| அழைப்பு நிலுவை | 1,200 | |
| அழைப்பு முற்பணம் | | 400 |
| 1ஆம் அழைப்பு | | 1,80,000 |
| (1ஆம் அழைப்பு பணம் நிலுவை கழித்தும் முற்பணத்துடனும் பெறப்பட்டது) | | |
| இறுதி அழைப்பு | 1,20,000 | |
| சாதாரண பங்கு முதல் | | 1,20,000 |
| (இறுதி அழைப்பு அழைக்கப்பட்டது) | | |

| | | |
|---|---|---|
| வங்கி | 1,18,800 | |
| அழைப்பு முற்பணம் | 400 | |
| அழைப்பு நிலுவை | 800 | |
| இறுதியழைப்பு | | 1,20,000 |
| (இறுதியழைப்பு பணம் முற்பணம், நிலுவை என்பன கழித்து பெறப்பட்டது) | | |
| பங்கு முதல் | 4,000 | |
| பங்கு பறிமுதல் | | 4,000 |
| (பறிமுதல் செய்யப்படும் பங்குகள் பங்கு முதல் கணக்கிலி ருந்து நீக்கம்) | | |
| பங்கு பறிமுதல் | 2,000 | |
| 1ஆம் அழைப்பு | | 1,200 |
| இறுதி அழைப்பு | | 800 |
| (1ஆம், இறுதி அழைப்பு நிலுவை பறிமுதல் கணக்கிற்கு மாற்றம்) | | |
| மீள விநியோகம் | | |
| சாதாரண பங்கு முதல் | 3,000 | |
| (மீள விநியோகிக்கப்படும் பங்குகள் முதலாக்கப்பட்டது.) | | 3,000 |
| வங்கி | | |
| மீள விநியோகம் | 2,250 | |
| (மீளவிநியோகப் பணம் பெறப்பட்டது) | | 2,250 |
| *2 பறிமுதல் | | |
| மீள விநியோகம் | 1,500 | |
| (பறிமுதல் செய்ததனால் ஏற்பட்ட இலாபம்) | | 1,500 |
| மீள விநியோகம் | | |
| *3 பங்கு வட்டம் | 750 | |
| (மீள விநியோகத்தினால் ஏற்பட்ட இலாபம்) | | 750 |
| *4 பங்கு பறிமுதல் | | |
| பங்கு பறிமுதல் | 500 | |
| | | 500 |

**வரையறுக்கப்பட்ட ஏசியன் கம்பனியின் 31 - 12 - 92 இல் ஐந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| **அனுமதிக்கப்பட்டமுதல்** | | | |
| ஒவ். ரூபா 10/= ஆன 2,60,000 சாதா. பங்குகள் | 26,00,000 | | |
| **வழங்கிய பங்கு முதல்** | | | |
| *5 ஒவ். ரூ. 10/=ஆனசா. பங்குகள் | 25,99,000 | **நடைமுறைச் சொத்துக்கள்** | |
| **ஒதுக்கங்கள்** | | *6 வங்கி | 32,00,250 |
| பங்கு வட்டம் | 6,00,750 | | |
| பறிமுதல் இலாபம் | 500 | | |
| | 32,00,250 | | 32,00,250 |

குறிப்புகள்

*1 கிடைத்த விண்ணப்பங்கள் 90,000
வழங்கியவை 60,000
விகிதாசார ரீதியில் ஒதுக்கியது 7:6

$$\text{எனவே } \frac{60,000}{6} \times 7 = 70,000$$

மீதி திருப்பியது 20,000

எனவே 10,000 பங்குகள் ஒதுக்கப்பட்டது
இவற்றுக்கான விண்ணப்பப்பணம் = 10,000 × 2.50 = 25,000
பெறவேண்டிய ஒதுக்கல் பணம் = 60,000 × 12.50
= 7,50,000
விண்ணப்பத்துடன் பெற்றது = 25,000
∴ பெறவேண்டிய ஒதுக்கல் பணம் 7,25,000

*2 பறிக்கப்பட்டு மீள விநியோகிக்கப்படும் பங்குகளின் முகப்பெறுமதி 300 × 10 = 3,000
இவற்றின் அழைப்பு நிலுவை 300 × 5 = 1,500
∴ பறிமுதல் கணக்கிலிருந்து மீள விநியோகத்திற்கு மாற்றம் 1,500

இதுவே பறிமுதல் இலாபமாகும். அதாவது இதுவரை அழைக்கப்பட்ட பெறுமதி ஆகும். (பறிமுதல் கணக்கிலேயே மீள் விநியோகம் இடம்பெறின் இத்தகைய நடைமுறை அவசியமற்றது.)

*3 மீள விநியோகம் 7.50 எனவே ரூபா 10/- பங்கொன்று ரூபா 7.50 இற்கு விநியோகிக்கப்படுவதால் ரூபா 2.50 நட்டமாகும் எனவே, 300 பங்குகளுக்கும் 300 × 2.50 = 750/- இதனை மேற்படி பறிமுதல் இலாபத்தில் ஈடு செய்யின் 1.500—750 = 750/- இதுவே மீள் விநியோக இலாபமாகும்.

*4 பறிமுதல்செய்யப்பட்டவை மட்டும் 100 பங்குகள். இவற்றுள் இதுவரை பங்கொன்றுக்கு கிடைத்த பணம் = ரூபா 5/- எனவே பறிமுதல் இலாபம் = 100 × 5 = 500/- இது பறிமுதல் கணக்கிலேயே மீதியாக இருக்கும்.

*5 ஏற்கனவே 200,000 பங்குகள் சமவிலையில் வழங்கப்பட்டுள்ளமையால் பங்குமுதல் கணக்குமீதி ரூ. 20,00,000/- உடன் வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி ரூ. 5,99,000/- சேர்க்கப்பட்டே 25,99,000/- ஆகும்.

*6 மேற்படி ரூ. 20,00,000/- பெறுமதியான சொத்து வங்கியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

## REFERENCES


i) Frank Wood : "Business Accounting Volume 2"
Sixth Edition - 1988

ii) Jennings A.R : "Financial Accounting Manual 1"
Third Edition - 1986

iii) Paul Gee : "Spicer and Pegler's Book keeping and Accounts",
Twentieth Edition 1988

iv) இலங்கைப் பட்டயக் கணக்காளர் சங்க பாடக் குறிப்புக்கள்.

# உற்பத்திக் கணக்கு / பரும்படியாக்கற் கணக்கு / கையாக்கற் கணக்கு
## ( MANUFACTURING ACCOUNT )

ப. கலைந்தினி
94 — வர்த்தகம்

மூலப் பொருட்களை முடிவுப் பொருட்களாக மாற்றுகின்ற நடவடிக்கைகள் உற்பத்தி என அழைக்கப்படுகிறன.

இவ்வாறான உற்பத்தி நடவடிக்கையால் உண்டாகின்ற மொத்த உற்பத்திச் செலவை அறிந்துகொள்வதற்காக தயாரிக்கப்படுகின்ற கணக்கு உற்பத்திக் கணக்கு என அழைக்கப்படுகின்றது. இம் மொத்த உற்பத்திச் செலவானது பின்வருமாறு இரண்டு வகைப்படுத்தப்படுகின்றன.

1. நேர்ச் செலவுகள் அல்லது திரவியச் செலவுகள்.
2. நேரில் செலவுகள் அல்லது மேந்தலைச் செலவுகள்.

### நேர்ச் செலவுகள்

உற்பத்தி அலகுடன் நேரடியாக தொடர்புபடுகின்ற செலவுகள் நேர்ச் செலவுகள் என அழைக்கப்படுகின்றன. இந்நேர்ச் செலவுகளானவை உற்பத்தி அலகுகளின் மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாற்றமடையக் கூடியவையாகும். இந்நேர்ச் செலவுகளிலிருந்து ஒரு அலகிற்கான சரியான செலவுப் பெறுமதியை அறிந்து கொள்ள முடியும்.

இச் செலவுகள் உற்பத்தி அலகுகளின் மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாற்றமடைகின்ற காரணத்தால் மாறும் செலவுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

உதாரணமாக:- மூலப் பொருட் செலவு, உற்பத்திக்கூலி, தனி உரிமைக் கட்டணம்.

### நேரில் செலவுகள்

உற்பத்தி அலகுகளுடன் நேரடியாக தொடர்புபடாத செலவுகள் நேரில் செலவுகள் என அழைக்கப்படுகின்றன. இந்நேரில் செலவுகளானவை உற்பத்தி அலகுகளின் மாற்றங்களுக்கு ஏற்றவாறு மாற்றமடையமாட்டாது. இந்நேரில் செலவுகளிலிருந்து ஒரு அலகிற்கான செலவுப் பெறுமதியை அறியமுடியாது.

இச் செலவுகள் உற்பத்தி அலகுகளின் மாற்றங்களிற்கு ஏற்றவாறு மாற்றமடையாத காரணத்தினால் நிலையான செலவுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

உதாரணமாக:-

தொழிற்சாலை வாடகை இறை, தொழிற்சாலை காப்புறுதி.

உற்பத்தி வியாபார நிறுவனம் ஒன்றிலே காணக்கூடிய இருப்புக்களானவை

1. மூலப்பொருள் இருப்பு
2. புத்துருவாகும் வேலை இருப்பு
3. முற்றுப்பெற்ற பண்டங்களின் இருப்பு.

### புத்துருவாகும் வேலை / குறைவேலை /முடிவடையாத பண்டங்கள்

மூலப் பொருட்களாகவோ அன்றி முடிவுப் பொருட்களாகவோ அன்றி இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் காணப்படுகின்ற பொருட்கள் குறைவேலைப் பொருட்கள் என அழைக்கப்படுகின்றன.

இப்புத்துருவாகும் வேலை கையிருப்பு பெறுமானமானது பின்வரும் இரண்டு செலவுப் பெறுமதிகளில் பெறுமதி இடப் படலாம்.

1. மூலச் செலவில் பெறுமானம் இடப் படுதல்.
2. தொழிற்சாலை மேந்தலை உள்ள டக்கிய செலவில் பெறுமானம் இடப் படுதல்.

குறிப்பு:

புத்துருவாகும் வேலைக் கையிருப் பானது சாதாரணமாக தொழிற்சாலை மேந்தலை உள்ளடக்கிய பெறுமானத்திலே மதிப்பிடப்படும். எனினும் புத்துருவாகும் வேலைக் கையிருப்பானது தொழிற்சாலை மேந்தலை சேர்க்கப்படாது மூலச்செலவு பெறுமானத்தில் மட்டும் கணிப்பிடப் பட்டது என குறிப்பிட்டு சொல்லப்படின் உற்பத்திக் கணக்கில்புத்துருவாகும் வேலைக் கையிருப்பிற்கான சீராக்கப் பதிவுகள் தொழிற்சாலை மேந்தலைச் செலவுகளுக்கு மேல் செய்யப்படல் வேண்டும்.

## பயன்படுத்திய மூலப்பொருட் செலவு/ நுகரப்பட்ட மூலப்பொருட் கிரயம்

ஒரு குறிப்பிட்ட நிதியாண்டுக் காலத்தில் உற்பத்திக்காக பயன்படுத்திய மூலப் பொருட்களின் பெறுமதி பயன்படுத்திய மூலப்பொருட் செலவு எனப்படும்.

இச்செலவுப் பெறுமானமானது ஆரம்ப மூலப் பொருட் கையிருப்புடன் மூலப் பொருட் கொள்வனவுப் பெறுமானத்தைக் கூட்டி இறுதி மூலப் பொருட் கையிருப்பை கழிப்பதன் மூலம் பெறப்படும்.

## மூலச்செலவு / திரவியச்செலவு / முதற்செலவு

உற்பத்திப் பொருட்களின் மொத்த உற்பத்திச் செலவுகளின் மீது காணப்படு கின்ற பெறுமதி வாய்ந்த செலவுகளின் அளவு திரவியச் செலவு என அழைக்கபடு கின்றது. இச் செலவானது பின்வருவன வற்றை கொண்டிருக்கும்

1. பயன்படுத்திய மூலப் பொருட்களின் செலவு
2. உற்பத்திக் கூலிகள்
3. உற்பத்தி மீதான தனியுரிமைக் கட்டணம்
4. பிறநேர்ச் செலவுகள்

## ஆக்கிய பொருட் செலவு

மூலப் பொருட்களை முடிவுப் பொருட் களாக மாற்றப்படுகின்ற வரைக்கும் ஏற்ப டுகின்ற சகல செலவுகளினதும் மொத்தப் பெறுமதி ஆக்கிய பொருட் செலவு என அழைக்கப்படுகின்றது. இவ் ஆக்கிய பொருட் செலவானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும்.

1. பயன்படுத்திய முலப் பொருட் செலவு
2. உற்பத்திக் கூலிகள்
3. உற்பத்திக்கான தனியுரிமைக் கட்டணம்
4. பிறநேர்ச் செலவுகள்
5. தொழிற்சாலை மேந்தலைகள்

இம் மொத்த உற்பத்திச் செலவிற்கான இரட்டைப்பதிவானது வருமாறு:

**வியாபாரக் க/கு : வரவு**
**உற்பத்திக் க/கு : செலவு**

## உற்பத்தி இலாபம்

தொழிற்சாலையில் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதால் உழைக்கப்படும் இலாபம் உற்பத்தி இலாபம் எனப்படும். இவ்வாறான உற்பத்தி இலாபமானது கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்படுமா யின் இவ் உற்பத்தி இலாபத்துக்கான

இரட்டைப் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு உற்பத்தி இலாபம் கணக்குகளுக்கு எடுத்து கொள்ளப்படும் போது ஆக்கிய பொருட் செலவுடன் உற்பத்தி இலாபம் சேர்க்கப்பட்ட விலையிலேயே தொழிற்சாலையில் முடிக்கப்படும் பண்டங்கள் வியாபாரப் பகுதிக்கு அனுப்பப்படும். இவ்வாறான உற்பத்தி இலாபமானது பயன்படுத்திய மூலப்பொருட் செலவிலோ அல்லது மூலச்செலவிலோ அல்லது ஆக்கிய பொருட் செலவிலோ கணிப்பிடப்படலாம்.

இவ் உற்பத்தி இலாபத்திற்கான இரட்டைப் பதிவு வருமாறு:

**உற்பத்திக் க/கு** : வரவு
**இலாபநட்டக் க/கு** : செலவு

இவ்வாறு முடிந்த பண்டங்கள் வியாபாரப்பகுதிக்கு மாற்றப்பட்டு அந்நிதியாண்டு இறுதித் திகதிவரை அப் பொருட்கள் விற்பனை செய்யப்படாத நிலையில் காணப்படின் அவை இறுதியிருப்பு பெறுமானத்துக்கு எடுக்கப்படும் போது பின்வருமாறு இரு விலைகளில் பெறுமானம் இடப்படலாம்.

1. முடிவுப் பொருள் கையிருப்புக்கள் மீது கைக்கெட்டாத இலாபம் அல்லது தேறாத இலாபம் அல்லது உற்பத்தி இலாபம் சேர்க்கப்படாத நிலையில் பெறுமானம் இடப்படல்
2. முடிவுப் பொருள் கையிருப்புக்கள் மீது கைக்கெட்டாத இலாபம் அல்லது தேறாத இலாபம் அல்லது உற்பத்தி இலாபம் சேர்க்கப்பட்ட நிலையில் பெறுமானம் இடப்படல்.

### கைக்கெட்டாத இலாபம் சேர்க்கப்படாது முடிந்த பண்டங்களின் கையிருப்பு பெறுமானம் இடப்படல்

உற்பத்தி பகுதிலிருந்து வியாபாரப் பகுதிக்கு முடிந்த பண்டம் அனுப்பப்படும் போது ஆக்கிய பொருட்செலவுடன் உற்பத்தி இலாபம் சேர்க்கப்பட்டநிலையில் அனுப்பப்படுகிறது. இவ்வாறு அனுப்பப்பட்ட பண்டங்கள் வியாபார நிலையத்தில் இறுதி இருப்பு பெறுமானத்துக்கு எடுத்து கொள்ளப்படும் போது கைக்கெட்டாத இலாபம் கவனம் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை என குறிப்பிட்டு சொல்லப்படின் கணக்குகளில் தேறாத இலாபம் சம்பந்தமான சீராக்கப் பதிவுகள் மேற்கொள்ளப்படலாகாது.

### கைக்கெட்டாத இலாபம் சேர்க்கப்பட்ட நிலையில் முடிவுப் பொருள் கையிருப்பு பெறுமானம் இடப்படல்

வியாபார நிலையத்துள் முடிந்த பண்டங்கள் பெறுமானம் இடப்படும்போது கைக்கெட்டாத இலாபம் சேர்க்கப்பட்ட நிலையில் மதிப்பீடு செய்யப்படுமாயின் அவ்வாறான இருப்புக்களுக்குள் சேர்ந்துள்ள இலாபம் தேறாத இலாபம் எனப்படும்.

இவ்வாறான தேறாத இலாபத்துக்கு அந்நிதியாண்டு இறுதித் திகதியில் ஏற்பாடு செய்யப்படும் நடவடிக்கை தேறாத இலாப ஏற்பாடு எனப்படும். இதற்கான இரட்டைப் பதிவு வருமாறு:

**இலாப நட்ட க/கு** : வரவு
**தேறாத இலாப ஏற்பாட்டு க/கு** : செலவு

இதன்படி தேறாத இலாப ஏற்பாட்டுக் கணக்கிலுள்ள செலவு மீதியானது ஐந்தொகையில் முடிந்த பண்டங்களின் இறுதி இருப்பிலிருந்து கழித்துக் காட்டப்படும்.

### தேறாத இலாப ஏற்பாட்டின் சீராக்கம்

ஒவ்வோர் நிதியாண்டு இறுதித் திகதியிலும் இருக்கும் முடிவுப் பொருள் கையிருப்புக்கேற்ப தேறாத இலாப ஏற்பாட்டு கணக்கு மீதியானது ஒவ்வோர் நிதியாண்டு இறுதித் திகதியிலும் செம்மை யாக்கப்படும் நடவடிக்கை தேறாத இலாப ஏற்பாட்டின் சீராக்கம் எனப்படும்.

இவ்வாறு தேறாத இலாப ஏற்பாடா னது சீராக்கப்படும்போது தேறாத இலாப ஏற்பாட்டில் பற்றாக்குறையோ அன்றி மிகையோ ஏற்படலாம்.

### தேறாத இலாப ஏற்பாட்டின் பற்றாக்குறை

தேறாத இலாப ஏற்பாட்டின் ஆரம்ப மீதியை விட இறுதிமீதி அதிகரிக்குமாயின் அவ்விருமீதிகளிற்கும் இடையிலான வித்தியாசம் தேறாத இலாப ஏற்பாட்டின் பற்றாக்குறை எனப்படும். இப்பற்றாக்குறை ஏற்பாட்டிற்கான இரட்டைப் பதிவு வருமாறு:

இலாப நட்டக் க/கு : வரவு
தேறாத இலாப ஏற்பாட்டுக் க/கு : செலவு

### தேறாத இலாப ஏற்பாட்டின் மிகை

தேறாத இலாப ஏற்பாட்டின் ஆரம்ப மீதியை விட இறுதிமீதி குறைவாக காணப் படின் அவ்விரு மீதிகளுக்கும் இடையிலான வித்தியாசம் தேறாத இலாப ஏற்பாட்டின் மிகை எனப்படும். இம்மிகை ஏற்பாட்டின் இரட்டைப் பதிவு வருமாறு.

தேறாத இலாப ஏற்பாட்டுக் க/கு : வரவு
இலாப நட்டக் க/கு : செலவு


## உசாத்துணை நூல்கள்

**Business Accounting** — Frank Wood
**Foundation Accounting** — Milli Champ


இலங்கையின் சப்புகஸ்கந்தை, வெலிமடை என்னும் இடங்களில் புதிய கைத்தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு தேசிய அபிவிருத்திவங்கி கடனுதவி செய்துள்ளது. இதில் சப்புகஸ கந்தையில் மட்டும் 50 தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★

''மேல்மாகாண கைத்தொழில் அபிவிருத்திச்சபை'' என்னும் கைத்தொழில்சார் அமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இதன்மூலம் கைத்தொழில்கள் நவீனமயப்படுத்தப்படும். தொழிலாள ருக்கு நிதிஉதவிகள் வழங்கப்படும். அதிக வேலைவாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கமுடியும்.

மேலும் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு கடனுதவி வழங்க ''கைத்தொழில் அபிவிருத்தி நிலையம்'' என்ற ஒரு அமைப்பும் அமைக்கப்படும்.

# சிறிய நடுத்தரக் கைத்தொழிற் திட்டம்
# (SMALL AND MEDIUM INDUSTRY PROJECTS)

**மா. சின்னத்தம்பி**
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

## 1.1 அறிமுகம்

கைத்தொழில் துறையில் உள்நாட்டு முதலீடுகளை வெளிநாட்டு முதலீடுகளுடன் இணைந்த வகையிலும், தனியாகவும் ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் 1978 இன் பின்னர் அரசின் தனியார் மயப்படுத்தும் கொள்கையுடன் இணைந்த வகையில் மேற்கொள்ளப்படலாயின. கைத்தொழிற்துறை அபிவிருத்திக்காக புதிய ஊக்குவிப்புத்தொகுதிகளை உருவாக்குதல், பிரதேச சபைப் பிரிவுகளில் ஆடைத் தொழிற்சாலைகள் 200 ஐ நிறுவுதல், மாகாணங்களிலான கைத்தொழில் மேம்பாட்டினை ஊக்குவிக்கும் கைத்தொழிற் பணிக் குழுக்களை உருவாக்குதல், தனியார் கைத்தொழிற் பேட்டைகளை உருவாக்குவதற்கு ஊக்கமளித்தல், அரச துறைக் கைத்தொழில்கள் பலவற்றை வரையறுக்கப்பட்ட கூட்டு நிலையங்களாக மாற்றுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுடன் இணைந்த வகையில் அரசினால் ஊக்குவிக்கப்பட்டு வரும் திட்டமே சிறிய நடுத்தரக் கைத்தொழிற் (சி.ந.கை.) செயற் திட்டமாகும்.

உள்நாட்டில் காணப்படும் மூலதனப் பற்றாக்குறை, செலாவணிப் பிரச்சினை, தொழில்நுட்ப குறைவளர்ச்சி, சிறியளவான சந்தை போன்ற காரணிகளினால் பாரிய கைத்தொழில்களில் தனியாரை ஊக்குவிப்பதில் காணப்படும் பிரச்சினைகளை கருத்திற்கொண்டே சிறிய நடுத்தரக் கைத்தொழில்களை ஊக்குவிப்பது அதிகம் பொருத்தப்பாடாக இருக்குமென அரசாங்கம் கருதியது. இம்முயற்சி நீண்டகாலத்தில் இலங்கையின் கைத்தொழில் மயமாக்கத்துக்கு உதவக்கூடியதாயமையும்.

ஏற்றுமதிக் கைத்தொழில்கள் முதலீட்டுச் சபையின் வழிப்படுத்தலில் செயற்படும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களூடாகப் பெருமளவிற்கு அந்நிய முதலீடு சார்ந்ததாக ஏற்படும்போது சுதேச மட்டத்தில் நடுத்தர அளவிலானதும், சிற்றளவிலானதுமான கைத்தொழில் வளர்ச்சி கிராமிய வளங்களின் உச்சப்பயன்பாட்டையும் தொழில் வாய்ப்பு பெருக்கத்தையும் தூண்டுவதற்கு உதவும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

சிறிய நடுத்தரக் கைத்தொழிலில் முதலிடுமாறு தனியாரைத் தூண்டுவதில் தேசிய அபிவிருத்தி வங்கி நிதிசார் ஊக்குவிப்புத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப் படுத்தி வருகின்றது. 1979 இல் ஆரம்பிக்கப்பட்ட சிறு நடுத்தர கைத்தொழில் திட்டமானது தொடர்ச்சியாக I, II, III, IV என நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

## 1.2 மத்திய வங்கியின் பங்கு

மத்திய வங்கியானது தான் ஓர் அபிவிருத்திக்குரிய உதவியாளன் என்ற வகையில் சிறு நடுத்தரக் கைத்தொழில் திட்டத்திற்கு உதவி வருகின்றது. கடன் உத்தரவாதமளிப்பதன் மூலம் தனது பங்கினை ஆற்றி வருகின்றது.

கடன்களுக்கெதிராக ஏற்கத்தக்கபிணைகளைக் காட்டமுடியாத துறைகளில் மத்திய வங்கி கடன் உத்தரவாதங்களை வழங்குகின்றது. சிற்றளவுக் கைத்தொழில்களுக்கு (Small Scale Industries) 1979 வரை உத்தரவாதம் வழங்கியது. 1979 இலிருந்து சிறு நடுத்தரக் கைத்தொழில்களுக்கு கடன் உத்தரவாதம் செய்துவருகின்றது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துக்கும் (IDA) இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தப்படி இதனை வழங்குகிறது.

நாணயச் சட்டத்தின் 108 A பிரிவின் படி சிறு நடுத்தரக் கைத்தொழில் செயற் திட்ட கடன் உருவாக்கப்பட்டது. சர்வ தேச அபிவிருத்திச் சங்கத்தினால் மீள்நிதி வழங்கப்படுகிறது. இதனை தேசிய அபி விருத்தி வங்கியே நிர்வகித்துவருகின்றது. சிறுநடுத்தர கைத்தொழில் 1—4 வரை யான திட்டங்கள் மூலமாக இதனை நிறை வேற்றி வருகின்றது.

## சிறு நடுத்தரக் கைத்தொழில் திட்டம்—I

1979—82 காலப்பகுதிக்குரிய செயற் திட்டமாக இது வடிவமைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் 1670 உத்தரவாதங் களின் கீழ் 286 மில்லியன் ரூபா பெறுமதி யான கடன்கள் வழங்கப்பட்டன. ஆயினும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களான பெரும்பாலான வணிக வங்கிகள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல் களைச் சரியாகப் பின்பற்றாமையினால், 1992 இறுதியில் 30 மில்லியன் ரூபா பெறு மதியான 112 உத்தரவாதங்கள் காலாவதி யாகின அல்லது ஒதுக்கப்பட்டன. வடகிழக்கு மாகாணங்களினால் சமர்ப்பிக் கப்பட்ட உரிமைக் கோரல்கள் பரி சோதனையின்றியே மத்திய வங்கியின் பொறுப்பில் 50%த்தை மிஞ்சாத தேவைக்கு வழங்கப்பட்டது. இதன்படி 2.1 மில்லியன் ரூபாவுக்குரிய கொடுப்பனவு நிகழ்ந்தது. 2 மில்லியன் ரூபா மீளச்செலுத்தப்பட்ட வேளை 4.8 மில்லியன் பெறுமதியான உரிமைக் கோரல்கள் 28ஐ மத்திய வங்கி நிராகரித்தது. இதற்கு வங்கிகள் சரியான விதிகளைப் பின்பற்றாமையே காரண மாகும்.

## சி. ந. கை. திட்டம் – II

1982—1989 காலப்பகுதிக்குரியதாகும். இக்காலப்பகுதியில் 2531 கடன்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. 442 மில்லி யன் ரூபா பெறுமதியான 1111 கடன்கள் முற்றாக திருப்பிச் செலுத்தப்பட்டன. பங்கேற்கும் கடன் நிறுவனங்கள் சரியான முறையில் விதிகளைப் பின்பற்றாமை யினால் 167 மில்லியன் ரூபா பெறுமதி யான 340 உத்தரவாதங்கள் காலாவதி யாகின. அல்லது ஒதுக்கப்பட்டன. 1992 இறுதியில் 30 மில்லியன் ரூபா பெறுமதி யான 204 உரிமைகோரல்கள் பெறப்பட் டன. இவற்றில் 26 மில்லியன் பெறுமதி யான 1132 உரிமைகோரல்கள் தீர்க்கப் பட்டன. வடக்கு கிழக்குப் பகுதிக்குரிய வற்றில் 9.1 மில்லியன் ரூபா பெறுமதியான 39 உரிமைகோரல்கள் நிராகரிக்கப்பட் டன. 1992 இறுதியில் 165 மில்லியன் ரூபா பெறுமதியான மத்திய வங்கி உத்தர வாதத்தால் பொதுப்பிணையுடைய 287 மில்லியன் ரூபா பெறுமதியான 923 கடன் கள் தொழிற்பாட்டில் காணப்பட்டன.

## சி. ந. கை திட்டம்—III

1988-1991 காலப்பகுதிக்குரிய திட்டமே இதுவாகும். 1992 இறுதியில் 1955 மில்லி யன் ரூபா பெறுமதியான 3129 கடன் களுக்கு மாத்திரம் உத்தரவாதமளிக்கப் பட்டது. பங்கேற்கும் கடன் நிறுவனங் களின் சம்மதத்துடன் இதில் ஒப்புதலளிக் கப்பட்ட மீள்நிதியிடல் கடன்கள் தேசிய அபிவிருத்தி வங்கியினால் சி. ந. கை. iv திட்டத்திற்கு மாற்றப்பட்டது.

இதன்கீழ் உத்தரவாதமளித்த 3129 கடன்களில் 39 மில்லியன் கொண்ட 227 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப் பட்டிருந்தன. ஆனால் வங்கிகள் சரியான விதிமுறைகளைப் பின்பற்றாமை காரண மாக 202 மில்லியன் பெறுமதியான 267 கடன்கள் காலாவதியாகின அல்லது ஒதுக் கப்பட்டன. 1992 இறுதியில் 13 மில்லியன் பெறுமதியான மத்திய வங்கியின் உத்தர வாதப் பொறுப்புடைய 36 உரிமைக் கோரல்கள் பெறப்பட்டன. இதில் 3.4 மில்லியன் பெறுமதியான 16 உரிமைக் கோரல்கள் தீர்க்கப்பட்டதோடு 1.7 மில்லி யன் பெறுமதியான 5 உரிமைக் கோரல்கள் நிராகரிக்கப்பட்டன.

1992 இறுதியில் 759 மில்லியன் ரூபா பெறுமதியான உத்தரவாதப் பொறுப்புடைய 1128 மில்லியன் பெறுமதியான 2614 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன.

## சி. ந. கை. திட்டம்—IV

நாணயச்சபை அனுமதியோடு 1991 நவம்பரில் இது தொடக்கப்பட்டது. 1992 மார்ச்சில் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. 1992 இறுதிவரை 1916 மில்லியன் ரூபா பெறுமதியான 2621 கடன்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. மத்திய வங்கியின் பொறுப்பு 1137 மில்லியனாக விளங்கியது. 1.3 மில்லியன் பெறுமதியான 6 கடன்கள் முழுமையாகத் தீர்க்கப்பட்டன. 22 உத்தரவாதங்களை மத்தியவங்கி ஒதுக்கியது. 1992 முடிவில் 2592 உத்தரவாதங்கள் செயற்பாட்டிலிருந்தன. இவற்றில் 579 மில்லியன் மத்திய வங்கியின் பொறுப்பாக காணப்பட்ட 84 மில்லியன் பெறுமதியான கடன்கள் உள்ளடங்கியிருந்தன.

சி. ந. கை. iv திட்டத்தின் கீழ் உத்தரவாதக் கட்டுப்பணம் முன்னைய மூன்று திட்டங்களிற் காணப்பட்டதைப் போலன்றி வருடாந்தம் சேகரிக்கப்படலாயின. 1992 முடிவில் 2.6 மில்லியன் சேகரிக்கப்பட்டது. 1992 முடிவில் உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை 113.7 மில்லியனாகக் காணப்பட கடன்தொகை 191.5 மில்லியனாகவே விளங்கியது.

## தேசிய அபிவிருத்தி வங்கியின் பங்கு

சி. ந. கை. அபிவிருத்தித் திட்டத்தில் இத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக மீள் நிதிவழங்கும் செயற்பாட்டை தேசிய அபிவிருத்தி வங்கியே பொறுப்பேற்று நடாத்துகின்றது. பாரிய செயற்திட்டங்களுக்கு நிதியளிக்கும் போது கடைப்பிடிக்கும் அதே நியதிகள், நிபந்தனைகள் என்பனவற்றின் அடிப்படையிலேயே சி. ந. கை. செயற்திட்டத்துக்கும் நிதிஉதவிகளை வழங்குகின்றது. ஏனைய வணிக வங்கிகளும், நிதிக் கூட்டுத்தாபனமும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

இச்செயற்திட்டத்துக்கு இந்நிறுவனம் 1984 ல் 224. 1 மில்லியன் வழங்கியது. 1887 கடன்களை அனுமதித்து. 1988 இல் 285. 1 மில்லியனை வழங்கியது. 489 கடன்களை அனுமதித்திருந்தது. தொடர்ந்தும் உலக வங்கி, மத்திய வங்கி ஆகியவற்றின் நிதியுதவி மூலம் சி. ந. கை. செயற்திட்டங்களை மீள்நிதி வழங்கி ஊக்குவித்து வருகின்றது. இந்நிறுவனம் வழங்கிய மிகப் பெரிய மீள்நிதித்தொகை சி. ந. கை. திட்டத்துக்கானதேயாகும்.

## 1.4. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள்

சி. ந. கை. அபிவிருத்தித்திட்டத்தில் பல வணிகவங்கிகள் நிதியுதவி வழங்கி பங்காற்றி வருகின்றன. இவை மீள்நிதி பெறுதற்கு மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களைச் சீராகப் பின்பற்றவேண்டும். ''ஒப்பேற்றுவல்லமை'' உடைய தொழில்களுக்கே இவை கடன்வழங்க வேண்டும். பெற்ற கடனைத் திருப்பிச்செலுத்தும் ஆற்றலைக் கொண்டிருப்பதோடு தொழில் முயல்வோருக்கு நியாயமான வருமானத்தையும் கொடுக்கக் கூடியதாயிருத்தல் ''ஒப்பேற்றுவல்லமை'' எனப்படும். இத்தகைய ஒப்பேற்று வல்லமையைப் பரிசோதிக்க நிறுவனங்களின் சந்தைப்படுத்தல், நிதியியல், தொழில் நுட்பம், முகாமைத்துவம் ஆகிய அம்சங்கள் தொடர்பாக தகவல்களைத்திரட்ட வேண்டும். முதலீட்டாளர் இலாபகரமாக இயங்குதற்குரிய ஆலோசனைகளையும் இவர்கள் வழங்க வேண்டும்.

இலங்கை வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், சம்பத் வங்கி (1988 இல் இருந்து) போன்றன பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக செயற்பட்டு உதவி வருகின்றன.

## 1 5. சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA)

1989 இறுதிவரை இந்நிறுவனம் இரண்டு நிலைகளில் 1.3 பில்லியன் டொலரை மொத்தமாக வழங்கியுள்ளது. இத்தொகை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு கொடுக்கப்படும். இவ் வங்கி பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதி வசதியுடன் வழங்கும். அவை உபகடன் பெறுவோருக்கு கடன்வசதி செய்து கொடுக்கும்.

1988 இல் தேசிய அபிவிருத்திவங்கி, உலகவங்கியுடனும் ஆசியா அபிவிருத்தி வங்கியுடனும் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டதன் விளைவாக மூன்றாம் நிலையாக 35 மில்லியன் டொலரைப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 1.6. கைத்தொழில் அபிவிருத்திச்சபை (IDB)

சி. ந. கை. செயற்திட்டத்தில் உள்ளடங்கும் ஒன்பது வகைப்பட்ட தொழில்களுக்கும் தேவைப்படுகின்ற தொழில் நுட்பம் தொடர்பான பல்வேறு உதவிகளையும் கைத்தொழில் அபிவிருத்திச்சபை வழங்கி வருகிறது. இந்நிறுவனம் தொடக்கப்பட்ட 1966 காலப்பகுதியிலிருந்தே சிற்றளவுக் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவி புரிந்து போதிய அனுபவத்தைக் கொண்டதாக இந்நிறுவனம் விளங்குகின்றது.

## 1 7 தொழில் நுட்ப மாற்றத்துக்கான மானியம்

சிறு கைத்தொழிளாளரின் தொழில் நுட்ப பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், உற்பத்திப்பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்கும் உற்பத்தியை விருத்தி செய்வதற்கும் தகுதி வாய்ந்த கைத்தொழிற் பிரிவுகளுக்கு திருப்பிச்செலுத்த தேவையற்ற வகையில் முதலுதவி வழங்கப்படுகிறது. இதற்குரிய நிதியை தேசிய அபிவிருத்திவங்கி உலகவங்கியின் உதவியுடன் வழங்கி வருகிறது.

உற்பத்தி அபிவிருத்தி, சாமர்த்தியமான விருத்திமுறைகள், மேற்பார்வையிடுதலுக்கான பயிற்சி, தொழிற்சாலைகளைப் பார்வையிடச்செல்லுதல் போன்ற நடைமுறைகள் சார்ந்து மாற்றற் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. ஏற்றுமதித் தேவைகளை நிறைவுசெய்தல், அதற்கான ஆராய்ச்சி, அபிவிருத்திமுயற்சிகள், மாதிரி விநியோகமுறை, விற்பனை வாய்ப்புப் பரிசோதனை போன்ற தேவைகளுக்கு மானியம் இரட்டிப்பான அளவில் வழங்கப்படுகிறது.

இத்தேவைக்கென 3,75,000 டொலர் ஒதுக்கப்பட்டிருந்தது ஒவ்வொரு தொழிலுக்கும் 1,75,000 ரூபா அல்லது செலவீட்டின் 50% நிதியுதவியாக வழங்குவதற்கு ஏற்பாடுண்டு.

## 1 . 8 நிறைவேற்றம்

இச்செயத்திட்டத்தின்கீழ் தேசியஅபிவிருத்திவங்கி, மிகப்பெரிய மீள்நிதியை வழங்கி வருகிறது. 1992 முடிவுவரை 9 வகையான கைத்தொழில்களுக்கு வழங்கியுள்ளது. சி. ந. கை. iv இன் படி 2083 செயற்திட்டங்களுக்கு 100.663 மில்லியன் ரூபாவரை மீள்நிதியாக வழங்கி உள்ளது. இவற்றில் உணவு, குடிபானங்கள், புகையிலை சார்ந்த தொழில்களே கூடியளவான 442 செயற்திட்டங்களைக் கொண்டிருந்ததோடு 217.46 மில்லியன் ரூபாவைபெற்றிருந்தன. உற்பத்தி சார்ந்த கைத்தொழில்கள் மிகக்குறைந்த அளவான 72 செயற்திட்டங்களுக்கென 40 72 மில்லியனைப் பெற்றிருந்தன.

இலங்கை மத்தியவங்கியானது சி. ந. கை. I, II, III, IV திட்டங்களின்கீழ் கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கி ஊக்குவித்து வருகின்றது. 10,718 உத்தரவாதங்களை வழங்கி 5005 மில்லியன்ரூபா கடனைப் பகிர்ந்தளித்துள்ளது.

## 1992இன்படி செயற்பாடு — உத்தரவாதம்

| | எண்ணிக்கை | பெறுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| சி. ந. கை I | 1670 | 286 . 10 |
| சி. ந. கை II | 2531 | 1392 . 54 |
| சி. ந. கை III | 2129 | 1955 . 04 |
| சி. ந. கை IV | 2621 | 1915 . 99 |

மூலம்:- அட்டவணை 2 . 5
இலங்கை மத்தியவங்கி அறிக்கை
பின்னிணைப்பு XXIII

நீண்ட காலத்தில் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் வகையில் செயற்பட்டு இலங்கையின் கைத்தொழில் மயமாக்கத்துக்கு உதவும் என்ற வகையில் இச்செயற்திட்டம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

## REFERENCE


1. Central Bank of Srilanka ( 1986 ) **" Central Bank of Srilanka — Functions and working"** — Colombo P. 185-186

2. National Developement Bank ( 1989 ) **SMI News July-September 1989** — Colombo P. 39-45

3. Ministry of Policy Planning and Implementations **"Public Investment"** Colombo P. 59

4. இலங்கை மத்திய வங்கி (1992) 1992 ம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை இலங்கை மத்திய வங்கி - கொழும்பு, பக்கங்கள் — பின்னிணைப்பு XX-XXV


இலங்கை மின்சார சபையானது தனியார் மயமாக்கப்படும். இதனை 11 பகுதிகளாகப் பிரித்து தனியாரிடம் ஒப்படைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இவற்றை பொறுப்பேற்க

1) மகாராஜா நிறுவனம்
2) ஜோன் கீல் நிறுவனம்
3) நவலோக்க நிறுவனம்

போன்ற நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

வணிக வாணி
சிறப்புற மலர வாழ்த்துகிறோம்

V

**துர்க்கா**

**ஸ்ரேஷனேர்ஸ்**

(புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும்
பத்திரிகை முகவர்களும் )

பஸ் நிலையம் முன்பாக
சுன்னாகம்.

★ தரமான பிஸ்கற், கேக் வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளவும்

★ பிறந்தநாள், திருமண
வைபவங்களுக்கு ஏற்ற
கேக் வகைகள்

ஓடருக்கு செய்து கொள்ளவும்

**சுதன் ( B ) பேக்ஹவுஸ்**

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

வணிக வாணி
பல்லாண்டு காலம் வாழ

வாழ்த்துகிறோம்

**தனலக்குமி புத்தகசாலை**

சுன்னாகம்.

வணிக வாணி
தொடர்ந்து வெளிவர

எமது வாழ்த்துக்கள்

**செல்வக்குமரன்**
**அரிசி ஆலை**

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

# தேசிய வருமானக் கணிப்பீட்டில் இரட்டை எண்ணலும் கூட்டிய பெறுமதியும்

செ. நவகீதா
1994 — வர்த்தகம்.

பொருளியலானது பேரினப்பொருளியல், சிற்றினப்பொருளியல் என இருவகைப் படும். இதில் தேசிய வருமானம் பேரினப் பொருளியலுக்குள் அடங்கும். பேரினப் பொருளியல் என்பது பொருளாதாரத்தை மொத்தமான ரீதியில் ஆராயும் இயலாகும். தேசிய வருமானம் என்பது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டின் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகியவற்றின் உடமையாளர்கள். பொருள்கள் சேவைகளது உற்பத்திக்கு காரணிச்சேவையை வழங்கியதற்காக பணவடிவில் வழங்கப் படும் வாடகை, வட்டி, கூலி, இலாபம் போன்றவற்றின் கூட்டுத்தொகை ஆகும். இத்தேசிய வருமானக்கணிப்பீடு 3 வகைப் படும்.

1) உற்பத்தி வழி
2) வருமான வழி
3) செலவுவழி

இவற்றில் உற்பத்திவழி, வருமானவழி ஆகிய இருகணிப்பீட்டிலும் இரட்டை எண்ணல் தோன்றும். உற்பத்திவழிக் கணிப்பீடு என்பது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு நாடானது உற்பத்தியாக்கிய முடிவுப்பொருட்களினதும் சேவைகளினதும் பணவடிவிலான மொத்தப்பெறுமதியே தேசிய உற்பத்தி எனக்கொள்ளப் படுகின்றது. இதில் முடிவுப்பொருட்கள் சேவைகள் எனக் கூறக்காரணம் இரட்டை எண்ணலை நீக்குவதாகும்.

இரட்டை எண்ணல் என்பது மொத்த உற்பத்தியை கணிக்கும்போது ஒரு பொருளின் பெறுமதியானது ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் கணிப்பிட்டால் அதுவே இரட்டை எண்ணலாகும். அதாவது ஒரு உற்பத்தி செயற்பாட்டின்போது முடிவுப் பொருளின் பெறுமதிக்குள் மூலப்பொருளின் பெறுமதியையும் இடைத்தரப்பொருளின் பெறுமதியையும் உள்ளடக்குவதாகும். இந் நிலையில் இன்னொரு தடவை முடிவுப் பொருள்களின் பெறுமதிக்குள் மூலப்பொருளின் பெறுமதியையும் இடைத்தரப்பொருளின் பெறுமதியையும் உள்ளடக்கியிருப்பதே இரட்டை எண்ணலாகும்.

எல்லாப்பெறுமதியும் ரூபாவில்

| விபரம் | மரம் | பலகை | மேசை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1) ஏனைய நிறுவனங்களிடம் உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்ட இடைக்கொடுப்பனவின் பெறுமதி | 0 | 1000 | 3000 | 4000 |
| 2) உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்திக் காரணிக்கான கொடுப்பனவு | 1000 | 2000 | 4000 | 70 00 |
| மொத்தம் | 1000 | 3000 | 7000 | 11000 |

மேலே தரப்பட்ட அட்டவணையின் படி உற்பத்திப்பெறுமதிப் பெறுமானங்கள் முறையே மரம் 1000 ரூபா, பலகை 3000 ரூபா. மேசை 7000 ரூபா ஆகக் காணப்படுகின்றபோது மொத்தத்தேசிய உற்பத்திக்கு 11000 ரூபா பெறுமதியை எடுப்பின் இரட்டை எண்ணல் தவறு தோன்றியிருக்கும். ஏனெனில் முடிவுப் பொருள்களான மேசையின் பெறுமதி 7000 ரூபா ஆகும். இப் பெறுமதிக்குள் மூலப்பொருளான மரத்தின் பெறுமதியையும் இடைத்தரப் பொருளான பலகையின் பெறுமதியையும் முடிவுப்பொருளான மேசையின் பெறுமதி 7000 ரூபாவுக்குள் அடங்கி இருக்கும். இந்நிலையில் மீண்டும் மரத்தின் பெறுமதி 1000 ரூபாவையும் இடைத்தரப்பொருளான பலகையின் பெறுமதி 3000/- வையும் கணிப்பீட்டில் சேர்ப்பதே இரட்டை எண்ணலாகும்.

வருமானவழிக் கணிப்பீடானது ஒரு வருடகாலத்தில் உற்பத்தி செய்முறையில் ஈடுபடுகின்ற பல்வேறு காரணிச்சேவைகளால் உழைக்கப்பட்ட வருமானத்தைக் கணிப்பதாகும். வருமானவழியில் காரணி வருமானங்களான இரட்டைக்கொடுப்பனவுடன் ஒருபக்க கொடுப்பனவு கணிப்பீட்டில் சேர்த்துக்கொள்வதே வருமான வழியில் இரட்டை எண்ணலாகும். அதாவது காரணி வருமானங்களான வாடகை, வட்டி, கூலி, இலாபம் என்பவற்றுடன் காரணியல்லா வருமானங்களான உணவு மானியம், ஓய்வூதியம் போன்ற மாற்றல் கொடுப்பனவுகளும் சேர்க்கப்படுவதே இரட்டை எண்ணலாகும். இதனை பின்வரும் கற்பித எண்கள் மூலம் விளக்கலாம்.

**(எல்லாம் ரூபாப்பெறுமதியில்)**

| | |
|---|---|
| வாடகை | 1000 |
| வட்டி | 200 |
| கூலி | 1400 |
| இலாபம் | 1500 |
| உண்மைப்பெறுமதி | 4100 |
| உணவுமானியம் | 200 |
| ஓய்வூதியம் | 300 |
| இரட்டைஎண்ணல்பெறுமதி | 4600 |

வருமான வழிக்கொடுப்பனவு உண்மையில் (1000+200+1400+1500) 4100 ரூபா ஆகும். ஆனால் உணவு மானியம் 200/- ஓய்வூதியம் 300/-போன்ற ஒருபக்க கொடுப்பனவை சேர்த்துக் கணிப்பிடுவதே 4600 ரூபா வருமான வழியில் இரட்டை எண்ணலாகும்.

இவ் இரட்டை எண்களை பின்வரும் வழிகளில் நீக்கலாம்.

1. ஒரு உற்பத்தி நடவடிக்கையின்போது மூலப்பொருளின் பெறுமதியையோ இடைத்தரப் பொருள்களின் பெறுமதியையோ கணிப்பீட்டில் சேர்க்காது முடிவுப் பொருள்களின் பெறுமதியை மட்டும் கணிப்பீட்டில் சேர்ப்பதால் இரட்டை எண்ணல் தோன்றாது.

2. ஒரு உற்பத்தி செயற்பாட்டின்போது மூலப் பொருளின் பெறுமதியையோ இடைத்தரப் பெறுமதியையோ, முடிவுப் பொருள்களின் பெறுமதியையோ கணிப்பீட்டில் சேர்க்காது கூட்டிய பெறுமதியை கணிப்பீட்டில் சேர்த்தால் இரட்டைத்தவறு தோன்றாது.

கூட்டிய பெறுமதி என்பது ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பெறுமதியில் இருந்து அந்நிறுவனம் உற்பத்தியை மேற்கொள்வதற்காக ஏனைய நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்த இடைக் கொடுப்பனவுகளின் பெறுமதிகளைக் கழிக்க வருவது ஆகும். அதாவது ஒரு நிறுவனம் உற்பத்தியை மேற்கொள்வதற்காக நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றிற்கு வழங்ப்படும் வாடகை, வட்டி, கூலி, லாபம் ஆகியவற்றின் கூட்டுமொத்தத்தினையே கூட்டிய பெறுமதி எனலாம்.

இடைக்கொடுப்பனவு என்பது மூலப் பொருள்கள், இடைத்தரப் பொருள்கள் மீதான கொடுப்பனவு ஆகும். இது ஒருபக்க கொடுப்பனவு ஆகும். இது தேசிய வருமானத்திற்குள் உள்ளடங்காது. எனவேதான் இடைக்கொடுப்பனவை சேர்ப்பதால் இரட்டை எண்ணல் தவறு ஏற்படும்.

( எல்லாப் பெறுமதியும் ரூபாவில் )

| | மூலப்பொருள் மரம் | இடைத்தரப் பொருள் பலகை | முடிவுப்பொருள் மேசை |
|---|---|---|---|
| ஏனைய நிறுவனக் | 0 | 1,000 | 3,000 |
| கொடுப்பனவு | 1,000 | 2,000 | 4,000 |
| | 1,000 | 3,000 | 7,000 |

மேலே காட்டப்பட்ட உதாரணத் தின்படி மர நிறுவனத்திற்கு வேறு நிறுவனக் கொள்வனவுகள் இருக்கமாட்டாது. ஆனால் பலகையை உற்பத்தி செய்ய செலவு ஏற் படும். எனவே மரத்தின் மொத்த உற்பத்தி 1000 ரூபா ஆகும். இதனைப் பலகை உற் பத்தி செய்யும் நிறுவனம் கொள்வனவு செய்யும். எனவே இதனை பலகையாக மாற்றும் போது 2000 ரூபா செலவு ஏற் படும். எனவே பலகையின்மொத்தச் செலவு 3000 ரூபா ஆகும். இதனை மேசை உற் பத்தி செய்யும் நிறுவனம் கொள்வனவு செய்து மேசையாக மாற்றிய பின் முடிவுப் பொருளான மேசையின் பெறுமதி 7000 ரூபா ஆகும்.

மேலே கொடுக்கப்பட்ட உதராணத்தின் படி இடைக்கொடுப்பனவு 4000 ரூபா ஆகும். மொத்த விற்பனை 11000 ரூபா ஆகும். எனவே மொத்த விற்பனையில் இருந்து இடைக்கொடுப்படுனவை கழிக்க வருவது (11000—4000) 7000/- கூட்டிய பெறுமதியாகும்.

**கூட்டிய பெறுமதியின் பயன்பாடுகள்**

1) நாட்டின் உண்மையான தேசிய உற் பத்தியை அறியலாம்

2) ஒவ்வொருநிறுவனமும் மொத்த தேசிய உற்பத்திக்கு எவ்வளவு பங்களிப்பை செய்துள்ளது. என்பதை அறியலாம்.

3) கூட்டிய பெறுமதியும் காரணி விலை யிலான வாடகை, வட்டி, கூலி, இலாபம் என்பனவும்சமனாக இருக்கும்.

கடவுச் சீட்டுகளை ஒரேநாளில் பெற்றுக்கொள்வதற்கான கட்டணம் கடந்த யூன் மாதத்திலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம்' அறிவித்துள்ளது. இதன் பிரகாரம் முன்னர் 800/- ஆக இருந்த மத்திய கிழக்கு நாடுகளுக் கான கடவுச் சீட்டு கட்டணம் தற்போது 1100/- ஆகவும் 1800/- ஆக இருந்த சர்வதேச நாடுகளுக்கான கட்டணம் 2100/- ஆக வும் 50/- ஆக இருந்த 'அவசரகால சாட்சிப்பத்திரத்தின்' கட்ட ணம் 100/- ஆகவும் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

வணிகவாணி வளர

எமது நல்லாசிகள்

()

## ஏ. கே. எஸ். கிறைண்டிங் மில்

59 கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

---

## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி

ஆண்டு *4* தொடக்கம் *11* வரையிலான வகுப்புக்களுக்கும்

A/L கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும்

எமது திறமை மிக்க ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.

---



சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை

விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.

ஓடர்கள் குறித்த தவணையில்

சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

# செல்லையா

# சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்

**191H, 218H, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 23794

# இலங்கையின் சர்வதேச வர்த்தகமும் அதன் போக்கும்

**பொ. ஆனந்தவல்லி**
*1993 - வர்த்தகம்*

## 0.1 அறிமுகம்:

உலக நாடுகளிடைய பொருளாதார தொடர்புகள் அதிகரிப்பதற்கு பிரதான காரணியாக விளங்குவது நாடுகளிடையே நிலவுகிற வர்த்தக உறவுகளேயாகும். பொதுவாக அரசியல், சமூக அடிப்படைகளில் முரண்பாடுகளை எதிர் நோக்குகின்ற நாடுகள் கூட சர்வதேச வர்த்தகத்தினை தமக்கிடையே தவிர்க்க முடியாதுள்ளது. எனவே எந்த ஒரு நாடும் விரும்பியோ அல்லது விருப்பமின்றியோ சர்வதேச வர்த்தகத்தில் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சி பற்றிய நடவடிக்கைகளின் வெற்றியும் தோல்வியும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிநாட்டு வியாபாரத்தினாலேயே நிச்சயிக்கப்படுவதாக அமைகின்றது. அந்த வகையில் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தினை நோக்குகிறபோது, அது, குடியேற்றவாத நடவடிக்கைக்கு முன்பே ஆரம்பமாகியிருந்தாலும் அக்காலப்பகுதியில் அதன் வளர்ச்சி முக்கியப்படுத்தப்படவில்லை. ஆனாலும் இலங்கையின் சுதந்திரத்துக்கு பின் இது பலமான அம்சமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்கு காரணம் உள்நாட்டின் உற்பத்திப் பெருக்கம், தொழில் வாய்ப்பின் அதிகரிப்பு, விலை மட்ட உறுதி, அரசவருமான அதிகரிப்பு, மெய்வருமான உயர்ச்சி என்பனவற்றைக் குறிப்பிட முடியும்.

பொதுவாக இவ்வாறு நாடுகள் தமக்கிடையே வளர்ச்சியினை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏனைய நாடுகளின் உதவியினை நாடிநிற்பதனையே ''நாடுகள் பரஸ்பரம் தங்கியிருந்தல்'' என கூறப்படுகின்றது. இவ்வாறு, தங்கியிருப்பதற்கும் வெளிநாட்டு வியாபாரத்தின் வளர்ச்சிக்கும் பின்வரும் காரணிகளை குறிப்பிடமுடியும்.

1) நாடுகளின் சனத்தொகை மட்டம் அதிகரிப்பதுடன் மக்களின் தேவைகளும் அதிகரித்தமை.

2) நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் நவீன மயமாக்கப்பட்டு வியாபார துணைச்சேவைகள் வளர்ச்சியடைந்தமை.

3) நவீன விஞ்ஞான முறைகள் உற்பத்தியில் அறிமுகப்பட்டதனால் உற்பத்தி மட்டம் பெருமளவில் அதிகரித்தமை.

4) எல்லா நாடுகளிலும் காரணிகளின் வளப்பேறு சமனற்றுக் காணப்படுதல்.

5) சில நாடுகள் சில பொருள்களின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியினையும் ஒப்பீட்டு நயத்தினையும் பெற்றிருத்தல் என்பனவாகும்.

## 0.2 இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையினை பொறுத்தளவில் நிலையான போக்கு பின்பற்றப்பட்டுள்ளது என கூறமுடியாது. குறிப்பாக இலங்கையின் சுதந்திரத்தின் பின் வெளிநாட்டுக்கொள்கை தொடர்பாக ஒரு தெளிவான கொள்கை பின்பற்றப்படவில்லை.

அரசாங்கங்கள் மாற்றமடைகின்ற போது அரசியல் சித்தாத்தங்களுக்கு ஏற்ப

பொருளாதார வர்த்தக கொள்கைகள் மாற்றமடைவதாக அமைகின்றது. 1960ஆம்ஆண்டில் இருந்து 1977ஆம் ஆண்டுவரை இறக்குமதியை கட்டுப்படுத்தவும் உள்நாட்டு உற்பத்தியை விரிவுபடுத்தக் கூடிய கொள்கைகளே கைக்கொள்ளப்பட்டுள்ளன.

இக் காலப்பகுதியில் அரசாங்கம் கைத்தொழில் வளர்ச்சியில் அக்கறை காட்டத் தொடங்கியது. இதற்கு ஏற்றவகையில் புதிய கைத்தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இக் கைத்தொழில்களை ஊக்குவிக்குமுகமாக இறக்குமதிகள் மீது தீர்வை விதித்தல் ஆடம்பர இறக்குமதிகளைக் குறைத்தல் இறக்குமதிக்கான செலாவணி அனுமதிகளைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கொள்கைக்கு ஏற்ற வகையில் இக் காலப்பகுதியில் பல கூட்டுத்தாபனங்களும் அரச திணைக்களங்களும் வளர்ச்சியடைந்ததுடன் கிராமிய விவசாயக் கைத்தறிப் புடவைத்தொழில் மட்பாண்டக் கைத்தொழில் என்பனவும் வளர்ச்சியடைந்து காணப்பட்டன.

அடுத்து 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டின் ஆட்சிக்கு வந்த புதிய அரசின் வர்த்தக கொள்கையானது இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் போக்கில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியதாகவுள்ளது. அதாவது, இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு இறக்குமதி தாராளமயமாக்கப்பட்டதுடன் தனியார் துறையினரும் வெளிநாட்டு வியாபாரத்தில் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. இதன் காரணமாக இலங்கையின் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் வளர்ச்சியடைய தொடங்கியது.

இவ்வாறு வெளிநாட்டு வியாபாரம் இக்காலப்பகுதியில விரிவுபடுத்தப்பட்டமைக்கு பின்வரும் காரணிகளைக் குறிப்பிடமுடியும்;

1) இறக்குமதி தாராளமயமாக்கப்பட்டமை.
2) கட்டுப்பாடற்ற நாணய மாற்றுக் கொள்கைகள் பின்பற்றப்பட்டமை.
3) சுதந்திர வர்த்தக வலயம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
4) ஏற்றுமதி அபிவிருத்தி கிராமிய கம்பனித்திட்டங்கள்.
5) புதிய வரிச் சலுகைகளும் வரி விதிமுறைகளும்.
6) ஏற்றுமதி தொடர்பான ஊக்குவிப்பு நடவடிக்கைகள்.
7) ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் என்பன பிரதானமானவையாகும்.

இக் காலப்பகுதியில் சுயசார்பு பொருளாதார நிலை என்பது தவிர்க்கப்பட்டு ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் வளர்ச்சியடைந்துள்ளமை இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் ஏற்பட்ட பிரதான மாற்றமாகும்.

## 0.3 இறக்குமதிக் கட்டமைப்பு மாற்றம்

இறக்குமதிக் கட்டமைப்பு என்பது ஒரு நாட்டின் மொத்த இறக்குமதியில் ஒவ்வொரு பண்டத் தொகுதியினதும் சதவீத பங்கு எவ்வாறு அமைந்துள்ளது என்பதாகும். இலங்கையின் மொத்த இறக்குமதியில் நுகர்வுப் பொருள்கள் இடைநிலைப் பொருள்கள், முதலீட்டுப் பொருள்கள் என்பவற்றின் சதவீதப் பங்கு எவ்வாறு காணப்படுகிறது என்பதே கட்டமைப்பு ஆகும். இதன் சதவீதங்களில் ஏற்படும் மாற்றங்கள் கட்டமைப்பு மாற்றங்கள் என அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் 1977 ஆம் ஆண்டுக்குப் பின் கைக்கொள்ளப்பட்ட வியாபாரக் கொள்கையின் காரணமாக இறக்குமதிக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றினை பின்வரும் அட்டவணை மூலம் தெளிவுபடுத்தலாம்.

## இறக்குமதிகளின் அமைப்பு (சதவீதங்களில்)

| பண்டவகை | மொத்த இறக்குமதி ( சதவீதம் ) | | | |
|---|---|---|---|---|
| | 1986 | 1990 | 1991 | 1992 |
| **1) நுகர்வுப் பொருட்கள்** | 34.1 | 26.4 | 25.5 | 25 |
| 1.1 உணவும் குடிபானமும் | 12.3 | 14.5 | 13.2 | 12.1 |
| அரிசி | 1.9 | 1.6 | 1.3 | 1.9 |
| மா | 0.2 | 1.3 | — | — |
| சீனி | 3.2 | 4.8 | 4.1 | 3.2 |
| 1.2 புடவையும் ஆடையும் | 11.6 | 6.8 | 7.9 | 6.9 |
| 1.3 பாவனைப் பொருள்களும் பிறவும் | 10.1 | 11.9 | 12.3 | 12.9 |
| **2) இடைநிலைப் பொருட்கள்** | 40.9 | 51.8 | 50.7 | 50.3 |
| 2.1 பெற்றோலியம் | 11.5 | 13.3 | 10.2 | 9.1 |
| 2.2 வளமாக்கி | 2.4 | 2.7 | 1.9 | 1.6 |
| 2.3 இரசாயனம் | 2.9 | 4.4 | 2.9 | 2.7 |
| 2.4 கோதுமை | 4.3 | 3.5 | 2.6 | 3.0 |
| 2.5 ஏனையவை | — | 27.7 | 33.2 | 33.9 |
| **3) முதலீட்டுப் பொருட்கள்** | 19.3 | 21.7 | 23.5 | 24.6 |
| 3.1 பொறியும் கருவியும் | 10.7 | 9.2 | 9.4 | 11.3 |
| 3.2 போக்குவரத்துக் கருவிகள் | 2.7 | 4.2 | 6.0 | 5.2 |
| 3.3 கட்டிடப் பொருள்கள் | 1.7 | 5 9 | 5.4 | 5.3 |
| 3.4 ஏனையவை | 4.2 | 2.4 | 2.7 | 2.8 |
| **4) வகைப்படுத்தப்படாதவை** | 5.7 | 0.1 | 0.2 | 0.1 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம் : மத்திய வங்கி 1992

### 0.4 ஏற்றுமதி கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம்

ஒரு குறிப்பிட்ட வருடத்தின் மொத்த ஏற்றுமதியில் ஒவ்வொரு வகை ஏற்றுமதியினதும் சதவீத பங்கு எவ்வாறு அமைகின்றது என்பதே ஏற்றுமதி கட்டமைப்பு ஆகும். இலங்கையின் ஏற்றுமதிகளில் வேளாண்மைத் துறை, கைத்தொழில்த்துறை, கனிப் பொருட்துறை என்பன ஏற்றுமதியில் எவ்வளவு சதவீதமாக அமைந்துள்ளன என்பதனை கூறுவது ஏற்றுமதி கட்டமைப்பு என்றும் அவற்றிற்கிடையிலான மாற்றங்களே ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம் எனவும் கூறப்படுகின்றது.

இலங்கையின் ஏற்றுமதிகளின் வகைப் படுத்தலானது ஆரம்பத்தில் மரபுவழி ஏற்றுமதிகள், மரபுவழியற்ற ஏற்றுமதிகள் என பாகுபடுத்தப்பட்டு இருந்தது. ஆனால் இப் பாகுபடுத்தல் ஆனது அண்மைக் காலத்தில் கைவிடப்பட்டு வேளாண்மை, கைத்தொழில், கனிப்பொருள் ஏற்றுமதி என வகைப்படுத் தப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம் முக்கியமானது ஆகும். அதனை பின்வரும் அட்டவணை மூலம் தெளிவுபடுத்த முடியும்.

## ஏற்றுமதி கட்டமைப்பின் சதவீத மாற்றங்கள்

| வகை | மொத்தத்தின் சதவீதம் | | | |
|---|---|---|---|---|
| | 1987 | 1990 | 1991 | 1992 |
| 1) வேளாண்மை உற்பத்தியின் ஏற்றுமதிகள் | 42 | 36 | 32 | 24 |
| 1.1 தேயிலை | 26 | 25 | 22 | 14 |
| 1.2 இறப்பர் | 07 | 04 | 03 | 03 |
| 1.3 தெங்கு உற்பத்திகள் | 05 | 03 | 03 | 04 |
| 1.4 சிறு வேளாண்மைப் பயிர்கள் | 04 | 04 | 04 | 03 |
| 2) கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் | 49 | 53 | 60 | 69 |
| 2.1 புடவையும் ஆடைகளும் | 31 | 32 | 40 | 48 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் | 07 | 05 | 04 | 03 |
| 2.3 ஏனையவை. | 11 | 16 | 16 | 18 |
| 3) கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 04 | 05 | 03 | 03 |
| 3.1 இரத்தினக் கற்கள் | 03 | 04 | 03 | 03 |
| 3.2 ஏனையவை. | 01 | 01 | — | — |
| 4) வகைப்படுத்தப்படாதவை | 05 | 06 | 05 | 04 |
| 5) மொத்த ஏற்றுமதிகள் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம் - இலங்கை மத்திய வங்கி அறிக்கை – 1992

அட்டவணையின்படி 1987 ஆம் ஆண்டு வேளாண்மைத்துறையானது மொத்த சதவீதத்தில் 42% ஆகவும், 1992 ஆம் ஆண்டில் 24% வீதமாகவும் வீழ்ச்சியுற்றுள்ளது. இதற்கு காரணம் முக்கியமாக தேயிலை ஏற்றுமதியானது 26% த்தில் இருந்து 14% குறைவடைந்ததேயாகும். அடுத்து கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியினை எடுத்துக்கொண்டால் 49% த்தில் இருந்து 69%ஆக அதிகரித்துள்ளது. இங்கு 20% வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியே ஆகும்.

### 0.5 தயாரிக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி

இலங்கையின் தற்போதைய ஏற்றுமதித்துறையில் முதலிடம் பெறுவது தயார் செய்யப்பட்ட ஆடைக் கைத்தொழில் ஆகும். இது இலங்கையில் வளர்ச்சியடைவதற்கு சர்வதேச வர்த்தகத்தின் ஒப்பீட்டு நயக்கோட்பாடு இத்துறையில் இலங்கைக்கு சாதகமாக அமைந்திருக்கின்றது என்றே கூறலாம்.

இத்துறையானது ஓர் ஊழியச் செறிவான கைத்தொழில் என்பதனால் தனியார் துறையினர் குறைவான மூலதன செறிவை பயன்படுத்தி இலங்கையின் ஊழியநிரம்பலை கூடியவரை பயன்படுத்துவதன் மூலம் கூடுதலான வருமானத்தை பெறக்கூடியதாகவுள்ளது.

தயாரிக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியே மரபுவழியற்ற ஏற்றுமதிகளில் முதன்மை பெற்றிருப்பதுடன் ஆரம்பகாலத்தில் மரபுவழி ஏற்றுமதியில் தேயிலை வகித்த பங்கினை கடந்து சென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்துறையானது 1986 ஆம் ஆண்டுக்கு பின்பே வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இத்துறையானது இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் வகிக்கின்ற சதவீத பங்கினை பின்வரும் அட்டவணைமூலம் விளக்கலாம்.

**மொத்த ஏற்றுமதியில் தைக்கப்பட்ட ஆடைகளின் சதவீதம் (மாற்றம்)**

| வருடம் | சதவீதம் |
|---|---|
| 1977 | 03.0 |
| 1980 | 10.4 |
| 1984 | 20.5 |
| 1986 | 28.3 |
| 1987 | 31.4 |
| 1992 | 47.8 |

மூலம்: மத்தியவங்கி, அறிக்கை – 1992

இவ் ஏற்றுமதியின் சந்தைவாய்ப்பில் முக்கிய இடம் வகிப்பது, ஐக்கிய அமெரிக்கா ஆகும். மொத்தமாக தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியில் 50% ஐக்கிய அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதியில் பின்வரும் தைத்த ஆடைகள் பெருமளவில் இடம் பெறுகின்றன. அவை பெண்களின் மேற்சட்டைகள், கவுண்கள், நீண்ட காற்சட்டைகள், கட்டைக் காற்சட்டைகள், பிகினி, ஜீன்ஸ், நீச்சலுடைகள் என்பனவாகும்.

அத்துடன் இத்துறையில் 1991 ஆம் ஆண்டில் 85457 பேர் வேலைவாய்பினையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## 0.6 முடிவுரை

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரங்கள் ஆனது தொடர்ச்சியாக சுய சார்பு நிலைப் பொருளாதாரங்கள் ஆகவே காணப்படுகின்றது. ஆகவே, இந் நாடுகளின் அடிப்படை தேவைகளான உணவுப் பொருள்கள் பாவனைப் பொருள்கள், மருந்து வகைகள் என்பவற்றைக்கூட இன்னொரு நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளின் ஏற்றுமதியினை பொறுத்தளவிலும் அவை முதல் விளைவு பண்டங்கள் ஆக காணப்படுவதால் இப் பொருள்களின் விலையானது. தளம்பல் நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் அபிவிருத்தியடைந்த நாடுகள் கையாளுகின்ற தாங்கிருப்புக் கொள்கைகள், அனுமதிப் பங்கு முறைகள், தடைகள், என்பன ஏற்றுமதியை பாதிப்பனவாக அமைந்துள்ளன. இவற்றின் காரணமாக இலங்கை போன்ற நாடுகளில் வர்த்தக மாற்றுவீதம் பாதகமாக இருத்தல், உள்நாட்டு பணவீக்கம் அதிகரித்தல் என்பனவும் தொடர்ச்சியான சென்மதி நிலுவை பிரச்சினை, வெளிநாட்டுக் கடன் சுமை என்பவற்றினை தாங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் சர்வதேச வர்த்தகமே பிரதான காரணியாக விளங்குவதனால், சர்வதேச வர்த்தகத்தில் உறுதியான போக்கினை கடைப்பிடிப்பதே பொருத்தமானதாக அமையும்.

வரையறுத்த எயர்லங்கா நிறுவனமானது தனது சேவையை விஸ்தரிக்கும் நோக்குடன் சர்வதேச ஏரோ எஞ்சினியர் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற ''எயர் பஸ்'' எனும் விமானத்தை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

## KUNAM VIDEO CENTRE

The Best Video Library in the Heart of Jaffna

- பழைய, புதிய திரைப்பட வீடியோப்படப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கும்
- புதிய பட வெளியீடுகளை மாஸ்ரர் பிரதிகளில் பெறுவதற்கும்
- றெக்கோடிங் செய்து கொள்வதற்கும்

உங்களுக்கு தேவையான பழைய பாடல்கள் யாவையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## குணம் வீடியோ சென்ரர்

42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665

## குறிஞ்சி மருந்தகம்

- Western Medicine
- Chocolates & Sweets
- Infant Milk Foods
- Gifts & Eggs

**KURINCHY PHARMACY**

3, Model Market, Palaly Road,
Thirunelvely Junction.

*( We do not have any Branches elsewhere )*

## FASHION HOUSE

65, K. K. S. Road, — Jaffna.

எம்மிடம்

- அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்கள்
- பீங்கான் கோப்பைகள்
- அழகுசாதனப் பொருட்கள்
- சிறுவர் சைக்கிள்கள்

மற்றும்

- நவீன நாகரிகப் பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்

நிதான விலையில் கிடைக்கும்

## பெஷன் ஹவுஸ்

65, கே. கே. எஸ். றோட், — யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 23046)

# இலங்கையின் கடலக உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் ஒரு நோக்கு

**A. S. சூசை M. A.**
உதவி விரிவுரையாளர், புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இலங்கைத்தீவானது, அதன் அமைவிடம், அமைப்புக்காரணமாக மீன் பிடிக் கைத்தொழிலுக்குரிய வாய்ப்பினைக் கொண்டுள்ளது. ஏறக்குறைய 1561 கிலோ மீற்றர் நீளமான கடற்கரை யோரத்தினையும், 262500 ஹெக்ரர் பரப்பளவு கொண்ட நாடுறை நீர்நிலைகளையும், 120000 ஹெக்டர் பரப்பளவு கொண்ட ஊவர்நீர் ஏரிப்பகுதிகளையும் கொண்டுள்ளதுடன் கரையிலிருந்து 200 மைல் (320 கி.மீ) தூரம் வரையிலான பகுதியை உள்ளடக்கிய பிரத்தியேக பொருளாதார வலயத்தினையும் (Exclusive Economi Zone) உள்ளடக்கியுள்ளது. இவ்வலயத்தின் பரப்பளவு சுமார் 233000 ச. கி. மீற்றராகும். இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் மூன்றரை மடங்காகும். இலங்கையைச் சூழ அமைந்திருக்கும் ஆழம் குறைவான கண்டமேடை ஏறக்குறைய 22 கி.மீ தொடக்கம் 40 கி. மீற்றர்வரை அகன்று காணப்படுகின்றது. இது பிரத்தியேக பொருளாதார வலயத்தில் 11 வீதமான பங்காகும் (26000ச. கி. மீ.) கண்டமேடைகள்தவிர்ந்த கண்டத் திட்டுக்கள், பல்லுருவத்தன்மை வாய்ந்த கடற்கரையோரம் போன்ற அமைப்புகளும் கடல்வாழ் உயிர்களின் பரம்பலுக்குச் சாதகமாக அமைந்துள்ளன.

நோர்வே நாட்டு கடல்வள ஆராய்ச்சிக் கப்பலொன்று அண்மையில் நடாத்திய ஆய்வில் இலங்கையில் உள்ள மொத்த உயிரியல் திணிவு 750000 மெ. தொன் என்றும் வருடமொன்றுக்கு 250,000 மெ. தொன் தொடர்ச்சியாக கிடைக்கின்றது என்றும் மதிப்பீடு செய்துள்ளது'' (ரீ. ஏ. தர்மரத்தின -1992). இத்தகைய வாய்ப்பு வளங்களைக் கொண்டிருந்த போதிலும் கடந்தசில வருடங்களாக இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (G D P) மீன்பிடித்துறையின் பங்களிப்பு 1.5 வீதம் தொடக்கம் 1.9 வீதம் மட்டுமேயாகும். இது மிகவும் குறைவான பங்களிப்பாகவே கருதப்படுகின்றது. சுதந்திரமடைந்த காலப்பகுதி முதல் இலங்கையின் மீன்உற்பத்தி உள்நாட்டு மக்களின் மீன்நுகர்வு தேவையை பூர்த்தி செய்யவில்லை. உற்பத்தியில் அதிகரிப்பு நிகழ்வு போதிலும் இறக்குமதிகளின் அடிப்படையிலேயே நுகர்வு பூர்த்தி செய்ப்பட்டு வந்துள்ளது. குறிப்பிடத்தக்க அம்சமாகும். இறக்குமதிகள் தொடரும் அதேவேளை சிலவகை கடலக உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளும் இடம்பெற்று வருவது சிறப்பான அம்சமாகும். 1983 ம் ஆண்டினைத் தொடர்ந்து இலங்கையில் நிலவிவருகின்ற அரசியல் ஸ்திரத்தன்மை மீன் உற்பத்தியிலும் கடலக உற்பத்தி ஏற்றுமதி — இறக்குமதிகளிலும் தளம்பல் நிலையைத் தோற்றுவித்து வருகின்றது. இப்பின்னணியில் கடலக உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி — இறக்குமதி போக்குகள் பற்றி சுருக்கமாக இக்கட்டுரை நோக்குகின்றது.

### கடலக உற்பத்திகளின் இறக்குமதி

கடலக உற்பத்திகளின் இறக்குமதிப் பொருட்களில் மாசிக்கருவாடு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கருவாடு, மீன்குளிகைகள், மீன்எண்ணெய் போன்றன முக்கியமானவையாகும். மாசிக்கருவாடு மாலைதீவிலிருந்தும், கருவாடு இந்தியா, பங்காளாதேஷ் போன்ற நாடுகளிலிருந்தும், தகரத்தில் அடைத்த மீன் யப்பான் தாய்வான், கொறியா, பிலிப்பைன்ஸ், சிலி, பேரு போன்ற நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இலங்கையின் மீன்உற்பத்தி அதிகரிக்கப்படுவதற்கு பல்வேறு அபிவிருத்தி முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், கடற்தொழில் துறைசார்ந்த தொழில் நுட்ப அறிவும், தொழில் பயிற்சியும் மூலதன வசதிகளும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டமையினால் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு உற்பத்தி அமையவில்லை. இதனால் மககளின் நுகர்வுத் தேவைவைப் பூர்த்திசெய்ய மீன் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் அவசியம் ஏற்பட்டது. நாட்டின் குடித்தொகை வருடந்தோறும் அதிகரித்துச் சென்றமையினால் தலாநுகர்வுத் தேவையும் அதிகரித்துச் சென்றது. வைத்திய சிபாரிசின்படி 21.0 கி. கிராமாக (48 இறாத்தல்) வருட தலா நுகர்வு அமைய வேண்டும் ஆனால் 1983 லேயே அதிஉச்ச தலாநுகர்வாக 15.75 கி. கிரமாக மட்டுமே அமைந்திருந்தது. உண்மையான தேவைக்கும், நுகர்வுக்கும் கிடைத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையே இருந்த இடைவெளி இறக்குமதிமூலமே நிரப்பப்பட்டது.

சுதந்திரத்தையடுத்து வந்தகாலப் பகுதிகளில் உள் நாட்டு நுகர்வுத் தேவையில் ஏறக்குறைய 75 சத வீதமான பங்கு இறக்குமதியின் அடிப்படையிலேயே பூர்த்தி செய்யப்பட்டது. 1957 ஆம் ஆண்டில் உள் நாட்டு மொத்த மீன் உற்பத்தி 38676.68 மெற்றிக் தொன்னாகக் காணப்பட அவ்வாண்டின் இறக்குமதி 83069.49 மெற்றிக் தொன்னாகக் காணப்பட்டது. இது மொத்த நுகர்வில் 68 சத வீதமான பங்காகும். 1960 இல் இறக்குமதியின் பங்கு 67.4 சத வீதமாகவும், 1965 இல் 48 சதவீதமாகவும் குறைவடைந்தது. 1970இல் பதவிக்கு வந்த அரசு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதனால் உண்டாகும் அந்நியச் செலாவணி விரயத்தைத் தடுக்கவும், இவ்விரயம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வேண்டிய முதலீட்டுப் பொருட்களை இறக்குமதி செய்யத் தடையாக அமைந்தது என்ற காரணத்தினாலும் உணவுப் பொருட்களின் இறக்குமதிகளைக் குறைத்துக் கொள்ளுதல் என்ற கொள்கையின் அடிப்படையில் மீன் உணவுப் பொருட்களின் இறக்குமதி யாவையும் குறைக்கலாயிற்று. இதனடிப்படையில் 1970இல் 81958 மெற்றிக் தொன்னாக இருந்த இறக்குமதி 1975இல் 25817 மெற்றிக் தொன்னாகக் குறைந்தது. இவ் ஆண்டுகளில் மீன்பிடி இயந்திரமயமாக்கல், நவீன மீன்பிடி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை காரணமாக உற்பத்தியும் கணிசமான அளவில் அதிகரித்துச் சென்றது. இவ்வதிகரிப்பும் இறக்குமதியின் அளவு குறைவடைய ஒரு காரணமாயிற்று. 1977இல் 15 சதவீதமான பங்கு மட்டுமே இறக்குமதி மூலமான நுகர்வாக இருந்தது. இறக்குமதிப் பெறுமதியானது 1973 இல் 51.81 மில்லியன் ரூபாவிலிருந்து 1977 இல் 19.85 மில்லியன் ரூபாவாகக் குறைவடைந்தது.

1978 இன் பின்னர் பதவிக்கு வந்த அரசின் தாராள இறக்குமதிக் கொள்கை காரணமாகவும், 1983இன் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாண கரையோரங்களில் நிலவிய அரசியல் நெருக்கடிகள் காரணமாக உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் மீண்டும் இறக்குமதியின் அளவைக் [கூட்டுவதற்குக் காரணமாக அமைந்தது. 1979இல் இறக்குமதிப் பெறுமதியடிப்படையில் 139.46 மில்லியன் ரூபாவாக இருந்த செலவீனம் 1985இல் 756.1 மில்லியன் ரூபாவாகவும், 1988இல் 1137.02 மில்லியன் ரூபாவாகவும், 1991இல் 2003.31 மில்லியன் ரூபாவாகவும் உயர்வடைந்தது.

அட்டவணை - 1

கடலக உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி (மில். ரூபாவில்)
( 1985 — 1989)

| வகை | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|
| தகரத்தில் அடைத்த மீன் | 244.37 | 209.42 | 189.69 | 191.82 | 280.76 |
| கருவாடு | 453.05 | 550.87 | 660.28 | 832.90 | 645.53 |
| மாசிக்கருவாடு | 56.51 | 72.95 | 94.67 | 108.30 | 129.72 |
| ஏனையவை | 2.24 | 5.75 | 11.94 | 4.00 | 3.16 |
| மொத்தம் | 756.17 | 838.99 | 956.58 | 1137.02 | 1058.97 |

ஆதாரம்: தேசிய கடற்றொழில் அபிவிருத்தித்திட்டம் 1990 — 1994

1990 இன் பின்னர் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவ கெடுபிடிகள், கடல் வலய பாதுகாப்புச்சட்டம், பொருளாதாரத் தடை காரணமாக வருடாந்தம் ஏறக்குறைய 50 ஆயிரம் தொன் மீன் உற்பத்தியை இழக்கச்செய்துவிட்டது. இதன் காரணமாகவே இறக்குமதிக்கான செலவீனங்கள் உயர்வடைந்துசெல்லக் காரணமாயிற்று. இறக்குமதிகளில் 60 சதவீதமானவை கருவாடாகவும், 25 சதவீதமானவை தகரத்தில் அடைத்த மீனாகவும், எஞ்சியவை மாசிக்கருவாடு மற்றும் பொருட்களாகவும் அமைந்தது.

## கடலக உற்பத்திகளின் ஏற்றுமதி

ஏற்றுமதிகளைப் பண்முகப்படுத்துதல் என்ற புதிய அரசின் கொள்கைகளுக்கிணங்க இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் மரபுரீதியற்ற பொருட்களின் வகைகளில் கடலக உற்பத்திகளும் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. மீன் உற்பத்தியானது உள்நாட்டுத்தேவையைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இல்லாதபோதிலும் சில வகை கடல் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளமை சிறப்பான அம்சமாகக் கொள்ளலாம்.

1950 களிலிருந்து கடலகப்பொருட்கள் ஏற்மதி செய்யப்பட்டு வருகின்றபோதிலும் 1970 களையடுத்து வந்த காலப்பகுதிகளிலேயே இதன் முக்கியத்துவம் கூடுதலாக உணரப்பட்டது உள்நாட்டில் நுகரப்படாத அல்லது பயன்படுத்தப்படாத பொருட்களில் கடலட்டை, சங்கு, சுறாச்செட்டை, கடற்பாசி போன்றனவும், செல்வந்த நாடுகளில் நல்ல கிராக்கியை ஏற்படுத்தியுள்ளது. இறால், சிங்கஇறால், நண்டு, கணவாய், மீன் துண்டுகள், உயிருள்ள - அலங்கார மீன்கள் போன்றன முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். (அட்டவனை 2, 3)

1970 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதியின் அளவு 505 தொன்னாகவிருந்து 1976 இல் 2713 தொன்னாகவும், 1985 இல் 3240 மெற்றிக் தொன்னாகவும், 1989 இல் 3982.24 மெற்றிக் தொன்னாகவும் உயர்வடைந்து சென்றது. 1990 இல் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் மற்றும் வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட கடல்வலய பாதுகாப்புச் சட்டங்கள் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சி ஏற்றுமதியிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. 1990 இல் 3192.60 மெற்றிக் தொன்னிலிருந்து 1991 இல் 1827.75 மெற்றிக் தொன்னாக ஏற்றுமதி விழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 2

**கடலக உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி — (மில். ரூபாவில்)**
**(1985 — 1989)**

| உற்பத்திகள் | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|
| இறால் | 303.31 | 427.93 | 339.18 | 520.30 | 767.17 |
| சிங்கஇறால் | 6.38 | 20.17 | 31.13 | 28.40 | 98.92 |
| சுறாச்செட்டை | 10.24 | 13.81 | 25.40 | 30.70 | 64.02 |
| நண்டு | 89.83 | 99.60 | 135.75 | 106.30 | 70.09 |
| உயிருள்ள மீன் | 30.53 | 29.63 | 35.51 | 74.20 | 105.58 |
| ஏனையவை | 13.37 | 17.34 | 11.24 | 64.60 | 109.35 |
| மொத்தம் | 453.66 | 608.48 | 576.21 | 825.00 | 1215.13 |

**ஆதாரம்:** தேசிய கடற்றொழில் அபிவிருத்தித் திட்டம் 1990 — 1994
கடற்றொழில் அமைச்சு, கொழும்பு.

அட்டவணை – 3

**கடலக உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி – இறக்குமதி (மில். ரூபாவில்)**
**(1985 — 1991)**

| | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 |
|---|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதி | 453.66 | 608.48 | 576.21 | 825.00 | 1215.13 | 883.00 | 855.54 |
| இறக்குமதி | 756.17 | 838.99 | 956.58 | 1137.02 | 1058.97 | 949.52 | 2003.31 |
| வர்த்.மீதி | —302.51 | —230.51 | —380.37 | —312.02 | +156.16 | —66.52 | —1147.77 |

ஆதாரம்: கடற்றொழில் அமைச்சு ஆண்டறிக்கை – 1992

ஏற்றுமதியின் பெறுமதியினை நோக்குகின்றதுபோது 1960 இல் 78 மில். ரூபாவில் இருந்து 1965இல் 1.06 மில். ரூபாவும். 1976 இல் 75 மில். ரூபாவாகவும் 1980 இல் 238. மில் ரூபாவாகவும் 1989 இல் 1215.13 மில். ரூபாவாகவும் உயர்வடைந்தது. ஆனால் 1990 இல் இவ் ஏற்றுமதி 883.00 மில். ரூபாவாகவும் 1991 இல் 855.54 மில். ரூபாவாகவும் வீழ்ச்சியடைந்தது. கிட்டத்தட்ட 400 மில். ரூபாவரையில் வடக்கு, கிழக்கு நிலமைகளினால் இழக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு, கிழக்குப் பகுதியிலிருந்தே கடலட்டை, சங்கு போன்ற உற்பத்திப் பொருட்களும், இறால்போன்றவையும் ஏற்றுமதியாக பெறப்படுகின்றது. இறால் உற்பத்தியை அவதானிக்கின்றபோது 1989

இல் 2597.92 மெற்றிக் தொன்னிலிருந்து 1990இல் 1855.27 மெற்றிக் தொன்னாகவும் 1991இல் 942.64 மெற்றிக் தொன்னாகவும் கடலட்டை 1989 இல் 51.26 மெற்றிக் தொன்னிலிருந்து 1991 இல் 18.53 மெற்றிக் தொன்னாகவும் குறைவடைந்துள்ளது. கிட்டத்தட்ட 1000 மெற்றிக் தொன் இறால் உற்பத்தி வடக்கு கிழக்கிலிருந்து இழக்கப் பட்டுள்ளமை அவதானிக்கதக்கது.

மொத்த ஏற்றுமதியில் 40 — 45 சதவீதம் இறால், சிங்கஇறால் என்பன இடம் பெறுகின்றன. யப்பான், ஐக்கிய அமெரிக்கா ஹொங்கொங் போன்ற நாடுகளும், பங்களாதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகளும் இலங்கையின் கடலக உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்கின்றன.

## ஏற்றுமதிக்கான தடைகள்:

- கடல்வளங்களின் நம்பிக்கை வைக்கக் கூடிய தரவுகள், தகவல்கள் கிடைக்கும் நிலை போதாதிருத்தல்.
- உயர்செலவும் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு கிடைக்கும் கடன் வசதிகளும் போதாமலிருத்தல்.
- உயர்ந்த ஏற்றுமதித் தீர்வைகள்.
- கடல் உணவுகளை பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூட வசதி பற்றாக் குறை.
- வளர்ப்புத் தொழில்நுட்ப அறிவு போதாமை.
- அலங்கார மீனினப்பெருக்கம், வளர்ப்பு முறை, ஆராய்ச்சி அபிவிருத்தி ஆகியன மிகவும் பின்தங்கியிருத்தல்.
- பிரதேச ரீதியான சமூகவியல் தொடர்பான ஆய்வுகள் இன்மையும், நவீன தொடர்பு சாதனங்கள் தொழில்நுட்பங்கள் புகுத்துவதில் அசிரத்தையும் புறக்கணிப்பும்.
- வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவக்கெடுபிடிகளும் கடல்வலய பாதுகாப்புச்சட்டங்களும்.
- பிறநாட்டுக் கப்பல்களும், படகுகளும் அத்துமீறி வளங்களைச் சுரண்டல்.
- பதனிடல், பொதியாக்குதலில் கவர்ச்சிகரமற்ற தன்மையும் தரக்குறைவும்.

ஏற்றுமதிகளை ஸ்திரப்படுத்த பின்வருவன கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

- மீன்வளர்ப்பு முறைகளுடன் வளங்களை அதிகரிக்கக் கூடியதாகவும் தரங்கள் நன்கு பேணப்படத் தக்கதாகவும் இருக்க வேண்டும்.
- சேசேச்சு, முன்கேக்கு, முள்ளில்லாத மீன் போன்ற உற்பத்திகள் உள்ளூரிலும் நுகரத் தக்கவாறு தரமுடையதாக இருந்தல் வேண்டும்.
- தவளைக்கால், கடற்றாமரை போன்ற பொருட்களுக்கு நல்ல கிராக்கியுண்டு இதுவும் விருத்தி செய்யப்பட வேண்டும்.
- கடல்வள ஆய்வுகள் பிரதேச ரீதியில் முனைப்புடன் செயற்படல் வேண்டும்
- இத்துறைசார் ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் ''நாரா'' (NARA — National Aquatic Resources Agency —) தேசிய நீர்வாழ் வில கியல் முகவர் நிலையம். போன்ற நிறுவனங்களுக்கு போதிய நிதியுதவிகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- ஏற்றுமதி வளர்ப்புசார் வேலைத்திட்டங்களுக்கு ஊக்கமும் உதவியும் தொழில்நுட்ப அறிவும் சேவை வழிகளும் தனியார் துறையினருக்கு வழங்குவதுடன், குஞ்சு பொரிக்க வைத்தற்கான இடவசதிகளுடன் இறால் பண்ணைகள் வைக்கவும் ஆவன செய்யப்படல் வேண்டும்.
- ஏற்றுமதிக்காக வளர்க்கக்கூடிய உயர் பெறுமதியுள்ள இனங்களைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சி, அலங்கார மீன்

பெருக்கம், வளர்ப்பு, விசாலிப்புத் திட்டம் தயாரித்தல்.

★ பதனிடல் தொழில்நுட்ப விருத்தியும் ஆளணியினருக்குப் பயிற்சியும் வழங்குதல்.

★ குளிரூட்டல், சேமிப்பு, துறைமுக வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல்.

★ ஏற்றுமதிக் கடல் உணவுக்கான பரிசோதனை வசதிகள், தரக்கட்டளை ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்.

★ தீர்வைகள் தொடர்பான சலுகைகள் வழங்குதல் என்பன பிரதானமானவையாகும்.

## முடிவுரை

பொதுவாக நோக்குகின்றபோது உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதி என்பன தொடர்ச்சியாக அதிகரித்துச்செல்ல இறக்குமதியின் அளவும், அதன் பெறுமதியும் குறைவடைந்து செல்வதாகவே காணப்படுகின்றது. எனினும் வடக்கு, கிழக்குப் பகுதியில் ஏற்பட்டு வந்துள்ள இராணுவ நடவடிக்கைகள், பொருளாதாரத் தடைகள், கடல்வலய பாதுகாப்புச் சட்டங்கள் காரணமாக உற்பத்தியில் கணிசமான அளவு பங்கு வீழ்ச்சி அடைந்திருப்பது கவனிக்கத்தக்கது. வடக்கு, கிழக்குப் பகுதி மொத்த உற்பத்தியில் சுமார் 60% மான பங்கினைப் பெற்றுக் கொடுப்பது இங்கு முக்கிய அம்சமாகும். அத்துடன் ஏற்றுமதி செய்யப்படும் பெரும்பாலான பொருட்கள் குறிப்பாக இறால், கடல் அட்டை, சங்கு போன்றன வடபகுதியில் இருந்து பெறப்படுவதும் முக்கிய அம்சமாகும். வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள உற்பத்தித் தடையானது இலங்கையின் கடலக ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் கணிசமான தொகையை இழக்கவைத்துள்ளதுடன் இறக்குமதிக்கான செலவீனத்தை உயர்வடையச்செய்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

எனவே வளங்கள் நிறைந்து காணப்படுகின்றபோதிலும் அவை முழுமையாக பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அரிதாகவே உள்ளன. வடக்கு, கிழக்கு பொருளாதாரத் தடைகளும் கடல்வலயச் சட்டங்களும் நீக்கப்பட்டு இப் பிரதேசம் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படும்வரை ஏற்றுமதி - இறக்குமதி போக்குகள் தொடர்ந்தும் பாதகமான தாகவே இருந்து வரும் என்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## உசாத்துணை நூல்கள்


1. தர்மரத்தின, ரீ. ஏ. (1992) ''இலங்கையில் மீன் வளங்களின் உச்சமட்டப் பயன்பாடு'' பொருளியல் நோக்கு மக்கள் வங்கி அக். / நவ. / டிசம்பர், 1992, மலர் 18 இதழ்கள் 7 / 8 / 9.

2 ஹெல்டி, அல்விஸ் (1980) : இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழில் 70 களிலும் 80 களிலும் அதன் போக்குகள். பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி மலர் 6, இதழ் 6,7

3. இலங்கை மத்திய வங்கி (1992) : ஆண்டறிக்கை மத்திய வங்கி, கொழும்பு

4. Ministry of Fisheres : National Fisheres Development Plan. 1990 1994 Ministry of Fisheres & Aqualic Resources, Sri Lanka.

# தென்கிழக்காசியாவும் நெல் உற்பத்தியும்

இ. தமிழரசி
*1994 — வர்த்தகம்*

தென்கிழக்காசியா உலகின் சனச் செறிவு அதிகமாக காணப்படுகின்ற ஒரு பிரதேசமாக காணப்பட்டாலும் விவசாயத் துறையில் வளர்ச்சிபெற்ற பூரணமான தன்னிறைவு காணவென முயற்சித்துக் கொண்டிருப்பதும் இப் பிரதேசமே ஆகும். அந்த நோக்கில் இன்று நெல் உற்பத்தியிலே முதன்மை பெற்று விளங்குகிறது. அதனால் தான் கீழைத்தேச விவசாயமுறை என்றதும் இப்பிரதேசமே அடையாளம் காணப்படுகின்றது. பர்மா, தாய்லாந்து மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற நாடுகள் இதில் அடக்கப்படுகிறன.

இன்று நெல்லானது உலகில் 2/3 மக்களின் பிரதான உணவாகும். இதில் 90% நெல் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்பிரதேசத்திலே நெல்லினை முக்கியமாகக் கொண்ட கலாச்சார பாரம்பரியம் என்ற ஒன்றே அடிப்படையாக உள்ளது. நெற் பயிர்ச் செய்கையின் பிரதான முக்கிய பண்பானது அடர்த்தி மிக்க சனத்தொகையும் உள்ளடங்கும். இதனைப்பொறுத்தமட்டில் இங்கு காலநிலைத் தன்மைகள் ஏதுவாக இருப்பதோடு மேற்குறிப்பிட்ட பண்பும் மிகவும் பொருத்தமாக அமைகிறது. விவசாய நிலங்களை நம்பி மிக அதிகமானோர் தங்கி வாழ்வதாலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் நெல் அதிகமக்களுக்கு போஷிக்க கூடியதாக உள்ளது. நெல்லானது மொன்சூன் சமவெளிப் பிரதேசங்களிலேயே பொதுவாகக் காணப்படுகின்றது. நெற் பயிர்ச் செய்கையைப் பொறுத்தவரையில் வளரும் காலத்தில் 21° – 27°c வரையான சராசரி வெப்பநிலை, வருடாந்தம் 1875 mm. மழைவீழ்ச்சி, தட்டையான நிலப்பரப்பு, நீரை நீண்ட காலம் பற்றி வைத்திருக்கக்கூடிய வண்டல் மண், அதிக தொழிலாளர்கள் என்பன அமைந்திருக்கவேண்டியது அவசியமாகும். இத்தன்மைகளைப் பெற்று ''நெற் கலாச்சாரம்'' உடைய பிரதேசமாக தென் கிழக்காசிய நாடுகள் விளங்குகின்றன.

## தென் கிழக்காசியாவில் நாடுகள் ரீதியான நெற்பயிர்ச் செய்கை

### I) இந்தோனேசியா

தென் கிழக்காசியாவின் நெல் உற்பத்தியில் இந்தோனேசியா குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றது. மொத்த ஊழியர் படையில் 32.2% மானோர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். 1969-1974 இல் மேற்கொள்ளப்பட்ட ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதி நடவடிக்கையாக நீர்ப்பாசன சிரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கை காரணமாக நெல் உற்பத்தி செய்யக்கூடிய பரப்பளவு அதிகரிக்கப்பட்டது. 1970 களின் பின் பாரம்பரிய விவசாய நடவடிக்கை ஓரளவு நவீனமயமாக்கப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. பின்னர் மேலும் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு 1980 களில் உலக மொத்த நெல் உற்பத்தியில் 8.2% இந்தோனேசியாவே உற்பத்தி செய்தது. இன்று இதன் நெற்செய்கையை நோக்குகையில் அமெரிக்காவின் கோதுமைப் பிரதேசத்துடன் ஒப்பிடும்போது ஒரு ஏக்கருக்கு நான்கு அல்லது ஐந்து மடங்கு விளைச்சல் அதிகமாக உள்ளது.

### II) பிலிப்பைன்ஸ்

இங்கு மொத்த தொழிலாளரில் 28.6% மானோர் நேரடியாகவே நெல் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். காலநிலைப் பாதிப்பும்

அடிக்கடி ஏற்படும் ''தைபூன்'' எனப் படும் (Typoon) சூறாவளியினால் வெள்ளப்பெருக்கு, பயிரழிவும் ஏற்படுவதுடன் மண்ணரிப்பு ஏற்படுகின்றமை இங்கு நெற் பயிர்ச்செய்கை எதிர்நோக்கும் பிரதான பிரச்சனையாகும். நெல் உற்பத்தியில் தன்னிறைவடையாதமையால் வருடாவருடம் அரிசியை இறக்குமதி செய்கின்றனர். வருடாந்தம் 3.9 மில்லியன் தொன் அரிசி தேவைப்படுகின்றமையால் இவ் இலக்கை அடைவதற்காக விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்க பல முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. விவசாய மானியங்கள் வழங்குதல், கடன் வழங்குதல் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பின்னர் தொடர்ந்து வந்த காலகட்ட பகுதியில் 1975 இல் ஏற்படுத்தப்பட்ட பத்தாண்டு நீர்பாசனத்திட்டத்தை தொடர்ந்து 2.3 மில்லியன் ஹெக்டேரால் நெற்செய்கை நிலப்பரப்பு அதிகரிக்கப்பட்டு அதனூடே உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டது. இதனைத் தவிர 1960 ஆம் ஆண்டு பிலிப்பைன்தீவில் சர்வதேசநெல் ஆராய்ச்சி நிலையத்தினை உருவாக்கி நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கென களைகொல்லி, உரவசதி, நீர்பாசன வசதி, கடன் வசதி என்பவற்றை வழங்கி உற்பத்தியை அதிகரித்தது.

## III) தாய்லாந்து

விவசாயப் பொருளாதாரத்தை கொண்டுள்ள நாடாகிய தாய்லாந்தில் நெல் உற்பத்தி நடவடிக்கைகளில் 70% பாரம்பரியமான முறையிலேயே நடைபெற்று வருகின்றது. 27.1% தொழிலாளர் நெல் உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். 1969-71 இல் 134, 750,000 மெற்றிக் தொன்னாக இருந்த நெல் உற்பத்தி 1978 இல் 17000,000 மெற்றிக் தொன்னாகவும் 1981 இல் 17774,000 மெற்றிக் தொன்னாகவும் அதிகரித்தது. இன்று உலகமொத்த நெல் உற்பத்தியில் 4.2% தாய்லாந்து உற்பத்தி செய்கின்றது. தாய்லாந்தின் மொத்த தேசிய வருமானத்தில் 24% நெற்செய்கை மூலம் பெறப்படுகின்றது

## IV) மலேசியா

மலேசியாவில் 55% மான தொழிலாளர்கள் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இங்கு 2/3 வீதமான நெற்செய்கை நிலங்கள் 5 ஏக்கரிலும் சிறியன ஆகும். 1974 இல் 1.5 மில்லியன் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டது. இங்கு றப்பர் உற்பத்தியே பிரதான பயிற்செய்கையாக இருப்பதனால் நெல் உற்பத்தி இரண்டாம் பட்ச நடவடிக்கையே ஆகும். 1978 இல் 1590 000 மெற்றிக் தொன்னும் 1981 இல் 2070 000 மெற்றிக் தொன்னும் 1982 இல் 2062000 மெற்றிக் தொன்னும் உற்பத்திசெய்யப்பட்டு 1982 இல் உலக மொத்த உற்பத்தியில் 0.5% மட்டுமே மலேசியா உற்பத்தி செய்தது. ஏனைய தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது நெல் உற்பத்தியில் மலேசியாவின் பங்களிப்பு மிக குறைவாகவே காணப்படுகின்றது.

## V) பர்மா

பர்மாவில் ஈறாவடிக்கழிமுகம், சல்வின் ஆற்றுப்பகுதி, அரகான், ரெனசிறிம், கரையோரப்பிரதேசங்கள் மற்றும் தாழ்நிலப் பள்ளத்தாக்குகளிலும் நெல் பயிரிடப்படுகின்றது. இரண்டாம் உலகயுத்த காலத்திற்கு முன் நெல் ஏற்றுமதி செய்யும் முதனிலை நாடாக பர்மாவே விளங்கியது. அக்காலத்தில் வருட உற்பத்தி 6 — 8 மில்லியன் தொன்னாக காணப்பட்டது. இதில் 3 மில்லியன் தொன் வருடாந்தம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆயினும் இரண்டாம் உலக யுத்தத்தில் பர்மாவின் பொருளாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டதால் அக்காலத்தில் இருந்து 1964 ஆம் ஆண்டு வரை பர்மா நெல் ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை 1972 இற்கு பின் நெல் உற்பத்தி மீண்டும் அதிகரித்ததை தொடர்ந்து தற்போது மீண்டும் அரிசி ஏற்றுமதியில் ஈடுபடுகின்றது. நெல் உற்பத்தியை அதிகரிக்க செய்ய பர்மா அரசு உத்தரவாத விலையினை 50% ஆல் உயர்த்தியது.

**1982** இல் உலக மொத்த நெல் உற்பத்தியில் **3.3%**ஐ பர்மா வழங்கி உள்ளது. இங்கு மியூ பள்ளத்தாக்கில் ஏற்படுத்தப்பட்ட 'மியூ பள்ளத்தாக்கு நீர்ப்பாசனத் திட்டம்' மூலம் சிறந்த நீர்ப்பாசன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் புதிய நெற்செய்கைப் பிரதேசங்கள் உருவாகின. அத்துடன் உற்பத்திசெய்த நெல்லை கிராமப்புற விவசாயிகள் சிரமமின்றி விற்பனை செய்ய 'விவசாய சந்தைப்படுத்தல் சபை' உருவாக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் யாவும் பர்மாவின் நெல் உற்பத்தியை மேலும் மேலும் அதிகரிக்க வழி வகுத்துள்ளன.

இவ்வாறாக நாடுகள் ரீதியான நெல் உற்பத்தியை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உலகிலே 5%மான சனத்தொகை 50% பகுதிகளிலும், 50% சனத்தொகை 5% மான பகுதிகளிலும் வாழுகின்றனர். மேலும் இவ் 50% சனத்தொகையில் பெரும்பான்மையினர் வாழும் தென் கிழக்காசிய நாடுகளில் உலக நெல் உற்பத்தியிலே சிறந்த ஒரு இடம் வகிப்பதற்கு இயற்கையின் கொடையும், காலநிலையும், மனித வளமும் ஒரு அத்திவாரமாக தொழிற்படுகின்றன. இந்நாடுகள் தமக்கிடையே ஏற்படுத்திய ''ஆசியான்'' என்ற அமைப்பும் இவர்களுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு ஊக்குவிப்பு வழங்குகின்றது. இவ்வாறான சிறப்புகள் பெற்றமைந்த இவ் நெற்செய்கை வலயங்கள் ''தென்கிழக்காசியாவின் நெற்களஞ்சியம்'' என அழைக்கப்படுகிறது.

**திரவச் சொத்துக்கள்**

காசாக உடனடியாக தேறக்கூடிய சொத்துக்கள் திரவச் சொத்துக்கள் எனப்படும். நடைமுறைச் சொத்தில் இருப்பு தவிர்ந்த ஏனையவை உடனடியாக தேறக்கூடியபடியால் அவை திரவ சொத்துக்களாகும்.

**இதுவரை தேறிய பெறுமதி** Since Realised Value

இது ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் விற்பனை செய்வதனால் பெறப்பட்ட விலையில் இருந்து விற்பனை செய்வதற்காக நேரடியாக ஏற்படும் செலவீனங்களை கழிக்கவரும் தொகையாகும்.

**மாற்றல் கிரயம்**

கொள்வனவு கிரயத்தினை விட மேலதிகமாக இருப்புக்களை தற்போதுள்ள உருவிலும் இடத்திலும் கொண்டுவந்து சேர்க்க ஆன பிறசெலவுகள் மாற்றல் கிரயம் எனப்படும்.

வணிகவாணி வாழ்க என்று வாழ்த்துகின்றோம்.

கறுப்பு - வெள்ளை, கலர்ப்படம் பிடித்தல், அவசர தேவைகளுக்கும்
சிறந்த முறையில் படம் பிடிக்க சிறந்த படப்பிடிப்பாளர்

# சோதி கலர் போட்டோ

ஏழாலை மேற்கு, ஏழாலை.

வணிகவாணி சஞ்சிகையே
வளமுடன் நீ வளர
எமது நல்லாசிகள்

# டயமன் ரேடர்ஸ்

சுன்னாகம்.

மில்க்வைற்

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி
பிறவும் தம்போற் செயின்"

(வணிகம் செய்வோர் பிறர்பொருளை தம்பொருள்போற் கருதி
வணிகம் செய்யின் அதுவே சிறந்த வணிகமாம்)

காலம் பெறுமதியானது

துரித சலவைக்கும் சிக்கனத்திற்கும்
சீருடைகளின் வெண்மைக்கும்

மில்க்வைற் சலவைப் பவுடர்

50 கிராம் பக்கற் விலை ரூபா 6/- மட்டுமே

100 வெற்றுப் பக்கற்றுகளைக் கொடுத்து கைத்தறியில் தயாரித்த
அழகிய கைலேஞ்சி ஒன்றை பரிசாகப் பெறுங்கள்.

25 வெற்றுப் பக்கற்றுகளைக் கொடுத்து ஒரு அப்பியாசக் கொப்பியை
பெற்றுக் கொள்ளுங்கள்.

# மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவம்

**செல்வி நா. வேலுப்பிள்ளை B. Com.**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,
யாழ். மாவட்டம்.

வளர்முக நாடுகளில் ஒன்றான இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியானது பல்வேறு துறைகளான விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் போன்றவற்றை உள்ளடக்கியதாக அண்மைக் காலத்தில் ஏறுநடை போடுவதை நாம் அறிவோம். துரித அபிவிருத்தியின் அச்சாணியாக இத்துறைகளை மிளிர வைப்பது இலங்கையின் கல்வி அமைப்பாகும் என்றால் மிகையாகாது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றவாறு கல்வி வேலைத் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டால்தான் நீண்டகால வளர்ச்சிப் போக்கில் இலக்கை எய்த முடியும்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் அமைந்த கல்வித்திட்டங்கள் பரீட்சையை மையமாகக்கொண்டு சான்றிதழ் பெறும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும். இதனாலேயே வேலையில்லாப் பிரச்சினை ஏற்பட்டு, அதனை ஒட்டிய பல்வேறுபட்ட பிரச்சினைகள் நாட்டில் தோன்றின. 1970இல் இங்கிலாந்து ஸஸெக்ஸ் கழகத்தின் பொருளியல்துறைப் பேராசிரியர் டட்லி சியேஸ் என்பவரின் அறிக்கையில் ''இலங்கையில் பாடசாலைக் கல்வி அதிகரிப்புக்கேற்ப தொழில் இன்மையும் கூடிச்செல்கின்றது'' என்று கூறியதைக் காணலாம். எனவேதான் நாட்டில் ஏற்படுத்தப்படுகின்ற செயற்திட்ட மாற்றங்களுக்கேற்ப புதிய கல்வி முறையைப் புகுத்த வேண்டியது அவசியமாகும்.

20 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொழில் நுட்பம் சார்ந்த திட்டங்களே இலங்கையில் பெரும் பங்கு வகிக்கின்றன. இதனால்தான் 1981ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இதன்மூலம் மாணவர்களைக் கற்றல் உலகிலிருந்து இலகுவாக வேலை உலகிற்கு செல்லக் கூடியதும், திறன்களுக்கேற்ப கல்வியை விருத்தி செய்து கொள்ளக்கூடியதுமான தொழில் நுட்பக் கல்வி முன்கொணரப்பட்டது.

தொழில்நுட்பக் கல்வியானது நாட்டின் அபிவிருத்திக்குப் பொருத்தமான அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றைக் கொண்ட ஒரு அணியினரை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இவ் விதமான அணியினராலேயே நாட்டின் பொருளாதார வளங்களை உபயோகித்து உச்சப்பயனை பெற்றுக் கொள்ளமுடியும். தொழில் நுட்பக்கல்வி என்பதனை இனங்காணும் போது விவசாயம், வியாபார நடவடிக்கைகள், கைத்தொழில்கள் ஆகியவற்றுக்குத் தேவையான பயிற்சியினைப் பெற்றுக் கொடுக்கும் கல்விமுறை எனக் கூறலாம். விரிவாக நோக்கின் தொழில்நுட்ப, விஞ்ஞான, விவசாய, வணிக, கட்டுமான தொழில்சார் கல்விகள் இடம் பெறுவதுடன், நீர்க்குழாய் பொருத்தும்வேலை, தச்சுவேலை, சலவைத்தொழில், அச்சுத் தொழில், கணக்குவைத்தல், கட்டிட நிர்மாணக்கலை, பொறியியல் வரைபடங்கள் முதலிய தொழில் நுட்பக் கல்விகள் பல்வேறு மட்டங்களிலும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில்கூட வணிகத்துறை சார்ந்த பாடங்

கள் கல்வித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. 1891 இல் நடைபெற இருந்த கேம்பிரிட்ஜ் உள்நாட்டுத் தேர்வுகளுக்கான ஆயத்தப்படுத்தும் வகுப்பாகவே 1890 ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனை புனித பெனடிக் நிறுவனத்தில் வர்த்தகக் கல்வி ஆரம்பிக்கப் பட்டது. இலங்கையில் தொழில் நுட்பக் கல்வி கற்கக்கூடிய முறையில் மோர்கன் குழு செய்த சிபார்சுப்படி 1893 இல் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. பிற்காலத்தில் அரச திணைக்களங் களுக்குத் தேவையான தொழில்நுட்பவிய லாளர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமாக இது மாறியது. எமது நாட்டின் அபிவிருத்தித் தேவை கருதி 1908 ஆம் ஆண்டு மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் மாலைவேளை சுருக்கெழுத்து, தட்டெழுத்து வகுப்புக்களு டன் வர்த்தகக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. 1943 இல் வேலை செய்வோருக்கான கணக் கறிவு மாலைநேர வகுப்புகள் இத்தொழில் நுட்பக்கல்லூரியில் அபிவிருத்தி நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. 1951இல் உயர் தொழில் மதிப்பீட்டு நெறியும் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான ஆளணியினரைப் பயிற்றுவிக் கும் நோக்கமாக பல்கலைக்கழகங்களும் வர்த்தகம், தொழில் நிர்வாகம் முதலிய நெறிகளை நடாத்த முனைந்தன. 1960 ஆம் ஆண்டில் வித்தியோதயா பல் கலைக்கழகத்தில் தொழில் நிர்வாகம், பொது நிர்வாகம் முதலிய பட்ட வகுப்புக் கள் தொடங்கப்பட்டது.

1961 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் (பேராதனை) வர்த்தகப்பட்ட நெறியைத் தொடக்கிவைத்தது. இதனால் தொழில் நிர்வாகம், வர்த்தகம் முதலிய பட்டதாரி கள் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங் காளிகள் என்பதில் ஐயமில்லை என்ற அளவிற்குபங்காற்றியது.

இலங்கையின் பொருளாதார அபி விருத்திக்கு வித்திடும் வகையில் எமது நாட் டில் அமுல்செய்யப்படும் கலைத்திட்டத் தினை பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொலைக் கல்வி நிறுவனங்கள் வாயிலாக அமுல் நடத் தப்படுவதை நாம் அறிவோம். தொழில் நுட்பக் கல்வியானது பொதுக்கல்வி கற்கும் போதே மாணவர்களுக்கு புகட்டும் நோக்க மாக 1991 ஆம் ஆண்டிலிருந்து கனிஷ்ட தொழில்நுட்பக் கல்வியில் ஆரம்பித்து ஆண்டு 11 வரை அது விரிவுபட்டுச் செல் வதையும், பின் பட்டம்வரை இட்டுச்செல் லும் தொழில் தராதரப்பத்திரம், டிப்ளோமா ஆகிய பாடநெறிகள் பயில் வதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக் கப்பட்டுள்ளது. இதன்படி ஆண்டு 9 இல் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்வியானது விவசாயம், வர்த்தகம், மனைப் பொருளி யல், தொழில்நுட்பத்திறன் ஆகிய பிரிவு களை உள்ளடக்கியதைக் காணலாம் ''வாழ்க்கைக்கே கல்வி'' என்பதை மாண வர்கள் ஆரம்பத்திலேயே உணரக்கூடியதாக இக்கல்வி முறை அமைந்துள்ளது. உயர் கல்வியைத் தொடரும் மாணவர்களிலும் 10% மானவர்களே பல்கலைக்கழக அனுமதி யைப் பெறுவர். மிகுதியான மாணவர்களைத் கல்வியால் திசைகாணாது, வாழாவிருக் காது காப்பாற்றுவது தொழில்நுட்பக் கல்வி தான் என்றால் மிகையாகாது.

மனிதன் பொருளாதார வளமுடைய வனாக இருக்கவேண்டுமாயின் தொழில் ஒன்றைத் தேடிக்கொள்ள வேண்டியவனா கின்றான். தொழிலைப் பெறுவதற்கான அறிவு, அடிப்படைச் செய்முறைத் திறன், தொழில்பற்றிய மனப்பாங்கு ஆகியன தொழில்நுட்பக் கல்வியினூடாக பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இலங்கை யில் தற்போது தொழில்சார் கல்வியையும், மாணவர்கள் பெறக்கூடியதாக நுண்கலைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்விக் கல் லூரிகள், இலங்கை வரையறுக்கப்பட்ட கணக்காளர் நிறுவனங்கள், உயர் தொழில் நுட்பக் கல்லூரிகள், இலங்கை விவசாயப் பயிற்சிப் பாடசாலைகள், தேசிய கல்வி நிறுவனம் போன்ற அமைப்புக்களும், பல்கலைக்கழகங்களும் தொழில்வாய்ப் பிற்கு ஏற்ற துறையில் மாணவர்களை உருவாக்குகின்றன. இதன் மூலம் எமது

நாட்டின் வேலையில்லாப் பிரச்சினை நீக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரம் வளம் மிக்கதாக மிளிரும் என்பதில் ஐயமில்லை. இதனைப் பெற்றோரும் மற்றோரும் உணர்ந்து தமது பிள்ளைகளின் ஆற்றலுக்கேற்ற தொழில்நுட்பக் கல்வியை வழங்க ஆவன செய்தல் வர்த்தக உலகில் இன்றியமையாத முக்கியத்துவமாகும்.

''கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலையுனக்கில்லை ஒப்புக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ''
என்பதிலிருந்தும்
''உழவுக்கும், தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்''

என்பதிலிருந்தும் எமது ஆற்றலுக்கும் விருப்புக்கும் உரிய தொழிலைக் கற்று பொருளாதார அபிவிருத்தியில் எம்மையும் இணைத்துக் கொள்வோம்.

## உசாத்துணை நூல்


1. 1969 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நூற்றாண்டு விழா மலர்.
2. தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வியின் வரலாற்று அடிப்படை.
3. யாழ்ப்பாண கல்வித்திணைக்களத்தின் தொழில் நுட்பப் பிரிவு வெளியீடு, தொழில்நுட்பம்.


### பொருள் நிலைப்படுத்தல்

துண்டமாக்கப்பட்ட சந்தைத் தொகுதியில் துண்டம் ஒன்றின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் குறிப்பிட்ட பொருள் உற்பத்தியினை திட்டமிடுவதும் அதற்கான சந்தைக் கலவையினை தீர்மானிப்பதும் பொருள் நிலைப்படுத்தல் எனப்படும்.

★

### சுங்கப் பதிவேடுகள்

சுங்க திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் பதிவு, புத்தகம், குறிப்புக்கள், ஆவணங்கள் யாவும் சுங்கப்பதிவேடுகள் எனப்படும். வெளிநாட்டு வியாபாரத்தரவுகள் வரிகள் உள்ளிட்ட எல்லாவற்றையும் பதிந்து வைத்திருக்கும் ஏடுகள் ஆகும்.

● தமிழ், ஆங்கில தட்டச்சு, றோணியோ வேலைகட்கும்
● தட்டச்சு, றோணியோ, கல்குலேற்றர், அடிங் மெசின்
போன்றன திருத்துவதற்கும்

நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

## மெக்கானோ எலெக்ரோ மெக்கானிக்ஸ்

உடுவில் கிழக்கு, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

---

வணிகவாணி சிறப்புறமலர எமது வாழ்த்துக்கள்

## நிரோ கல்வி நிறுவனம்

சுன்னாகம்

- ஆண்டு 6 — 11 வரை சகலபாடங்களிற்கும் திறமையும், அனுபவமும் மிக்க ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.
- 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வகுப்புக்களும் நடைபெறுகின்றன

---

வணிகவாணி தொடர்ந்து வெளிவர

## எமது வாழ்த்துக்கள்

# SUNTHARAM HARDWARE STORES

30, K. K. S. ROAD, CHUNNAKAM.

# விஞ்ஞானத்தில் ஒப்புமை முறை

நளாயினி சண்முகசேகரம்பிள்ளை
ஆண்டு - 13 வர்த்தகபிரிவு.

விஞ்ஞானத்தில் கையாளப்படும் முறைகளில் ஒப்புமையும் ஒன்றாகும். கருதுகோளைப் பெறவும் வடிவமைக்கவும் ஏற்ற முறைகளில் ஒப்புமையும் ஒன்றாக அமைகிறது. ரதபோட், டார்வின், ஹூயிபாஸ்ரர், பரடே போன்ற விஞ்ஞானிகள் தமது ஆய்வுகளுக்கு இம்முறையைப் பயன்படுத்தி உள்ளனர். ரதபோட் தனது அணு பற்றிய ஆய்வில் அணுவின் உள்ளார்ந்த அணு அமைப்பையும் இயக்கத்தையும் சூரிய குடும்பத்தின் இயக்கத்தோடு ஒப்புமை செய்து விளக்கியமை பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. மேலும் கலிலியோ, நியூட்டன் போன்றவர்களின் விஞ்ஞான கருதுகோள் ஆக்கத்தில் இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளதை தோமஸ் எடிசனின் ஆய்வுகளிலிருந்து அறிந்து கொள்ளமுடிகிறது.

ஆரம்பகாலத்தில் அரிஸ்ரோட்டில் ஒப்புமை அனுமான முறையைக் கையாண்டிருந்தாலும் மில் எனும் முறையியலாளரின் காலத்தின் பின்பே ஒப்புமை அனுமானம் ஒப்புமை முறையாக திருத்தியமைக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் நியாயத் தொடை வடிவத்தில் இது காணப்பட்டமையால் பல ஒப்புமைப் போலிகள் ஏற்பட இதுவே காரணம் என (நியாயத்தொடை வடிவம்) மில் சுட்டிக்காட்டினார் மில்லின் கருத்துப்படி ஒரு பொருளுக்கு அல்லது நிகழ்ச்சிக்கு இரு வகையான பண்புகள் உள்ளன என்றும் அவை இரண்டும் வகுத்து ஒப்பு நோக்கப்படுவதன் மூலம் திருப்திகரமான ஒப்புமை முடிவைப் பெறலாம் என்பதாகும்.

உதாரணம்:

பூமி, செவ்வாய் எனும் இரு கோள்கள் பின்வரும் சில பண்புகளில் ஒருமைப்பாடு உடையதைக் கொண்டு,

இரண்டும் உருண்டை வடிவமானவை
இரண்டும் நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றும்
இரண்டும் உபகோள்களைக் கொண்டவை
இரண்டும் ஒளிராப் பொருட்கள்

என்பவற்றைக் கொண்டு பூமியில் உயிரினங்கள் வாழ்வதாக அறிந்த போது செவ்வாயிலும் உயிரினங்கள் வாழ்கின்றன என அனுமானித்தலாகும்.

திருப்திகரமான ஒப்புமை முடிவை உட்கிடைப் பண்புகள், உட்குறிப்பு பண்புகள் எனப்பிரித்து விளக்கினார். இதனை அடியொட்டி ஒப்புமை முறையை பின்வருமாறு அமைத்து கையாள்கிறார்கள்.

1. விதி ஒப்புமை
2. மறை ஒப்புமை
3, விதியோ மறையோ ஒப்புமை (நடுநிலை ஒப்புமை)

இரு பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட சில பண்புகளில் ஒத்துள்ளமையைக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஓர் ஒப்புமை முறையே விதி ஒப்புமையாகும்.

உதாரணம்:

A எனும் பொருளில் P, O, R, S எனும் பண்பு உண்டு.
B எனும் பொருளிலும் P, O, R, S எனும் பண்பு உண்டு.
A யில் X எனும் பண்பு உண்டு.
எனவே B யில் X எனும் பண்பு உண்டு.

மறைஒப்புமை என்பது இரு பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட சில பண்புகளில் வேறுபடுவதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஓர் ஒப்புமை ஆகும்.

உதாரணம்:

A எனும் பொருளில் P,O , R, S எனும் பண்பு உண்டு.
B எனும் பொருளில் P, O, R, S எனும் பண்பு இல்லை.
A எனும் பொருளில் X எனும் பண்பு உண்டு.
எனவே B எனும் பொருளில் X எனும் பண்பு இல்லை.

நடுநிலை ஒப்புமை என்பது இரு பொருட்களை ஒப்பிடும் போது அவ் ஒப்புமைக்கு அவசியமற்றதாக காணப்படும் ஒப்புமை பண்புகளே இதுவாகும்.

உதாரணம்:

ஒப்புமையின் மூலம் இரு பழங்கள் உண்ணத் தக்கவை எனும் முடிவினை அனுமானிப்பதற்கு ஒப்பிடப்படும் இரு பழங்களும் சிவப்பு நிறமானவை என்பது அவ் ஒப்புமைக்கு அவசியமற்றது.

மேலும் விஞ்ஞான ஆய்வில் ஒப்புமை முக்கியத்துவம் பெற்றதாக காணப்படுகிறது. விஞ்ஞான ஆய்வின் போது ஓர் அவதான முறையாக பயன்படுத்தப் படுகின்றது இது விஞ்ஞானமுறையின் உயிர்நாடியாகவும் மையப்பகுதியாகவும் விளங்கும் கருதுகோளை அளிக்கிறது. ஒப்புமை முறையானது விஞ்ஞான விதிகளையும் கொள்கைகளையும் விளக்கி காட்டுவதற்கு உதவுகிறது.

உதாரணமாக-

விஞ்ஞானிகள் அணுக் கொள்கையை ஞாயிற்றுத் தொகுதியுடன் ஒப்பிட்டு விளக்கியமையைக் கூறலாம்.

விஞ்ஞான ஆய்வுகளின்போது ஒரு அனுமான வழியாக ஒப்புமை பயன்படுகின்றது.

உதாரணமாக-

பூமியையும் செவ்வாயையும் ஒப்பிட்டு செவ்வாயில் உயிரினம் வாழ்கிறது எனப் பெறப்பட்ட அனுமானத்தைக் கூறலாம்.

புதிய கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ள ஒப்புமை உதவுகிறது. இவ்வாறு விஞ்ஞானத்தில் ஒப்புமையின் பயன்பாடு பலவாக காணப்படுகிறது.

அடுத்து விஞ்ஞானத்தில் ஒரு ஒப்புமை முறையானது வலிதானதாக அமைய வேண்டுமெனின் பின்வரும் நிபந்தனைகளை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

1. ஒப்புமையில் கூறப்படும் பண்புகள் ஒவ்வொன்றையும் பகுத்தாராயும் போது அவை ஒவ்வொன்றும் ஊகித்து பெறப்பட்ட முடிவுடன் இன்றியமையாத முறையில் தொடர்புபட்டதாக இருத்தல் வேண்டும்.

2. ஒப்பிடப்படும் பொருட்கள் பற்றிய அறிவு ஆழமானதாக இருத்தல் வேண்டும். உதாரணமாக இரு உலோகங்களை ஒப்பிடுவதற்குரிய ஆழமான அறிவு ஓர் இரசாயன அறிஞனுக்கே உண்டு.

3. ஒப்பிடப்படும் பொருட்கள் கிட்டிய இனங்களாக இருப்பின் வலிதான முடிவைப் பெறுவதற்கு அதிக வாய்ப்புண்டு. உதாரணமாக மனிதனைத் தாவரத்தோடு ஒப்பிடுவதைக் காட்டிலும் மிருகத்தோடு ஒப்பிடுவதன் மூலம் வலிதான முடிவைப் பெற அதிக வாய்ப்புண்டு.

இவ்வாறு ஒப்புமைமுறை விஞ்ஞானத்திற்கு பலவாறு உதவுகின்றது. எனினும் இவ் ஒப்புமை முறையில் சில வழுக்களும் காணப்படுகின்றன. அதாவது ஒப்புமைப் போலிகள். இவை இருவகைப்படும்.

1. மொழி காரணமாக ஏற்படும் ஒப்புமைப் போலி.

2. ஒப்பிடப்படும் பொருட்களின் இன்றியமையும் இன்றியமையாப் பண்பு பற்றிய தெளிவின்மையால் ஏற்படும் ஒப்புமைப் போலி.

1. மொழி காரணமாக ஏற்படும் ஒப்புமைப் போலி.

இப் போலியில் முக்கியமானது உவமேயத்தைக் கொண்ட மொழிநடையைப் பின்பற்றுவதால் ஏற்படுவதாதாகும். இது உவமேயத்தின் காரணமாக ஏற்படும் ஒப்புமைப் போலி எனப்படும்.

உதாரணம் :

ஒரு நாட்டின் தலைநகரத்தை ஒரு மனிதனின் இதயத்திற்கு ஒப்பிடுவது இப் போலியாகும்

இவ் ஒப்புமையின் மூலம் நாம் புதிதாக எதனையும் அனுமானிப்போமாயின் அது தவறானதாக அமையும். இவ் ஒப்புமையில் ஓர் உடலின் இதயம் அசாதாரணமாக மிகப் பெரிதாக வளர்வது உடல் வளத்தினை பாதிக்கும் என்பதைக் கொண்டு ஒப்புமையின் மூலம் ஒரு நாட்டின் தலைநகரம் மிகப் பெரிதாக வளர்வது அந்நாட்டின் வளத்தினைப் பாதிக்கும் என அனுமானித்தல் தவறாகும்.

2. ஒப்பிடப்படும் பொருட்களின் இன்றியமையும் இன்றியமையாப் பண்பு பற்றிய தெளிவின்மையால் ஏற்படும் போலி.

உதாரணம் :

சுவாச உறுப்புக்களின் ஒற்றுமையை நோக்காது சுறா, திமிங்கிலம் எனும் இரு உயிரினங்கள் சில பண்புகளில் ஒத்துள்ளமையைக் கொண்டு சுறா நீரினுள் சுவாசிப்பதால் திமிங்கிலமும் நீரினுள் சுவாசிக்கும் என்பது இப்போலியாகும்.


வணிக வாணிக்கு வாழ்த்துகள்

✲ தமிழ், ஆங்கிலம், சிங்களம் மும்மொழிகளிலும்

✲ அச்சு வேலைகளை அழகுற செய்துகொள்ள

ஸ்ரீ காந்தா அச்சகம்

234 A, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.
(அச்சக வீதி)

# புராணங்கள் தென்னாட்டின் கருவூலங்கள்

ச. சுதர்சினி
*1993 — வர்த்தகம்*

புராணம் என்பது வாயு புரணத்தின் படி ''புராதன காலத்தில் இருந்து நடை முறையில் இருந்து வருவது'' என்ற பொருளைத் தருவதாக உள்ளது. புராதன கதைகள் எனவும் புராணங்களுக்கும் பொருள் கொள்ளலாம். இப்புராணங்கள் எப்படி அமையவேண்டும் என அமரகோசம் என்ற நிகண்டு சிறப்பாக கூறுகிறது. இப் புராணங்களில் சிறப்பாக காணப்படுவது பதினெண்புராணங்கள் ஆகும். இவை மகா புராணங்கள் எனவும் அழைக்கப்படுகிறது. இவற்றுள் வடமொழிப்புராணம், தனித் தமிழ் புராணம், தலபுராணம் எனப்பல எழுந்த நிலையில் இவை எல்லாம் நல்ல சிந்தனையின் பதிவேடுகளாக காணப் பட்டதோடு சர்க்கம் பிரதிசர்க்கம், வம்சம், வம்சாசாரம் எனும் பஞ்சலக்சணங்களை கொண்டு தோற்றம் பெற்றன. இத்துடன் பஞ்சலக்சண மரபுகள் மட்டுமன்றி புராணங்களுக்கு தசலட்சணங்களும் உண்டு. எனப் புராணங்கள் விளக்கம் அளிக்க முற் பட்டன. இவ்வாறு பல பண்புகளைக் கூறும் புராணங்கள் இந்துப் பண்பாட்டின் கருவூலங்களாக விளங்குகின்றன.

இந்து சமயம் பற்றிய. விளக்கத்திற்குத் துணைபுரியும் சமய இலக்கிய வரிசையில் வேதங்களை அடுத்து புராணங்களே முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பர். இந்து சமய மரபு உலகியல் படைப்பு, வழிபாட்டு முறைகள், தெய்வ இயல், கிரியை நடை முறைகள், தத்துவ விளக்கங்கள், சமய அறிவுரைகள், தானம், தவம், விரதம், பக்தி யோகம், விஷ்ணுவின் அவதார மகிமை, சிவனது பெருமை, இசை, நடனம், சோதிடம், வானவியல் கட்டடம், சிற்பம், விக்கிரகம், அரசியல் தர்மம், போன்ற பல்வேறு விடயங்களை அறியத்தருகின்ற புராணங்கள் இந்துப் பண்பாட்டின் கருவூலங்களாக கொள்ளப்பட்டதும் அவை பக்தி நெறியை வளம் படுத்துவதிலும் பெரும் பங்கு வகித்து வருகின்றன.

இந் நிலையில் பதினென் புராணங்கள் வட இந்தியாவில் தோன்றிய போதும் இவை தென்னாட்டிலேயே சிறப்புற்று விளங்கியது. இதனால் இவை தென்னாட்டின் கருவூலங்களாகின. வடமொழி புராணமரபை ஒட்டி எழுந்த புராணங்களில் தமிழில் எழுந்த புராணங்களாக பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் என்பன காணப் படுகின்றன. இப் பெரியபுராணம், கந்தபுராணம் சைவ சமயத்தின் இரு கண்களாக அமைந்து காணப்படுகின்றது. இவற்றுள் கந்தபுராணம் கடவுளின் தெய்வீகப் பெருமைகளைக் கூறுவது. திருமுருகன் சிவனின் ஓரம்சமே என்பதும் சிவனாகவே போற்றப்படவேண்டியவன் என்பதும் கந்தபுராணம் முழுவதிலும் நிறைந்துள்ளது. இந்துப் பண்பாடு சார்ந்த பல்வேறு விடையங்களை அறியத்தரும் கந்தபுராணக் கருத்துக்கள் தென்னாட்டு பாரம்பரியங்களை அறியத் தரும் கந்தபுராண கருத்துக்கள், தென்னாட்டு பாரம்பரியங்களை அடியொட்டி வந்த புராணக் கருத்துக்கள் தமிழ்நாட்டு வாழ்வை வளம்படுத்துவதிலும் இடம்பெறுகின்றன. கந்தபுராணம் தென்னாட்டின் கருவூலம் என கொள்ளப்பட்டது.

63 நாயன்மார்களின் வரலாறு கூறும் பெரியபுராணம் தமிழில் எழுந்த பெரும் காப்பியமாகும். மெய்யடியார்களின் வரலாறு, சிவசின்னங்களை எடுத்துக் கூவறுது, சைவநெறியின் மாண்புகளை சிறப்பாக எடுத்துக் கூறும் இப் புராணம், தென்னாட்டு மக்களிடையே சிறப்பாக படிக்கப் படும். தென்னாட்டு ஆலயங்களிலேயே சிறப்பாக அந் நாயன்மார்கள் வரலாறுகள் பொறிக்கப்பட்டு வந்தமை அவை

தென்னாட்டின் கருவூலங்கள் என கொள்ளப்பட்டன.

திருவிளையாடல் புராணத்திலே இறைவனின் 64 திருவிளையாடல்கள் சிறப்பிக்கப்பட்டமையும், இவை தென்னாட்டு கோயில்களிலே பெரிதும் சிற்பங்களாக காட்டப்பட்டுள்ளன. எனவே புராணங்கள் தென்னாட்டின் கருவூலங்கள் ஆகும்.

தென்னாட்டில் எழுந்த பக்திநெறியின் போது பக்தியை மக்களிடையே வளர்க்க இப் புராணக் கதைகள் பெரிதும் உதவின. புராணங்களைக் கொண்டு நாயன்மார்களின் தேவாரங்களும் திருமுறைகளும் தென்னாட்டிலேயே தோன்றி பக்திநெறியை வளர்த்தது. தென்னாட்டு இலக்கியங்கள் அனைத்திலும் புராண மரபின் தாக்கம் காணப்பட்டது. தென்னாட்டில் எழுச்சி பெற்ற கோபுரம், விமானம் முதலியவற்றில் உள்ள சிற்பங்கள் புராணங்கள் கூறும் தெய்வீக கதைகளை சித்தரிக்கின்றன. தென்னாட்டு இலக்கியம் கலை ஆகியவற்றில் புராணக் கதைகளை நீக்கிவிட்டால் அவற்றினை நினைவு செய்வது கடினம் எனக் கூறத்தக்க வகையில் அமைந்துவிட்டன இத்தகைய காரணங்களால் புராணங்கள் தென்னாட்டின் கருவூலங்கள் எனலாம்.

வடமொழி புராணத்தில் சிவனின் அட்டவீரட்ட செயல்கள் கூறப்படுகின்றன. ஆனால் இந்த அட்டவீரட்ட செயலுக்குரிய காலங்கள் தென்னாட்டிலேயே தோன்றின. இதனால் இவை தென்னாட்டின் கருவூலங்கள் எனப்படும்.

இவை தவிர விரதங்கள் எவ்வாறு கடைப்பிடிக்கப்படவேண்டும் எனக் கூறுவது தேவி புராணம். ஆயினும் இவ் விரதத்தின் சிறப்பையும், தவம், தீர்த்தம் என்பவற்றினையும் தமது வாழ்க்கையில் இன்றும் பெருமளவில் கடைப்பிடிக்கக் காணப்படுவது தென்னாட்டிலேயே, இத்துடன் சுந்தரரின் வாழ்க்கை வரலாறுகள் தஞ்சைப் பெருங் கோயிலே சித்தரிக்கப்பட்டுள்ளது. இது தென்னாட்டிலேயே காணப்படுவதால் தென்னாட்டின் கருவூலங்கள் எனப்பட்டது.

இந் நிலையில் இப்புராணங்கள் ஒரு கடவுளை மட்டும் ஏற்றிப் போற்றாது ஏனைய கடவுளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டமையை அறுவகை சமயமரபை எடுத்துக் காட்டியும் அக் கடவுளர்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டு இருப்பதைக் காட்டியும் இவ் இறை மெருமையில் சைவம்' வைணவத்தின் தொடர்பை அரிகர வடிவத்திலும் சைவம் சாக்தத்திற்குள்ள தொடர்பை அர்த்த நரீஸ்வர வடிவம் மூலம், சைவம் சௌரத்துக்கும் தொடர்பைக் காட்ட சிவனின் வலக்கண்ணாக சூரியன் காணப்படுவதும் அக்கினியின் சிறப்பைக் கூற சிவனின் நெற்றிக்கண்ணாக காணப் படுவது சிறப்பாகும். இச் சிறப்பினை காட்டும் வடிவங்கள் தென்னாட்டிலேயே வைத்து போற்றப்படுவதால் தென்னாட்டின் கருவூலங்கள் எனப்பட்டன,

உமாபதி சிவாச்சாரியாரின் கோயில் புராணம் 14ம் நூற்றாண்டளவில் தோன்றின. இது தலபுராணத்தின் மூத்தபுராணம் ஆகும். இவ்வாறு இப் புராணங்கள் பல வழிகளிலும் தென்னாட்டின் சிறப்புற்று விளங்கியமையால் புராணங்கள் தென்னாட்டின் கருவூலங்கள் எனக் கொள்ளப்பட்டன.

இலங்கை அரசாங்கம் காட்டு வளத்தை அதிகரிப்பதற்காக வனபரிபாலனத்திணைக்களத்தினூடாக ''ஐந்தாண்டுத் திட்டம்'' ஒன்றை நடைமுறைப்படுத்த உள்ளது.

# உளம் நிறைந்து உதவிய கரங்களுக்கு நன்றிகள்

| | |
|---|---|
| **பழைய மாணவர்கள்** | |
| S. சிவயோகம் | 200. 00 |
| தி. யாழினி | 200. 00 |
| சு. சுந்தரகுமார் | 100. 00 |
| பொ. கலாவதனி | 100. 00 |
| ம. சுமதி | 100. 00 |
| பொ. கலாரஜனி | 50. 00 |
| ந. ஜெயந்தி | 50. 00 |
| மு. சந்திரிக்கா | 50. 00 |
| சி. லோகேஸ் | 50. 00 |
| ந. பாமினி | 50. 00 |
| ப. நந்தினிதேவி | 45. 00 |
| சு. ஜெயலக்சுமி | 25. 00 |
| க. திலகவதி | 25. 00 |
| S. வசந்தி | 20. 00 |
| K. வனஜா | 10. 00 |
| **ஏனையோர்** | |
| நியூ லலிதா | 250. 00 |
| பாரத் ஸ்ரூடியோ | 100. 00 |
| ராதிகா நகைமாளிகை | 100. 00 |
| வீனாஸ் | 100. 00 |
| நியூ ஆனந்த ஜுவலர்ஸ் | 100. 00 |
| நித்தியா நகைமாளிகை | 100. 00 |
| E. S. K நகைத்தொழிற்சாலை | 50. 00 |
| வைரமாளிகை | 50. 00 |
| சோபிகா நகைமாளிகை | 50. 00 |
| ரூபி நகைமாளிகை | 50. 00 |
| மைதிலி நகைமாளிகை | 50. 00 |
| நியூ சாந்தா | 50. 00 |
| நியூ பாமா | 50. 00 |
| கதிரவன் பலசரக்கு மாளிகை | 50. 00 |
| யாழ்றேட் சென்ரர் | 50. 00 |
| சோதி தொழிலகம் | 50. 00 |
| ஜெமினி ஸ்ரோர்ஸ் | 50. 00 |
| குறூஸ் | 50. 00 |
| K சிவா | 50. 00 |
| M. தர்மலிங்கம் | 50. 00 |
| P. சின்னராசா | 50. 00 |
| T. கந்தையா | 50. 00 |
| S. வாசன் | 25. 00 |
| A. பவான் | 25. 00 |
| N. ஜெகா | 25. 00 |
| P. தயாநிதி | 25. 00 |
| எட்மன்ஸ் | 25. 00 |
| அன்கோ | 25. 00 |
| K. K. V. ஜுவலர்ஸ் | 25. 00 |
| நியூ ராதிகா | 10. 00 |

# நன்றி

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்ற வாக்கிற்கமைய நாம் எமது மன்றத்தின் சார்பில் வெளியிட்ட 'வணிக வாணியின்'' தோற்றத்திற்கு காரணமாக இருந்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பது எமது தலையாய கடமையாகும்.

இந்த வகையிலே வணிக மன்றத்தின் சார்பில் ஒரு சஞ்சிகையை அவசியம் வெளியிட வேண்டும் என்று எமக்கு அறிவுரைகளும் தந்து ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது மன்றத்தின் காப்பாளரும் பாடசாலையின் அதிபருமான திருமதி ஆ சிவஞானசுந்தரம் அவர்களுக்கும், எமது மன்றத்தை ஆரம்பிப்பதற்கு ஆலோசனைகளையும் மன்றத்தினூடாக இச்சஞ்சிகையை வெளியிட ஊக்கம் தந்த கணக்கியல் ஆசிரியர் திரு. K வரதன் அவர்களுக்கும், அல்லும்' பகலும் சிரமம் பாராது சஞ்சிகை உருவாக்கத்திற்கு பல வகையிலும் உதவிபுரிந்த மன்றத்தின் பொறுப்பாசிரியர் திரு கா சாந்திநாதன், பெரும் பொருளாளர் திருமதி ப பத்மநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அடுத்து ''வணிகவாணிக்கு'' இன்றைய வர்த்தக உலகிற்கு தேவையான பயனுள்ள கட்டுரைகளையும், ஆக்கங்களையும் தந்துதவிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், எமது மாணவர்களுக்கும், ஆசிச்செய்திகளை தந்துதவிய மதிப்பிற்குரிய பெரியோர்களுக்கும், எமது மன்றத்தில் நிதி நெருக்கடி ஏற்பட்ட போது உதவி கோரி வந்த எமக்கு நிதியினை அன்பளிப்புகள், விளம்பரங்கள் மூலம் அள்ளி வழங்கிய நிறுவன உரிமையாளர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், இந்நூலை பல இன்னல்கள் மத்தியிலும் அச்சேற்றித்தந்த அருண் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும், எமது புத்தகத்தின் முன் அட்டை வடிவமைப்பை உருவாக்கித்தந்த யூனியன் கல்லூரி ஆசிரியருக்கும், மறைமுகமாக பல உதவிகளை எமக்காற்றிய பாரதி பதிப்பகத்தாருக்கும், எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் வணிகவாணியின் பதிப்புக்கள் வெளிவர உங்கள் அனைவரது ஆதரவுகளையும் எமது மன்றத்தின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

இ. தமிழரசி
செயலாளர்.

வணிகவாணி சஞ்சிகைக்கு

எமது வாழ்த்துக்கள்

* **A/L** கலை வர்த்தக வகுப்புகள்,
* துரித மீட்டல் வினாவிடை வகுப்புகள்
* **O/L** பிரத்தியேக வகுப்புகள்

*நடைபெறுகின்றன*

# தான்சன் கல்வி நிலையம்

கே கே. எஸ். வீதி, — மருதனார்மடம்.

---

*"வணிகவாணி"*
*எல்லாத்திசைகளிலும் ஒளிபரப்ப*

எமது நல்வாழ்த்துக்கள்

* **A/L** கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகளும்
* 11 10, 9 ஆம் வகுப்புகளும்
* ஆண்டு 5 புலமைப்பரிசில் வகுப்புகளும்

*நடைபெறுகின்றன*

# வாணி கல்வி நிலையம்

கே. கே. எஸ். வீதி, — சுன்னாகம்.

வணிகவாணி வளமுடன் மலர

எமது வாழ்த்துக்கள்

# நிரு ரியூசன் சென்றர்

ஸ்ரேசன் றோட், — கோண்டாவில்.

**A/L 94, 95** கலை, வர்த்தக, கணித வகுப்புகளும்

ஆண்டு **4** முதல் **11** வரை சகல வகுப்புகளும் நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| பொருளியல் | உதயன் |
| வர்த்தகமும் நிதியும் | தேவா |
| கணக்கியல் | ஸ்ரீ |
| அளவையியல் | S. S. மனோகரன் |
| புவியியல் | வேலா |
| தமிழ் | குழந்தை |
| இந்துநாகரீகம் / இந்துசமயம் | சோதி |
| அரசியல் | நவம் |
| வரலாறு | பிள்ளை |
| நாடகமும் அரங்கியலும் | சத்தியா |
| தூயகணிதம் / பிரயோககணிதம் | கமலசிங்கம் |

விஞ்ஞானம் -
இரா. செல்வவடிவேல், சண்

கணிதம் -
இந்திரன், மகேந்திரன்
லோகேஸ்வரன், வாமதேவன்

தமிழ் -
பண்டிதர், சுந்தரலிங்கம்
யோகராணி

சமூகக்கல்வி -
வேலா, சிவனேசன், நிர்மலா

ஆங்கிலம் -
மகாலிங்கம், தர்மலிங்கம்,
ரமேஸ்

வர்த்தகம் -
நவம்

★ ஆண்டு 5 புலமைப் பரிசில் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

கணிதம் நயினை S. S. பிள்ளை

தமிழ் சுந்தரலிங்கம்

வணிக வாணியின்

அச்சமைப்பு

V

# அருண் பிறிண்டேர்ஸ்

15, 2 ஆம் ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.